21 JUL 1997

# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 480 | 1997 யூன் 27 | ரூபா 6.00

உள்ளே

■ தொழிற்சங்க உரிமைக்கு தொடுக்கப்பட்ட மிலேச்ச தாக்குதல் ........ 2
■ இராஜ்குமார் கைதாகி ஓராண்டு பூர்த்தி .... 3
■ பிரான்சுத் தேர்தலில் ஆளும் கூட்டரசாங்கத்துக்கு படுதோல்வி ........ 4
■ கம்லத் அலுகோசுவை சந்தியில் நிறுத்துவோம் ........ 6
■ "இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ........ 10
■ கொழும்பு புதிய மாநகர மேயர் முதலாளிகளின் சுபீட்சத்துக்கு சபதம் .13



# இனவாத யுத்த சங்காரம் தொடர்கிறது

தாண்டிக்குள இனவாத யுத்த நடவடிக்கைத் தளத்தின் மேல் விடுதலைப் புலிகள் ஜூன்10ம் திகதி நடாத்திய தாக்குதலில் 100க்கு மேற்பட்ட இராணுவத்தினர் இறந்தும் சுமார்400பேர் காயமடைந்தும் உள்ள அதே வேளையில் விடுதலைப் புலிகள் தரப்பில் அதிக அளவிலானோர் இறந்தும் காயமடைந்தும் உள்ளனர். இந்நிலையில் முதலாளித்துவ வர்க்க இனவாத ஊதுகுழலான ஐலன்ட் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"இலங்கையரான ஆயுதப் படையினராயினும் சரி தமிழ் பயங்கரவாதிகள் ஆயினும் சரி கொலையுண்டமை கவலைக்கு உரியதே. ஆயினும் மனஉறுதியுடன் இராணுவத் தாக்குதலைக் கொண்டு நடாத்துவதைத் தவிர அரசாங்கத்திடம் மாற்று வேலைத்திட்டம் எதுவுமே கிடையாது. இராணுவத் தாக்குதலை தற்காலிகமாக நிறுத்தினால் பயங்கரவாதிகளின் மூர்க்க தாக்குதல்களுக்கான தயாரிப்புக்கு இடமளிக்க நேரிடும் என்பதை நாம் அறிவோம். 1984ல் இருந்து நாம் கூறிவந்ததையே மீண்டும் கூறுவோம். பயங்கரவாதத்தை பூண்டோடழிக்கும் வரையாவது பயங்கரவாதிகளைக் கலக்கி ஐக்கிய இலங்கைக்கான சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைக்கு இழுத்துச் செல்லும் வரையாவது இந்த யுத்தத் தாக்குதல் இடைவிடாது நடாத்தப்பட வேண்டும்."

இதைத் தொடர்ந்து இந்தத் தலையங்கம் யுத்தத்தில் இறக்கும் படையினரது குடும்பத்தவருக்கு உதவுவதும் அனாதைகளாகும் அவர்களது பிள்ளைகளுக்கு நிவாரணங்கள் வழங்குவதும் முக்கியம் எனக் குறிப்பிடுகின்றது.

பயங்கரவாதத்திடம் இருந்து பிரதேசத்தை மீட்பதற்கான யுத்தத்தினைத் தொடர்ந்து நடாத்துவதற்காக தாண்டிக்குளம் தாக்குதலின் பின்னர் படையாட்களுக்கு உத்சாகமளிக்கும் பொருட்டு யுத்த முனைக்கு விரைந்த பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறியதாகச் சொல்லப்படுபவை பிற்போக்கில் தலைமூழ்கிப் போயுள்ளன. வழக்கமான முதலாளித்துவ கொடூரமும் மோசடியும் அந்த அறிக்கையில் வடிகின்றது.

பெருமளவிலான படையாட்களை இந்த இனவாத யுத்தத்துக்கு பலிகொடுப்பது தொடர்பான அதிருப்தி தீவிரமடைவதைத் தவிர்க்கும் ஒரு முதலைக் கண்ணீர் வடிப்பாகவே ரத்வத்தவின் கவலை அமைந்துள்ளது. இலங்கையின் படையாட்களில் கால் பங்கினர் யுத்த படையினைத் துறந்து ஓட்டமெடுத்தவர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்துவதைத் தவிர வேறு மாற்று வேலைத்திட்டம் எதையும் கொண்டிராத இந்நாட்டின் ஆளும் வர்க்கம் வருந்துவது, படையாட்களின் உயிர் இழப்புக்களைப் பற்றி அல்ல. தமது தலைவிதியைப் பற்றியேயாகும். எதுவிதமான தொழில் வாய்ப்புக்களும் இல்லாது செய்வதறியாது திகைக்கும் இளைஞர்களை




படையில் சேர்த்து யுத்தப் பகடைக் காய்களாக பாவித்து வருகின்றார்கள். தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தம், தொழிலாளர், ஒடுக்கப்படுவோரை அடக்கும் வர்க்க யுத்தத்தின் பக்கச்சார்பான பகடைக் காய்களாக இவர்களை மாற்றுவதாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தில் இருந்து தமிழ் மக்களை மீட்பதற்காகவே யுத்தம் நடைபெறுவதாக அரசாங்கமும் சமசமாஜ, ஸ்டாலினிச தலைமைகளும் மோசடியான விதத்தில் வாயடித்துக் கொள்கின்றன. உழைப்பையும் வளத்தையும் சுரண்ட ஏகாதிபத்திய பன்நாட்டுக் கம்பனிகளுக்கு வாய்ப்பான களம் அமைத்துக் கொடுக்கவே இவை எல்லாம். இவற்றில் தமிழ் மக்களை விடுவிப்பதோ அல்லது நாட்டின் இறைமையைப் பேணுவதோ எதுவும் கிடையாது.

வடக்கில் மட்டுமன்றி தெற்கிலும் இராணுவ, பொலிஸ், குண்டர் அடக்குமுறைகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை

(3ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தின் நாசங்களில் இருந்து தப்ப 50000 தமிழர்கள் வெளியேற்றம்

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியதன் பின்னர் அதன் நாசங்களில் இருந்து உயிர்தப்பிப் பிழைக்கும் முகமாக 50000க்கும் அதிகமான மக்கள் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத் தீவு, வவுனியா நோக்கி ஓடியுள்ளதாக அங்கிருந்து வெளியான தகவல்கள் குறிப்பிடுகின்றன. எனினும் இம்மக்களின் உண்மைத் தொகை இதைக்காட்டிலும் இருமடங்கானதாக இருக்கலாம் எனப் புரிந்து கொள்ளப்படுகின்றது. முல்லைத்தீவு பகுதியில் மட்டும் 26 அகதி முகாம்கள் புதிதாக திறக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தின் இந்தப் புதிய தாக்குதல்களுடன் சூட்டுக் காயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி, மல்லாவி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்ட 22 பேரில் 7 பேர் இறந்துள்ளதாக பிரான்சிய வைத்திய அமைப்பு வெளியிட்டுள்ள தகவல் கூறுகின்றது. கிளிநோச்சியை நோக்கி வெளியேறிச் சென்ற மக்கள் யாழ்ப்பாணத்தின் இரு புறங்களிலும் நிரம்பிப் போயுள்ளனர். அவர்களுக்கு உணவு, நீர் வசதி எதுவும் கிடையாது. யுத்த நடவடிக்கைகள் ஆரம்பமானதுடன் யாழ் குடாநாட்டிற்கும் பின்னர் கிளிநொச்சிக்கும் தப்பி ஓடிய இலட்சக்கணக்கான மக்கள் வவுனியா-கிளிநொச்சிக்கு இடையே தலைமுறை தலைமுறையாக வாழும் மக்களுடன் வந்து சேர்ந்துள்ளனர்.

நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் காட்டுப்புறங்களிலும் அங்கும் இங்குமாக இடம் பெறும் யுத்த நடவடிக்கைகளில் இராணுவம் விமானத் தாக்குதல் நடாத்துவதுடன் தரையில் 25 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்று வெடிக்கும் ஷெல், பீரங்கி தாக்குதல்களையும் நடாத்திவருகின்றது.

பொதுஜனங்கள் உயிர்பிழைக்க அவர்கள் வாழும் இடங்களைக் கைவிட்டு ஓடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாது உள்ளது. விடுதலைப் புலிகள் தாண்டிக்குளம் தடைமுகாமைத் தாக்கியதைத் தொடர்ந்து நடைபெற்ற யுத்தத்தில் அரசாங்கப் படைகளின் தாக்குதலில் இறந்த பொதுமக்களின் சடலங்களில் இதுவரையும் 30 பேரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

### கோணேஸ்வரி கொலை

அம்பாறைப் பகுதியில் மத்திய முகாம் 11வது காலனியில் நான்கு பிள்ளைகளின் தாயாரான முருகேஸ்வரன் கோணேஸ்வரி பொலிஸ் அதிரடிப் படைப் பிரிவினரால் காட்டுமிராண்டித் தனமாகக் கற்பழிக்கப்பட்டு கொலைசெய்யப் பட்டுள்ளார். 35 வயதான இவரைக் கற்பழித்ததன் பின்னர் இவரின் மர்ம உறுப்பில் கிரனேட் வெடிக்க வைத்துக் கொலை செய்துள்ளனர். மரணவிசாரணை, வைத்திய அதிகாரிகளுக்கு கோணேஸ்வரி ஷெல் அடியினால் இறந்துள்ளதாக பொலிசார் அறிவித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பொலிசார் முதலாளித்துவப் பத்திரிகையாளர்களின் ஒத்துழைப்போடு இதை மூடிமறைக்க முயன்றாலும் இது ஓர் மூர்க்கத்தனமான படுகொலையென அயலவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது இப்படி இருக்க யாழ்ப்பாணப் பகுதியில் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 750க்கும் மேற்பட்ட தமது பிள்ளைகளை தேடித்தருமாறு காணாமல் போனோர்

(3ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மத்திய வங்கி ஊழியர் சங்கத்துக்கு எதிரான தடையுத்தரவு

# தொழிற்சங்க உரிமைக்கு தொடுக்கப்பட்ட மிலேச்ச தாக்குதல்

**சோசலிச சமத்துவக் கட்சியின் அரசியல் குழுவின் அறிக்கை–1997–06–26**

இலங்கை மத்திய வங்கி நிர்வாகிகளின் முறைப்பாட்டின் பேரில் 1997ஜூன்9ம் திகதி மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொழிற்சங்க நடவடிக்கைகள் மீது ஒரு தலைப்பட்சமாக இடைக்காலத்தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது. மத்திய வங்கி ஊழியர் சங்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள இந்த அரச வேட்டையானது தொழிலாளர் வர்க்க உரிமைகளைத் தவிடுபொடியாக்க பொதுஜன முன்னணி அரசாங்கம் விரைந்து உக்கிரமாக்கி வரும் தாக்குதலின் புதிய கட்டமாகும். ம.வ.ஊ.ச .யும் அதன் செயற்குழு உறுப்பினர்களையும் பாதுகாக்க முன்நிற்பதன் மூலம் இதுவரை காலமும் தொழிலாளர் அனுபவித்து வந்த தொழிற்சங்க உரிமைகள் உட்பட்ட ஜனநாயக உரிமைகளைக் காக்கும் போராட்டத்தை ஒழுங்கு செய்ய முன்நிற்குமாறு சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை வேண்டுகின்றது. அத்தகைய ஒரு அழைப்பினை பொதுமக்களிடம் முன்வைக்கும் ஒரே கட்சி சோசலிச சமத்துவக் கட்சியே.

மத்திய வங்கி நிர்வாகிகள் தொழிற்சங்கத்தின் எத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது ? இதை ஆய்வதன் மூலம் தொழிலாளர்கள் தம் எதிரில் தலைதூக்கியுள்ள ஆபத்தைப் புரிந்து கொள்ள முடியும். இடைக்காலத் தடை உத்தரவு ம.வ.ஊ.சங்கம் தமது அங்கத்தவர்களை ஆசனங்களில் இருந்து வேலை செய்யவும் மெதுவாக வேலை செய்யவும் மேலதிக நேர வேலையை இடைநிறுத்தவும் ஆலோசனை வழங்கியதற்கு எதிராகவும் மத்திய வங்கிக்கு "நஷ்டமும்" "கெடுதியும்" அதன் அன்றன்றாடைய பணிகளை ஸ்தம்பிக்கச் செய்வதற்கும் எதிராகவும் சங்கம் மத்திய வங்கி ஊழியர்களை பயமுறுத்த செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டை சுமத்தி அதற்கு எதிராகவும் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் நின்றுவிடாது மத்திய வங்கி நிர்வாகிகள் சங்கத்தின் மீதும் செயற்குழு அங்கத்தவர்கள் மீதும் நிரந்தர தடை உத்தரவை பெற்றுக் கொள்ளவும் சங்க நடவடிக்கைகளை "சட்டவிரோதமானவை" "தொழிற்சங்க நடவடிக்கை அல்லாதவை"எனவும் மத்திய வங்கிக்கும் சங்கத்துக்கும் இடையே இருப்பது "தொழில்சார் கருத்துவேறு பாடு அல்ல "எனப் பிரகடனம் செய்யும்படியும் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர். மாவட்ட நீதிமன்றம் இந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளுமானால் 10 இலட்சம் ரூபா செலவுக்கு சங்கத்தை ஆட்படுத்தும் ஆபத்தும் உருவாகி உள்ளது.

## வரலாற்றில் முதற்தடவை

நீதிமன்றம் தொழிற் சங்கத்துக்கு எதிராக அத்தகைய நடவடிக்கை எடுப்பது சட்ட வரலாற்றில் முதற்தடவையாகும். என இந்தத் தடை உத்தரவு பற்றி சட்டமா அதிபர் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தாக த ஐலன்ட் பத்திரிகை ஜூன் 11ம் திகதி அறிவித்தது. இது உண்மை. இந்நடவடிக்கையானது பொதுஜன முன்னணி அரசாங்கமும் அதன் பிற்போக்குச்சக்திகளும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் அதன் அமைப்புக்களுக்கும் எதிராக முதலாளித்துவ அரச பலத்தை அணிதிரட்டிக் கொண்டு புதிய மட்டத் தாக்குதல் நடாத்த தொடங்கியுள்ளது. தமது உரிமைகளின் பேரில் போராட்டத்தில இறங்கும் எந்த ஒரு தொழிலாளர் பகுதியினருக்கும் எதிராக முதலாளித்துவ அரசை அணிதிரட்ட முதலாளிகளைத் தூண்டுவதற்கு அவர்களுக்கு கோடரி வழங்குவதாகும். பொதுஜன முன்னணி அரசாங்கமும் மத்திய வங்கி நிர்வாகிகளும் முதலாளித்துவ அரசும் தொழிலாளர் உரிமைகளைத் தாக்க புதிய முன்மாதிரியை ஸ்தாபிதம் செய்துள்ளன.



மத்திய வங்கி ஊழியர் சங்கத்தின் மறியல் போராட்டம்

மத்திய வங்கி நிர்வாகிகள் "அநீதி "என முறைப்பாடு செய்துள்ளது தொழிற் சங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கு 8 சதவீத சம்பள அதிகரிப்பு உட்பட்ட குறைந்த பட்சக் கோரிக்கைகள் சிலவாகும். இந்தக் கோரிகைகளை வழங்க மறுக்கும் இடத்து இந்தக் கோரிக்கைகளின் பேரில் தொழிலாளர் வர்க்கத்தினுள் நீண்ட காலமாக பிரபல்யம் அடைந்த தொழிற்சங்க நடவடிக்கைகளில் தொழிற்சங்கம் ஈடுபடுவதையே நிர்வாகம் சட்டவிரோதம் என்கின்றது. "தொழிற்சங்கத்துடன் தொழில்சார் கருத்து வேறுபாடு கிடையாது" எனப் பிரகடனம் செய்யும்படி மத்திய வங்கி நிர்வாகம் நீதிமன்றத்தை கோருவது சங்கத்தின் கோரிக்கைகளை இட்டுநிரப்பாததால் ஏற்பட்டுள்ள மோதுதலாகும் இதன்மூலம் தொழிலாளர்களின் சகல கோரிக்கைகளையும் அதன் பேரில் நடாத்தும் சகல பிரச்சாரங்களையும் கூட நாட்டின் சாதாரண சட்டங்களின் கீழும் "அநீதி" யானது எனவும் "சட்டவிரோதமானது" எனவும் ஊர்ஜிதம் செய்யப் பார்க்கின்றது.ம.வ.ஊ.ச.மீது இடைக்காலத் தடை உத்தரவு விதிப்பதன் மூலம் அரச பலத்தைக் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளைத் தாக்கும் புதிய தாக்குதல் ஆரம்பமாகி உள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக ஊழியர்களின் கோரிக்கைகளை நசுக்க மத்தியவங்கி நிர்வாகம் நடாத்தி வந்த பெரிதும் ஆத்திரமூட்டும் பிற்போக்கு இயக்கம் சகல தொழிலாளர்களுக்கும் எதிரான ஒரு பாய்ச்சலாகும். மத்திய வங்கி ஆளுனர் சங்கத்தின் பிரச்சாரத்துக்கு எதிராக ஏப்பிரல் 11ம் திகதி வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் தொடுத்த இந்தக் கொடிய தாக்குதலைப் பாருங்கள்:

"அது (மத்திய வங்கி ஊழியர் சங்கப் பிரச்சாரம்) நாட்டின் மக்களால் ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு கொணரப்பட்ட ஒரு அரசாங்கத்தை அதன் கொள்கைகளை மாற்றும்படி நெருக்கவும் சில துறைகளில் அநீதியான சம்பளக் கோரிக்கைகளை பெற்றுக் கொள்ளவும் உங்களையும் சேர்த்துக் கொள்ள எடுக்கும் ஒரு சூழ்ச்சியான முயற்சியாகத் தெரிகின்றது. இந்தக் குழம்பிப்போன வேலைத்திட்டத்தின் இறுதி விளைவாக எமது மக்களை பிளவுபடுத்தி பலவீனமாக்கவும் அதன் மூலம் எமது நாட்டை நாசமாக்கவும் துடிக்கும் எமது எதிரிகளை பலப்படுத்துவதாகும். இத்தகைய அரச விரோத , தேசவிரோத நடவடிக்கைகள்..."

வங்கி நிர்வாகிகள் மே 30ம் திகதி வெளியிட்ட மற்றொரு துண்டுப்பிரசுரம் இந்த ஆத்திரமூட்டும் தாக்குதலை மேலும் முன்னெடுத்துள்ளது "உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்குவதன் மூலம் ம.வ.ஊ.ச தலைமை எமது நாட்டை பாதுகாக்கும் பொருட்டு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் 1996 ஜனவரி 11ம் திகதி எதிரிகள் எடுத்த முயற்சியை வெற்றிகரமாக்க உதவுவது தெளிவாகத் தெரிகின்றது." என்கின்றது.

தொழிற்சங்கத்தின் பிரச்சாரத்துக்கு எதிராக இங்கு தொடுக்கப்பட்டுள்ளது அரசியல் சம்மட்டி அடியாகும். தமது உரிமைகளைக் கேட்டுநிற்கும் எந்த ஒரு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பிரிவினருக்கும் எதிராக இத்தகைய இனவாத கூச்சலிடுவது அவர்களை நசுக்கித் தள்ளும் அவசியம் கொண்ட ஆளும் வர்க்கமேயாகும். இனவாத யுத்தத்தின் பேரால் சகல உரிமைகளையும் பலியெடுக்க எமக்கு இடமளி! பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்ககமும் மத்திய வங்கி நிர்வாகமும் கூறுவது இதுதான். தொழிலாளர் வர்க்கத்தையும் அதன் உரிமைகளையும் தவிடு பொடியாக்கும் பயங்கர ஆயுதமாக பொதுஜன முன்னணி அரசாங்கத்தை முன்னணியில் கொண்ட பிற்போக்குச் சக்திகள் பயன்படுத்துவது இனவாத யுத்தம் என்பது இதன் மூலம் தெளிவாகவில்லையா?

மத்திய வங்கி ஊழியர் மீது இடம்பெற்றுள்ள அரச பாய்ச்சலானது அனைத்துலக மூலதனத்தின் மிலேச்ச சுரண்டலுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்க யூ.என்.பி.யின் உதவியுடன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் அபிவிருத்தி செய்யப்படும் சர்வாதிகார ஆட்சிக்கான புதிய நடவடிக்கையாகும். என்பதை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் அடையாளம் கண்டாக வேண்டும்.

ம.வ.ஊ.ச.மீது இடைக்காலத்தடை உத்தரவு விதிக்கப்பட்ட வார இறுதியில் வெளிவந்த சண்டே டைம்ஸ் பத்திரிகை முதலாளிகளின் அவசியத்தை நிர்வாணமாகக் காட்டும் விதத்தில் "தொழிலாளர் பதட்ட நிலைமை முதலீட்டாளர்களை கிலி கொள்ள வைக்கின்றது" என்ற தலைப்பில் வர்த்தக பக்கங்களில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.


"வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பழக்கப்பட்டு இருப்பது தொழிலாளர்களின் உற்பத்தி பயன்பாட்டையும் பராமரிப்பையும் உறுதி செய்ய நினைத்த மாத்திரத்தில் வேலைநீக்கம் செய்யும் கருத்துப்பாட்டுக்காகும். இந்த நிலைமை இல்லாத இடத்தில் இலங்கையில் கிடைக்கும் ஏனைய சலுகைகளைத் தமது பெரும் கைத்தொழில்களை இந்நாட்டில் அமைப்பதற்கு போதுமானதாக முதலீட்டாளர்கள் கணிக்கப் போவதில்லை."

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தையும்

3ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்!



செ. இராஜ்குமார்

## இராஜ்குமார் கைதாகி ஓராண்டு பூர்த்தி விடுதலை செயயும் பிரச்சாரத்தை தீவிரமாக்கு

சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவரான தோழர்..செல்லையா இராஜ்குமார் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு 1997 ஜூன் 14ம் திகதியுடன் ஒராண்டு பூர்த்தியாகின்றது. எனினும் அவருக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாதுள்ள அரசாங்கம் கடந்த டிசம்பர் 5ம் திகதியில் இருந்து அவரை பண்டாரவளை பிந்துனுவவ புனருத்தாரண முகாமுக்கு மாற்றியது.அத்தோடு அவரை சோசலிச சமத்துவக் கட்சியோ அல்லது அவரது சட்டத்தரணியோ சந்திப்பதும் தடுக்கப்பட்டுள்ளது.

இராஜ்குமார் எந்த ஒரு பயங்கரவாத அமைப்பினதும் உறுப்பினர் அல்ல என்பதையும் அவர் சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் என்பதையும் நன்கு தெரிந்து கொண்டே இந்த சர்வாதிகார நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவர் சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் என்பதை நிரூபிக்கும் தஸ்தாவேசுக்கள் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரு நிலையிலேயே இந்த "புனருத்தாரணம்" தொடர்கின்றது.

இலங்கையிலும் அனைத்துலக ரீதியிலும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகள் இராஜ்குமாரை விடுதலை செய்யுமாறு பரந்த அளவிலான பிரச்சாரத்தினை அனைத்துலகத் தொழிலாளர் வர்க்க இயக்கத்தினுள் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இராஜ்குமாரின் ஆட்கொணர்வு வழக்கு ஜூன் 11ம்திகதி விசாரணைக்கு வந்த போது இராஜ்குமாருக்கு எதிராகக் குற்றச்சாட்டு இல்லை எனவும் அவரை எட்டு மாதங்கள் புனருத்தாரணத்தின் பின்னர் ஜூலை 14ம் திகதி விடுதலை செய்வதாகவும் அரசாங்க சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இராஜ்குமாருக்கு எதிராக எந்த ஒரு குற்றச்சாட்டையும் சுமத்த அரசினால முடியாது போனதுக்கு அவர் குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் எந்த ஒரு குற்றமும் செய்யாததேயாகும். எனினும் அவரை. விடுதலை செய்வதாகக் கூறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் வாக்குறுதியை தொழிலாளர் ஒரு துட்டுச் சல்லிக்கும் கணக்கெடுக்கக் கூடாது. இராஜ்குமாரை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரும் கடிதங்களை பின்வரும் முகவரிகளுக்கு அனுப்புமாறு நாம் கோருகின்றோம். அதன் ஒரு பிரதியை எமக்கும் அனுப்பவும்.

முகவரி: செயலாளர் ,

பாதுகாப்பு அமைச்சு, 15-5 பாலதக்ச வீதி, கொழும்பு 05.

எமது முகவரி: சோசலிச சமத்துவக் கட்சி,

90 1வது மாளிகாகந்த ஒழுங்கை , கொழும்பு -10.

## இனவாத யுத்த சங்காரம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

நசுக்கித்தள்ளும் அவசியம் ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதன் ஒரு பாகமாகவே அரசாங்கம் புதிய யுத்த பாய்ச்சல்களில் ஈடுபட்டுவருகின்றது. இதன் பின்னணியில் ஏகாதிபத்தியம் இருந்து கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளை சமரசத்துக்கு கொணர்வதும் அவர்களையும் இந்தத் தாக்குதல்களின் ஒரு பங்குதாரர் ஆக்கிக் கொள்வதுமே முதலாளி வர்க்கத் தயாரிப்பாகும். இந்த மோசடி ஏமாற்றுவித்தை உண்மையில் தொழிலாளர் வர்க்கத்தின் கழுத்தில் சுருக்குப் போடுவதாகும்.

சமாதானத்தையும் தமிழரின் ஜனநாயக உரிமைகளையும் ஸ்தாபிதம் செய்யவும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களான தமிழ்-சிங்கள மொழிபேசும் மக்கள் சமத்துவத்துடன் வாழுவதற்கும் ஏற்ற நிலைமைகளைச் சிருஷ்டிக்க இந்நாட்டு முதலாளி வர்க்கத்தால் முடியாது என்ற சோசலிச சமத்துவக் கட்சியின் கூற்று இன்று உறுதிப்பட்டுள்ளது. இந்தக் கைங்கரியம் சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசினை ஸ்தாபிதம் செய்யும் போராட்டத்தின் மூலம் மட்டுமே நிறைவேறும்.

இந்த யுத்தம் எமது யுத்தம் அல்ல! யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ கொடுக்காதே! இனவாத யுத்தம் வேண்டாம்!முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதத்தினைத் தோற்கடி! சோசலிசத்துக்காக சிங்கள தமிழ் தொழிலாளர்.ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தை கட்டியெழுப்பு!

## யுத்தத்தின் நாசங்களில் ....

1ம் பக்கத் தொடர்ச்சி

பாதுகாப்பு சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளது எமது அன்புக்குரிய பிள்ளைகள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு. ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. இதுவரை அவர்கள் எங்குள்ளனர் என்ற விபரம் இராணுவத்திடம் இருந்து எமக்கு கிடைக்கவில்லை. கைது செய்தோர் பெயர்கள் உத்தியோகபூர்வமாக எழுதப்படவில்லை. இதனால் நாம் மனவேதனையுடன் வாழ்ந்து கொண்டுள்ளோம் என்பதைத் தங்களுக்கு தெரிவிக்கின்றோம்.

இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களில் , பாடசாலை மாணவர்கள், அரச, தனியார்துறை ஊழியர்களும் அடங்குவர்.

தங்கள் மீதும் இலங்கை இராணுவத்திடமும் கொண்ட நம்பிக்கையால் எமக்கு விடுக்கப்பட்ட பல்வேறு மிரட்டல்களுக்கு மத்தியிலும் இந்நாட்டு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிக்குள் வாழ நாம் வந்தோம். எனினும் நாம் ஒரு போதும் நினைத்திராத விதத்தில் எதிர்பாராத விதத்தில் எமது வாழ்க்கைக்கு பெரும் தீங்கு இளைக்கப்பட்டுள்ளது. எம்மிடமிருந்து பிரிக்கப்பட்ட எமது பிள்ளைகளை எம்மிடம் சேர்க்கவும்" இங்கனம் கைது செய்யப்பட்டோர் விடுதலைப் புலிகளுடன் எந்தவிதமான தொடர்பும் கிடையாதவர்கள் எனவும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் செயற்குழு உறுப்பினர்களையும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளித்துவ அரசினதும் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கவும் இந்தத் தாக்குதல் மூலம் புதிய மட்டத்துக்கு தோன்றியுள்ள சகல ஆபத்துக்களுக்கும் எதிராக தயார் செய்வதற்கும் தொழிலாளர் வர்க்கத்தை உடனடியாகத் தயார் செய்ய வேண்டும். இதனை ஒரு ஊழியர் குழுவுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தாகவோ அல்லது ஒரு தொழிற்சங்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதலாகக் கொண்டு அசட்டையாக இருப்பது பெரும் தவறாகும். கடந்த ஆண்டில் மின்சார சபை ஊழியர்களுக்கும் உருக்கு கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் எதிராக இராணுவ-பொலிஸ் நடவடிக்கைகள் மூலம் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இதன் மூலம் தமது கரத்தைப் பலப்படுத்திக் கொண்ட அரசாங்கம் தற்போது முதலாளித்துவ சட்டதிட்டங்கள் மூலம் தொழிலாளர்களுக்கும் தொழ்ற்சங்கங்களுக்கும் கால்விலங்கு போட துடிக்கின்றது.

### தொழிற்சங்க வேலைத்திட்டத்தின் வங்குரோத்து

வெறும் தொழிற்சங்க , தொழிற்சங்கவாத வேலைத்திட்டங்களால் அனைத்துலக மூலதனத்தின் அவசியங்களினால் வெறிகொண்டு அலையும் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் மூலோபாயங்களுக்கு எதிராகப் போராட முடியாது என்பது மத்திய வங்கியினுள் மீண்டும் அம்பலமாகி உள்ளது.பொதுஜன முன்னணி அரசாங்கமும் மத்திய வங்கி நிர்வாகிகளும் தமது பிற்போக்கு வேலைத் திட்டத்தின் மூலம் பயங்கரத் தாக்குதலில் ஈடுபடுகையில் அதற்கு முகம் கொடுப்பது எப்படி? மத்தியவங்கி ஊழியர் சங்கத் தலைமை தமது தொழிற்சங்கவாத வேலைத்திட்டம் வங்குரோத்து அடைந்து போன நிலைமையினுள் தாக்கிவரும் அரசாங்கத்தில் நம்பிக்கை வைத்து அதன் அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வு காணும் சாத்தியம் பற்றி பொய் அளந்து வருகின்றார்கள். அவர்கள் அரசாங்கம் மத்திய வங்கி ஆளுனரால் தவறான வழியில் தள்ளப்பட்டுள்ளது என்ற காட்டிக்கொடுப்புக்கள் நிறைந்த பிரச்சாரத்தில் குதித்தனர். இந்தத் தலைமை இன்று அரச வேட்டைக்கு பலியாகி உள்ள நிலைமையில் அவர்களை பாதுகாக்க அவர்களின் வேலைத்திட்டம் என்ன? ம.வ.ஊ.ச.த்துக்கும் அதன் செயற்குழுவுக்கும் எதிரான அரச வேட்டையைத் தோற்கடிக்கவும் அவர்களைப் பாதுகாக்கவும் மத்திய வங்கி ஊழியர்களும் மற்றும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களும் மேற்சொன்ன படிப்பினைகளைப் புரிந்துகொண்டு அரசியல் ரீதியில் சுயாதீனமாகி தயார் செய்ய வேண்டும்.

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்நோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் ம.வ.ஊ.ச.உள்ளும் மத்திய வங்கி ஊழியர்களின் உள்ளும் நீண்ட காலமாக ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் அரசியல் வேலைத் திட்டத்தினால் அவர்களை ஆயுதபாணிகளாக்கவும் போராடிவந்த ஒரு அமைப்பாகும். தொழிற்சங்கத்தின் உள்ளும் மத்திய வங்கியின் உள்ளும் நடவடிக்கைக் குழுக்களை அமைத்துக் கொண்டு ஏனைய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவோடு போராட்டத்தை அபிவிருத்தி செய்வதும் அவசியம். பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி, சோசலிச வேலைத்திட்டத்தின் நடைமுறைக்கும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் முன்நோக்கினால் ஆயுதபாணியாக்கும் அவசியத்தினை சோசலிச சமத்துவக் கட்சியும் மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினுள் முன்நின்று போராடி வந்த அதன் அங்கத்தவர்களும் சுட்டிக்காட்டி வந்தனர். இது இலங்கைத் தொழிலாளர் வர்க்கம் அனைத்துலகத தொழிலாளர் வர்க்கத்துடன் ஒன்றிணைந்து போராட வேண்டிய அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகவும் மத்திய வங்கி ஊழியர்களால் பல தடவைகள் நிறைவேற்றப்பட்டு சங்கத் தலைவர்களால் பல தடவைகள் மூடிமறைக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் ஊடாக மத்திய வங்கி ஊழியர் சங்கத்தைக் காக்கும் போராட்டத்தை பரந்த அளவில் தொடுக்க வேண்டி உள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் மத்திய வங்கி நிர்வாகிகளும் தொடுத்துள்ள தாக்குதல்களுக்கு எதிராக சட்டரீதியாக மேற்கொள்ளும் தலையீடுகளுடன் இந்த அரசியல் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டும். மத்திய வங்கி ஊழியர் சங்கத்துக்கும் அதன் செயற்குழு உறுப்பினர்களுக்கும் எதிரான குற்றச்சாட்டை நிபந்தனையின்றி வாபஸ் பெறும்படி கோரும் மறியல், பிரச்சாரக் கூட்டங்களை ஏற்பாடு செய்யவும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணரும் வேலைத்திட்டத்தினை சூழ அணிதிரட்டவும் முன்வருமாறு நாம் வேண்டுகின்றோம்.

இந்தப் போராட்டத்துக்கு தலைமை வழங்கக் கூடிய ஒரே இயக்கமான சோசலிச சமத்துவக் கட்சியினை பரந்த கட்சியாக கட்டியெழுப்ப இணையுங்கள்

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தில் கைவைக்காதே!

தொழிலாளர் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகளை அரச தாக்குதலில் இருந்து பாதுகாக்க அணிதிரளுங்கள்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சுத் தேர்தலில் ஆளும் கூட்டரசாங்கத்துக்கு படுதோல்வி


1995ல் பிரான்சிய தொழிலாளர் வேலைநிறுத்த அலை

பிரான்சிய தேர்தல் முடிவுகள் அனைத்து நாடுகளதும் தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு தீர்க்கமான அரசியல் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. பிரித்தானியாவில் டோரிகள் அரசாங்கம் படுதோல்வி அடைந்ததைப் போலவே பிரதமர் அலயன் ஜூப்பர் தலைமையிலான வலதுசாரி அரசாங்கம் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டமை அனைத்துலக மூலதனத்தின் கோரிக்கைகளுக்கு ஏற்ப சிக்கனக் கொள்கைகளை அமுல் செய்வதை பிரான்சிய உழைக்கும் மக்கள் நிராகரித்துள்ளதை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது. ஆனால் பிரித்தானியாவில் புதிதாக ஆட்சிக்கு வந்த தொழிற்கட்சி அரசாங்கம் உடனடியாகவே வேலையற்றவர்கள் மீதும் நலன்புரி அரசின் மிச்சசொச்சங்கள் மீதும் தாக்குதல் தொடுப்பதில் இறங்கியுள்ளதைப் போலவே பிரான்சின் சோசலிஸ்ட் கட்சியையும் கம்யூனிஸ்ட் கட்சியையும் கொண்ட கூட்டரசாங்கம் மக்களிடம் இருந்து தமக்குக் கிடைத்த ஆணையை வெகுவிரைவாக நிராகரித்துக் கொண்டு பெரும் வர்த்தக நிறுவனங்களின் அபிலாசைகளைத் திணிக்கும் விதத்தில் டிகோல்வாதிகளான ஜனாதிபதி ஜக்குவாஸ் சிராக்குடன் ஒரு கொடுக்கல்வாங்கலுக்குச் சென்றுள்ளது.

பிரான்சு பாராளுமன்றத்தில் மொத்தமாக உள்ள 577 ஆசனங்களில் 464 ஆசனங்களைக் கொண்டிருந்த இந்தக் கூட்டரசாங்கத்தின் எண்ணிக்கை 257 ஆக வீழ்ச்சிகண்டுள்ளது. தேர்தல் வாக்களிப்பின் முதலாவது சுற்றில் ஆர்.பீ.ஆர், யூ.டி.எப்.என்ற வலதுசாரி கட்சிகள் வாக்குக்களில் நூற்றுக்கு 29.9வீதத்தினையே பெற்றுக் கொண்டுள்ளன. இதனால் பிரதமர் அலன் ஜுப்பா முதலாவது சுற்று வாக்களிப்பின் இறுதியில் இராஜினாமாச் செய்யத் தள்ளப்பட்டார்.உடனடியாக நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் பேசிய ஜனாதிபதி ஜக் சிராக், இடதுசாரி அரசாங்கம் ஆட்சிக்கு வருமானால் ஒரு ஸ்திரமற்ற நிலை உருவாகும் என விடுத்த எச்சரிக்கையை வாகாகளர்கள் கணக்கெடுக்கவில்லை.

சோசலிசக் கட்சியும் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியும் (318 ஆசனங்கள்) ஒன்றிணைந்து ஒரு கூட்டரசாங்கத்தை அமைத்துள்ள அதே வேளையில் புதிய அமைச்சரவையில் ஸ்டாலினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஒடுக்குமுறை வலதுசாரி அரசாங்கத்தினை வீழ்த்தியமை பிரான்சிய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு ஒரு ஆறுதலாக இருந்த போதிலும் சோசலிசக் கட்சியின் தலைமையிலான "இடதுசாரி" அரசாங்கத்தின் வெற்றி ஒரு குதூகலத்துக்கு உரிய விடயம் ஆகிவிடாது. 1981ல் இருந்து ஒரு தசாப்தத்துக்கு மேற்பட்ட காலம் ஆட்சியில் இருந்து வந்துள்ள சோசலிசக் கட்சி தலைமையிலான கூட்டரசாங்கம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகத் தொடுத்த தாக்குதல்கள் பிரான்சிய மக்களின் நினைவில் இருந்து அகன்று விடாது. 1993ல் சிராக் அதிகப்படியான ஆசனங்களை வெற்றிகொண்டு ஆட்சிக்கு வந்ததற்கு வழிசமைத்துக் கொடுத்தது இந்த "சோசலிச" கூட்டரசாங்கத்தின் காட்டிக் கொடுப்புக்களேயாகும்.

## பதிலீடு

இந்த தேர்தல் முடிவுகள் காட்டுவது என்ன? வலதுசாரி ஆட்சியை தோற்கடிக்கத் தக்க ஒரு நிஜ பதிலீடு அரங்கில் இல்லாத வரையில் அந்த ஒடுக்குமுறை ஆட்சிகளை தோற்கடிக்கும் "வல்லமை" கொண்ட இடதுசாரி கூட்டரசாங்கத்துக்கு வாக்களிக்கும் பொருட்டு பிரான்சிய தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நடவடிக்கை எடுப்பதேயாகும். இந்தத் தேர்தலில் வாக்களித்தோரின் வீதாசாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. இது வலதுசாரி , "இடதுசாரி" ஆட்சியாளர்கள் தொடர்பாக பிரான்சிய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டுள்ள குழப்பத்தை சுட்டிக்காட்டுகின்றது. தேர்தலின் முதலாவது சுற்று வாக்களிப்பில் வாக்களித்தோர் எண்ணிக்கை நூற்றுக்கு 68.5வீதமாகும்.

சமீப காலத்தில் நியமிக்கப்பட்ட பிரான்சிய பிரதமர்களுள் பொதுமக்களின் பெரும் வெறுப்புக்கு இலக்கானவர் ஓய்வுதியம், சௌக்கிய சேவை வெட்டுக்களில் ஈடுபட்ட அலன் யூப்பேயே. அரசாங்கத் துறைகள் தனியார்மயமாக்கப்பட்டு தொழில் அழிப்புக்கள் இந்த அரசாங்கத்தினால் உக்கிரமாக்கப்பட்டது. பிரான்சினுள் இன்றைய வேலையின்மை நூற்றுக்கு 12.8 வீதமாக உள்ளது. இந்தத் தாக்குதல்களைத் தொடுக்கையில் அவரது அரசாங்கம் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து வெடித்த வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.தொழிற் சங்கத் தலைவர்களதும் "இடதுசாரி" கட்சித் தலைவர்களதும் தடைகள், குறுக்கீடுகள். காட்டிக் கொடுப்புக்களுக்கு மத்தியிலும் பிரான்சியத் தொழிலாளர்கள் தமது சக்தியை முழுமையாகப் பாவித்து . போராட்டத்தை முன்னெடுக்க நேரிட்டது.

## வாக்குறுதிகள்

புதிய இடதுசாரி அரசாங்கம் என்னதான் வாக்குறுதிகளை பிரான்சிய தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு வழங்கி இருந்தாலும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் தாக்குதல்களுக்கு அவர்களை இலக்காக்குவதை விட வேறு பதிலீடு அதற்குக் கிடையாது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் சம்பளத்தை வெட்டாது வேலை நேரத்தைக் குறைக்கவும் 700000 புதிய தொழில்களை உடன் அதிகரிக்கவும் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் இருந்து கொண்டிருக்கையில் பக்டரிகளை மூடுவது. தொழில் வெட்டுக்கள் உட்பட்ட மூலதனத்தின் தாக்குதல் தேர்தலுக்கு முன்னர் போலவே பின்னரும் நடைமுறைக்கிடப்பட்டு வருகின்றது. சோசலிஸ்ட் கட்சியின் தலைவரும் புதிய பிரதமருமான லயனல் பொஸ்பின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று பிர்ரான்சிய அரசாங்கம் அதிக எண்ணிக்கையிலான பங்குகளைக் கொண்ட றெனோல்ட் கம்பனிக்குச் சொந்தமான பெல்ஜியம் பக்டரியை மூடுவதை இடைநிறுத் தவதாகும். இந்த பெல்ஜியன் றெனோல்ட் பக்டரியை இழுத்து மூடும் முடிவை மாற்றம் இல்லாது நடைமுறைக்கிடுவதாக அதன் இயக்குனர் சபை அறிவித்துள்ளது. அவ்வாறே பிரான்சின் பேர்ஜோ சிட்டிரொன் பக்டரியைச் சேர்ந்த 2800 தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யும் முடிவை அப்படியே நடைமுறைக்கிடப் போவதாக கம்பனிச் சொந்தக்காரர்கள் அறிவித்துள்ளனர். ஐரோப்பாவுக்கென தனியொரு நாணய அலகினை நடைமுறைக்கிடுவதற்கு வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை நூற்றுக்கு 3 வீதமாகக் குறைப்பது ஒரு நிபந்தனையாக இருந்து கொண்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்தினை விரைவாக அமுல் செய்வது புதிய பிரான்சிய இடதுசாரி அரசாங்கத்தின் இலக்காக உள்ளதாக ஜோசபின் சுட்டிக்காட்டியுள்ளார். தற்சமயம் நூற்றுக்கு 4.2 வீதமாக உள்ள பிரான்சிய வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கான மார்க்கமாக தொழிலாளர் சம்பள வெட்டு. நலன்புரிச் சேவை செலவினக் குறைப்பு ஆகியன இருந்து கொண்டுள்ளன. இவற்றை இன்றைய வலதுசாரி ஜனாதிபதி ஜக் விராக்குடன் கூட்டாக நடைமுறைக்கிட புதிய பிரதமர் தமது உஜார் நிலையைக் காட்டிக் கொண்டுள்ளார்.

இந்நிலைமையில் 1981ல் சில நிறுவனங்களை அரசமயமாக்குவதாகவும் நலன்புரிச் சேவைகள் திட்டத்தை மேலும் விஸ்தரிப்பதாகவும் வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த சோசலிஸ்ட் கட்சியின் மிட்டெரொண்ட் அரசாங்கம் நாணயச்சந்தையின் பேரால் இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் காலால் போட்டு உழக்கியதை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இலகுவாக மறந்திருக்கமுடியாது.

தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக தொடுக்கப்படும் தாக்குதல்களை உக்கிரமாக்கி, ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் அவசியங்களை அமுலுக்கு இடுவதற்கு ஒற்றைக்காலில் நின்றுவந்த லயனல் ஜோசபினின் அரசாங்கத்துக்கு எதிராக வெகுவிரைவில் பிரமாண்டமான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்கள் வெடிக்கப்போவதை 1997 தேர்தல் முடிவுகள் காட்டிக்கொண்டுள்ளன. அந்நிலையினுள் சகல வகையிலுமான சந்தர்ப்பவாதிகளுக்கும் எதிராக பிரான்ஸ் தொழிலாளர் வர்க்கத்தினுள் அனைத்துலக சோசலிச தலைமையைக் கட்டியெழுப்பும் அவசியம் தவிர்க்கமுடியாத விதத்தில் தலைதூக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் கட்சியின் அமோக வெற்றி பிரித்தானியாவில் ஆழமான மோதுதல்களுக்கு களம் அமைத்துள்ளது

மே 1ம் திகதி நடைபெற்ற பிரித்தானியப் பொதுத் தேர்தலில் மேஜர் அரசாங்கம் படுதோல்வி அடைந்தமையானது டோரிகளின் நிலையான தன்மையைப் பற்றி மிக அவதானமாகப் பயிரிடப்பட்டுவந்த நப்பாசைகளை எல்லாம் தகர்த்து எறிந்துள்ளது. கொன்சர்வேட்டிவ் கட்சியின் 18 வருட கால தொடர்ச்சியான ஆட்சியின் பின்னர் கட்சி 1832ன் பின்னர் 178 ஆசனங்களை இழந்து படுமோசமான தேர்தல் தோல்வியைச் சந்தித்தது.

வேல்சிலும் ஸ்கொட்லாந்திலும் இங்கிலாந்தின் இன்னும் பல நகரங்களிலும் கைத்தொழில் பிராந்தியங்களிலும் அடியோடு துடைத்து எறியப்பட்டதன் மூலம் கொன்சர்வேட்டிவ் கட்சி ஒரு கிராமப்புற இங்கிலாந்தினை மட்டும் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு சப்பட்டை ஆக்கப்பட்டது. வட லண்டனில் தட்ச்சரின் பழைய தேர்தல் தொகுதியான பின்சிலே கூட தொழிற்கட்சியின் கைக்குச் சென்றது. ஏழு அமைச்சர்கள் தமது ஆசனங்களை இழந்தனர். இவர்களில் கொன்சர்வேட்டிவ் முக்கிய புள்ளிகளான மல்கொம் ரிப்கைன்ட், வில்லியம் வோல்ட்கிறேவ், றொச்சர் பிரீமன் அடங்குவர். இதில் இன்னும் விசேடம் என்ன என்றால் அடுத்த டோரி கட்சி தலைவராக பேர் குறிப்பிடப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சர் மைக்கேல் போட்டிலோ தோற்கடிக்கப்பட்டதேயாகும்.

இந்த டோரி தோல்வியானது பொதுமக்களின் பரந்த தட்டினரிடையே ஒரு உத்சாகத்தை உருவாக்கியுள்ளது. இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் சுமார் இரண்டு தசாப்தகால தட்ச்சர்வாதத்துக்கு ஒரு முடிவுகட்டியதையிட்டு ஒரு விதமான திருப்தி காணப்படுகின்றது. எவ்வாறெனினும் தொழிலாளர்கள் இந்தத் தேர்தல் முடிவுகளின் சிக்கலானதும் முரண்பாடுகள் நிறைந்ததுமான தன்மையை கவனமாக ஆய்வு செய்தாக வேண்டும். இந்த தேர்தல் புதிய தொழிற்கட்சி அரசாங்கத்தின் மீதான ஒரு நம்பிக்கை வாக்கு அல்ல. மேஜர் அரசாங்கத்தினதும் அதன் கொள்கைகளில் இருந்தும் பரந்த அளவில் மக்கள் அன்நியப்பட்டுக் கொண்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளது. கீழ்த்தட்டு மத்தியதர வர்க்க, திறமைபடைத்த தொழிலாளர்களிடையே இருந்துவந்த மாஜி.டோரி அரசாங்கத்தின் பரந்த அளவிலான வாக்காளர்கள் தட்ச்சர் வேலைத்திட்டம் சிருஷ்டித்த சமூக துயரங்களினால் நம்பிக்கையிழந்து தொழிற் கட்சிக்கு பெயர்ந்துள்ளனர்.

## அரசியல் மனோநிலை

தொழிற்கட்சி இந்த டோரி விரோத அரசியல் மனோநிலையை இரண்டு முக்கிய சுலோகங்கள் மூலம் சுரண்டிக் கொண்டது. "நிலைமை திருந்தியாக வேண்டும்". "மாற்றத்துக்கான காலம் இதுதான்". இவைதான் அவர்களின் அந்த சுலோகங்கள். தேர்தல் பெறுபேறுகளின்படி 10 வீதத்தினர் தொழிற்கட்சி பக்கம் சாய்ந்தனர். இது தொழிற்கட்சிக்கு மேலதிகமாக 146 ஆசனங்களை பெற்றுக் கொடுத்தது. அத்தோடு பாராளுமன்றத்தில் 179 பெரும்பான்மையையும் வழங்கியது.

இருந்த போதிலும் பல தொழிலாளர்கள் புதிய தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு பெரிதும் தயக்கத்துடனேயே வாக்களித்தனர். இன்னும் பலர் வாக்களிக்க மறுத்துவிட்டனர். 1992ல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் வாக்களிப்பில் ஒரு 7 வீதமான வீழ்ச்சி காணப்பட்டது. 1935ன் பின்னரான கடந்த 62 வருட காலத்தில் 71.1 வீத வாக்களிப்பே ஆகக் குறைந்த மட்டத்திலான வாக்களிப்பாகும். டோரிகள் தொடர்பாக என்னதான் பரந்த அள்விலான வெறுப்பும் குரோதமும் காணப்பட்ட போதிலும் புதிய தொழிற்கட்சி அரசாங்கம் மொத்தத்தில் வாக்களிக்கத் தகுதியானவர்களுள் 29 வீதத்தினரின் ஆதரவை மட்டுமே வென்றெடுக்க முடிந்தது. இதனது வாக்கானது 1992ல் டோரிகள் வெற்றி கொண்ட வாக்குக்களைக் காட்டிலும் குறைவானதாகும்.

பிரித்தானியத் தேர்தல் முடிவுகள் ஆழமான அரசியல் மோதுதலுக்கான களத்தினை சிருஷ்டித்துள்ளது. இலட்சோபலட்சம் வாக்காளர்கள் பிளேயர் அரசாங்கம் டோரி வேலைத்திட்டத்தினை பின்வாங்கச் செய்து, தமது வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றும் என்ற எதிர்பார்ப்புடனேயே தொழிற் கட்சிக்கு வாக்களித்தனர். ஆனால் பதவிக்கு வந்துள்ள தொழிற்கட்சி அரசாங்கமோ தொழிலாளர் வர்க்கத்தின் மீதான தாக்குதல்களை உக்கிரமாக்க வாக்குறுதி அளித்துள்ளது. தொழிற்கட்சியின் 6 வார கால தேர்தல் பிரச்சாரமானது பெரும் வர்த்தக நிறுவனங்களின் ஆதரவைத் திரட்டுவதாகவே அமைந்திருந்தது. தொழிற்கட்சி டோரிகளின் அரசியல் வேலைத்திட்டத்தில் பெரும் பகுதிக்கு அங்கீகாரம் வழங்கியதோடு, டோரிகளின் பிளவையிட்டு விசனம் கொண்டிருந்த சகல முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களது ஆதரவையும் பெற்றுக் கொண்டது.

தொழிற்கட்சி அதன் பாரம்பரிய தொழிலாளர் வர்க்க ஆதரவாளர்களின் சமூக எதிர்பார்ப்புக்களை திட்டமிட்டுச் சிதறடித்தது. தேர்தல் பிரச்சாரத்தின் இறுதி வாரத்தில் மட்டுமே தொழிற்கட்சி தலைவர்கள் தேசிய சுகாதார சேவையை பாதுகாப்பது பற்றியும் கல்வித் திட்டத்தை அபிவிருத்தி செய்வது பற்றியும் தொலைக்காட்சிகளில் உத்தரவாதங்களை வழங்கினர்.

வாக்குக் கணிப்பு முடிவடைந்ததுதான் தாமதம் கொன்பெடரேஷன் ஒப் பிரிட்டிஷ் இன்டஸ்ட்ரி, (CBI) பிரிட்டிஷ் சேம்பர் ஒப் கொமர்ஸ் போன்றவை பிளேயர் அரசாங்கம் குறைந்த பட்ச சம்பளம் தொடர்பாகவும் மற்றும் சமூக சட்டங்கள் தொடர்பாகவும் எந்தவிதமான சலுகைகளும் காட்டக் கூடாது என்ற கோரிக்கைகளை முன்வைத்தன. அது பிரித்தானியாவின் அனைத்துலக போட்டியை பாதிக்கும் எனவும் அவை குறிப்பிட்டன. சீ.பி.ஐ. பணிப்பாளர்நாயகம் அடையர் டேர்னர் தொழிற்கட்சி அரசாங்கத்தின் கொள்கை "வர்த்தக நலன்களை அமுல் செய்வதில் தங்கி இருக்க வேண்டும்" என்றுள்ளார்.

## சிக்கனமும் வெட்டும்

தொழிற் கட்சி அரசாங்கத்தின் புதிய நிதி அமைச்சர் கோடன் பிரவுணின் முதல் நடவடிக்கை நாணயக் கொள்கை கட்டுப்பாடுகளை பாங்க் ஒப் இங்கிலாந்திடம் ஒப்படைத்ததேயாகும். அத்தோடு டோரிகளின் செலவுகளின் உச்ச வரம்புகளைத் தொடர்ந்தும் பேணும் அதே வேளையில் சிக்கனங்களையும் வெட்டுக்களையும் தொடரவும் முடிவு செய்துள்ளது. பிரித்தானிய தொழிற்சங்க இயக்கத்தினுள் இருந்துவரும் புதிய தொழிற்கட்சி அரசாங்க ஆதரவாளர்கள் பிளேயரின் வர்த்தக ஆதரவுக் கொள்கைகளுக்கு முழு ஆதரவு அளிக்கின்றார்கள். "தொழிற்கட்சியைப் பற்றிய வர்த்தக சமூகத்தின் சந்தேகங்களை அகற்றியதே புதிய தொழிற்கட்சியின் வெற்றிக்கான காரணமாக விளங்கியது" என தொழிற்சங்க காங்கிரசின்() பொதுச் செயலாளரான ஜோன் மன்க்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

டோரிகளின் தேர்தல் பிரச்சாரம் "பொருளாதாரம் செழித்துக் கொண்டுள்ளது" என்ற வாதத்தினையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் இலட்சோப இலட்சம் தொழிலாளர் வர்க்கக் குடும்பங்கள் - முன்னைய டோரி அரசாங்கத்தின் வாக்காளர்கள் உட்பட - சம்பள வெட்டினாலும் தொழில் இழப்புக்களாலும் முக்கிய சமூக சேவைத் திட்டங்களின் ஒழிப்புக்களாலும் பாதிக்கப்பட்டனர். தொழிற்கட்சியினர் டோரி அரசாங்கத்தின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டமை மத்தியதர வர்க்கத்தின் பெரிதும் [illegible] நிறைந்த தட்டினரிடமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொண்டதற்கான ஒரு காரணமாகும். எவ்வாறெனினும் சனத்தொகையில் பெரும்பான்மையினர் சமூக நிலைமை வீழ்ச்சிகண்டு வருவதாலும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகி வருவதாலும் ஏற்பட்ட வெறுப்பினால் தொழிற்கட்சிக்கு வாக்களித்தனர்.



"இடதுசாரி" பிளேயருக்கு ஆதரவு திரட்டும் வலதுசாரி "சன்" பத்திரிகை

## அரசியல் ஸ்திரமின்மை

டோரிகளின் ஆதரவு சரிந்தமையானது கடந்த சில வருடங்களாக அனைத்துலக ரீதியில் ஏற்பட்டுவந்த ஒரு தொடர்ச்சியான தேர்தல் தோல்விகளின் ஒரு காட்சியாகவும் விளங்கியது. கனடியன் டோரிகள், இத்தாலியன் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி, பிரான்சிய சோசலிஸ்டுகள், அவுஸ்திரேலிய தொழிற்கட்சி ஆகிய நீண்டகால ஆட்சியாளர்களின் ஆதரவுகள் சரிந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது . உலகம் பூராவும் வாழ்க்கைத் தரத்திலான பரந்த அளவிலான வீழ்ச்சி, ஆழமான வர்க்கத் துருவப்படுத்தல், அரசாங்கங்கள் மீதும் அவற்றின் உத்தியோகபூர்வமான அரசியல் மீதும் பரந்த மக்களுக்கு உருவான நம்பிக்கையீனத்தினால் உருவான ஸ்திரமின்மையையும் அரசியல் பிரளயங்கள் காட்டிக் கொண்டுள்ளன.

பிரித்தானிய சுரங்கத் தொழிலாளர் சங்கத் தலைவரான ஆர்தர் ஸ்கார்கில்லின் சோசலிஸ்ட் தொழிற் கட்சி நிறுத்திய 64 வேட்பாளர்களுக்கு மொத்தத்தில் 52110 வாக்குக்களும் சோசலிஸ்ட் கட்சி ஸ்கொட்லாந்து சோசலிஸ்ட் கூட்டு நிறுத்திய 35 வேட்பாளர்களுக்கு 19571 வாக்குக்களும் கிடைத்தன. எனினும் இந்தக் கட்சிகளில் எவையும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான பதிலீட்டையும் வழங்கவில்லை. அத்தோடு சோசலிசக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு சுயாதீனமான இயக்கத்தின் அபிவிருத்தியைத் தடைசெய்வதன் மூலம் இந்தக் கட்சிகள் மக்களிடையே காணப்படும் பரந்த [illegible] குழப்பங்களை தீவிர வலதுசாரி, பாசிசக் குழுக்கள் சுரண்டிக் கொள்வதற்கான கதவுகளையும் திறந்துவிடுகின்றன. புதிதாக அமைக்கப்பட்ட கோடீஸ்வரர் சேர் ஜேம்ஸ் கோல்ட் சிமித்தின் றிபரண்டம் கட்சி 800000 வாக்குக்களை அல்லது மொத்த வாக்குக்களில் 3வீதத்தினை வென்றெடுத்தது. பாசிச பிரித்தானிய தேசியக் கட்சியின் 55 வேட்பாளர்கள் 34646 வாக்குக்களை வெற்றி பெற்றனர்.

உழைக்கும் மக்களின் சமூக அவசியங்களை எதிர்கொள்ளும் விதத்தில் ஒரு சோசலிச, அனைத்துலகவாத வேலைத் திட்டத்துக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்ட ஒரே கட்சி சோசலிச சமத்துவக் கட்சியே.(SEP) சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர்கள் தமது தேர்தல் பிரச்சாரத்தின் போது ஆயிரமாயிரம் தொழிலாளர்களுக்கும் இளைஞர்களுக்கும் அவர்களின் இன்றைய பிரச்சினைகள் இலாப முறையின் பெறுபேறாக உருவானது எனவும் அதனை ஒரு முதலாளித்துவ சார்பு தொழிற்கட்சி அரசாங்கத்தினால் தீர்த்துக்கொள்ள முடியாது எனவும் விளக்கினர். சோசலிச சமத்துவக் கட்சி ஒரு நிஜமான ஜனநாயக ரீதியிலான தொழிலாளர் அரசாங்கத்தை அமைப்பதற்கான பிரச்சாரத்தினை முன்னெடுத்தது. அதனால் மட்டுமே ஒரு கண்ணியமான தொழிலையும் சுகாதார, கல்வி, வீடமைப்பு வசதிகளையும் வழங்கவும் ஜனநாயக உரிமைகளுக்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கு முடிவு கட்டவும் கூடிய சோசலிசக் கொள்கைகளை அமுல் செய்யவும் முடியும் எனவும் கூறியது. சோசலிச சமத்துவக் கட்சியின் முதலாவது தேர்தல் பிரச்சாரம் வர்க்க நனவு கொண்ட தொழிலாளர்கள் இளைஞர்களிடையே கட்சியின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதிலும் புதிய பிளேயர் அரசாங்கம் பெரும் வர்த்தக நிறுவனங்களின் வேலைத்திட்டத்தை அமுல் படுத்துவதுடன் தவிர்க்கமுடியாத விதத்தில் வெடிக்கும் போராட்டங்களுக்கு தயார் செய்வதிலும் ஒரு முக்கிய படியாக விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்லத் அலுகோசுவை சந்தியில் நிறுத்துவோம்

சோசலிச சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் விஜே டயஸாகிய நான் எழுதும் இந்தக் கடிதம் சோசலிச சமத்துவக் கட்சியை அவமானத்துக்கு உள்ளாக்கி பேராசிரியர் சுச்சரித்த கம்லத்தினால் எழுதப்பட்டு மே 18ம் திகதிய தங்களின் பத்திரிகையின் "மஞ்சுசாவ" சிறப்பு இதழில் பிரசுரிக்கப்பட்டு இருந்த கட்டுரை தொடர்பானதாகும். இக்கட்டுரை வெட்டுக்கள் இல்லாது வெளியிடப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். அது அரசியல் கருத்துவேறுபாடுகள் இருந்த போதும் வெகுஜனத் தொடர்புச் சாதன கலாச்சாரங்களுக்கு இணங்க வழிவந்த எதிர்பார்ப்புக்களுக்கு அமைய தங்களுக்கு நான் விடுக்கும் கோரிக்கையாகும்.

**விஜே டயஸ்**

'தண்டே லூ கினி' தொலைக் காட்சி நாடகம் தொடர்பாக தங்களின் பத்திரிகையில் இடம்பெற்றுவரும் விவாதத்தில் கலந்து கொள்ளும் பேராசிரியர்.சுச்சரித்த கம்லத் எழுதிய கட்டுரையில் எமது கட்சியின் செயற்பாடுகள் தொடர்பாக சில குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு இருந்தன. அது தொடர்பாக விளக்கமளிப்பது எமதும் அதற்கு உரிய பிரசித்தியை வழங்குவது கம்லத்தின் கட்டுரையை வெளியிட்ட தங்களதும் கடமையுமாகும். அவரது குற்றச்சாட்டுக்கள் நிறைந்த பொய் அறிக்கைகளை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றேன்.

**சுச்சரித்தவின் பொய்.1.** "சோசலிச சமத்துவக் கட்சி பியசீலி விஜேகுணசிங்கவை பிடித்து விவாத அரங்கின் நடுவில் தள்ளுகின்றது."

மேற்சொன்ன விவாதத்தில் கலந்து கொள்ளும் நியாயமான உரிமை சோசலிச சமத்துவக் கட்சிக்கோ அல்லது பியசீலி விஜேகுணசிங்கவுக்கோ கிடையாது என இதன் மூலம் சுச்சரித்த கம்லத் காட்டப் பார்க்கின்றார்.அவரின்படி அந்த விதத்தில் கலந்து கொள்வது என்பது "விவாத அரங்கின் நடுவில் தள்ளுவதாகும்." கலை தொடர்பான விவாதங்களில் கலந்துகொள்வதையும் கலந்து கொள்பவர்களையும் தீர்மானிக்கும் சர்வ அதிகாரங்களையும் கம்லத்தின் கைகளில் கையளித்தது யார்? எப்போது? என்ற கேள்வியை நாம் எழுப்ப நேரிட்டுள்ளது. சர்வாதிகாரத்துக்கு செவிமடுக்கும் இத்தகைய வெறும் அறிக்கைகள் மூலம் கம்லத் கலையினதும் கலை விமர்சனங்களதும் எதிரி கோஷ்டியில் இணைந்து கொண்ட ஒருவராக நின்று கொண்டுள்ளதைக் காட்டிக் கொண்டுள்ளார்.

சோசலிச சமத்துவக் கட்சியின் பியசீலி விஜேகுணசிங்க லக்பிம பத்திரிகையில் இடம்பெறும் விவாதத்தில் கலந்துகொள்ளுவது தொடர்பான உண்மை நிலைமையை ஆய்வு செய்கையில் கம்லத்தின் குரைப்புக்கள் எந்தளவுக்கு உலக்கைத் தனமானதும் கேவலமானதும் என்பதும் புரியும்.

தண்டே லூ கினி நாடகம் தொலைக்காட்சியில் காட்சிக்கு வருவதற்கு முன்னதாக இடம்பெற்ற அந்நாடகத்தின் முன்னோடி காட்சியில் கலந்து கொள்ளுமாறு பியசீலி விஜேகுணசிங்கவுக்கு அழைப்புக் கிடைத்தது. அது எமது கட்சியும் அவரும் கலை தொடர்பாகக் காட்டும் அக்கறையையிட்டு தொலைக் காட்சி நாடக கலைஞர்கள் காட்டிய மரியாதையாகக் கொண்டு அதை ஒரு கௌரவமாகக் கொள்கின்றோம். அதன்படி தொலைக்காட்சி நாடகத்தை இரசிப்பதற்குச் சென்ற அவர் அந்த இடத்தில் இடம்பெற்ற சிறு கலந்துரையாடலிலும் சோசலிச சமத்துவக் கட்சியின் சார்பில் தமது கருத்தைத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து அவர் தொலைக்காட்சி நாடகத்தின் காட்சிக்கு விடப்பட்ட பகுதிகளை மட்டுமல்லாது அதை முற்றாகத் தழுவிய ஒரு விமர்சனத்தை கம்கறு மாவத்த பத்திரிகைக்கு வழங்கினார்.

இந்த தொலைக்காட்சி நாடகம் காட்சிக்கு வந்ததும் அதற்கும் அதன் இயக்குனரான சுதத் மஹதிவுல்வவுக்கும் எதிராக நிஹால் பீரிஸ் லக்பிம பத்திரிகையின் மூலம் தொடுத்த தாக்குதல்களின் எதிரில் கலையினதும் கலைஞனதும் உபசரிப்பையும் சமூகச் செயற்பாட்டையும் காக்கும் பொருட்டு லக்பிம ஊடாக தலையிட்டாக வேண்டும் என்ற கோரிக்கை கலைஞர்களிடம் வளர்ச்சி கண்டது. பியசீலி விஜேகுணசிங்க லக்பிமவுக்கு கட்டுரை வரைந்தது இதற்கு இணங்கவேயாகும். இது எப்படி தண்டே லூ கினி பற்றிய விவாதத்தில் பாய்ந்து விழுவதாக முடியும் ?

இதற்கு முரணான விதத்தில் சுச்சரித்த கம்லத்தின் முறைகேடுகள் எப்படி?

நாம் அறிய வந்துள்ளதன்படி தண்டே லூ கினி நாடகத்தின் முன்னோடி காட்சிக்கு சுச்சரித்த கம்லத்துக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது . எனினும் அவர் அதற்கு வருகை தரவில்லை. ஆதலால் அந்த நாடகம் பற்றிய கலந்துரையாடலில் கலந்து கொள்வதை அவர் தவிர்த்துக் கொண்டது அவரின் கோழைத் தனத்தினாலா அல்லது அதைக் கணக்கெடுக் காததாலா என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சம்.



சுச்சரித்த கம்லத்

லக்பிம மஞ்சுசாவ சிறப்பு இதழில் இடம்பெறும் கலந்துரையாடலில் பியசீலி விஜேகுணசிங்கவும் கலந்து கொள்வதைக் கண்டதுதான் தாமதம் மயிர்சிலிர்த்துப் போன கம்லத் சோசலிச சமத்துவக் கட்சிக்கு குற்றச்சாட்டை முன்வைக்கும் கட்டுரையைத் தயார் செய்தார். பாய்ந்து விழுவது என்ற வார்த்தைப் பிரயோகம் பொருத்தமானதாக இருப்பின் அது உண்மையில் சுச்சரித்தவின் பழக்கவழக்கத்துக்கே பெரிதும் பொருத்தமானதும் ஏற்றதும் ஆகும்.

**சுச்சரித்தவின் பொய்.2.** "நான் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இருக்கையில் திவயின பத்திரிகைக்கு நூல் விமர்சனம் செய்ததால் முதலாளித்துவ பத்திரிகை படங்குகளுக்கு எழுதுவதாக தமது பெரும் தலைவர் டேவிட் நோர்த்துடன் சேர்ந்து என் மீது பாய்ந்த அக்கட்சியின் தலைவர்கள் இன்று என்னவோ அவரை விவாத அரங்கின் நடுவில் இறக்கியுள்ளார்கள்"

முதலாவது பாய்ச்சல் கோட்பாட்டை திரையிடுவதற்காக எமது கட்சி செய்த மற்றொரு பாய்ச்சலை கம்லத் தமது வாழ்க்கை கதையுடன் பிணைத்து அங்ஙனம் சமர்ப்பிக்கின்றார்.

இன்று போலவே அன்றும் கம்லத்தின் பத்திரங்கள் பற்றி எமக்கிருந்து வந்த பிரச்சினை அவர் எழுதுவது எங்கிருந்து என்பதை விட அவர் எழுதுவது என்ன என்பதேயாகும். அவர் பிரிவேனாக்களிலும் பல்கலைக் கழகங்களிலும் இருந்து காவிக் கொண்டு வந்த குப்பை கூழங்களையும் ஊத்தைக் கருத்துக்களையும் எழுதி வெளியிட்டு எமது கட்சியின் கம்கறு மாவத்த பத்திரிகையையும் ஒரு படங்காக்கிவிட அவர் எடுத்த முயற்சிகளுக்கு எதிராக கட்சியினுள் என்றும் உறுதியான போராட்டம் இடம்பெற்று வந்தது. பேராசிரியராக இருந்த போதிலும் அவரை மார்க்சிஸ்டாக்குவதற்காக எடுத்த முயற்சியை வேலைத் திட்டத்தில் இருந்து ஆரம்பிக்க நேரிட்டது. எனினும் அவர் அதில் இருந்து கற்றுக் கொண்டது எதுவும் கிடையாது என்பது அம்பலமானது. முதலாளி வர்க்கத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட படிப்பறிவின்மையுடன் முதலாளித்துவ சார்பு தன்மையும் சேர்ந்து கொண்டதும் அது எடுக்கும் கோலம் மிகவும் நச்சுத்தனமானது.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் செய்தது சுச்சரித்த கம்லத்தின் மீது பாய்ந்து விழுவது அல்ல; அவர் கட்சி விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் மீறிய போது கட்சியில் இருந்து அவரை விலக்குவதே. அது எந்த ஒரு கொள்கைப்பற்றான கட்சி என்றாலும் எடுக்கும் நடவடிக்கையாகும். அதையிட்டு பல இடங்களிலும் பல தருணங்களிலும் பகிரங்க அறிக்கைகள் மூலம் எமது கட்சி சம்பந்தப்பட்ட விடயங்களை பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சியை "அதிரடிப் பாய்ச்சல் இராணுவமாக" சாயம் பூச சுச்சரித்த கம்லத் எடுக்கும் முயற்சி காட்டுமிராண்டி உள்நோக்கங்களைக் கொண்டதாகும். முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் சார்பில் மார்க்சிச சோசலிச இயக்கத்துக்கு எதிரான வேட்டைக்கு தூண்டுவதாகும். ஆளும் வர்க்கத்துடனும் அதன் கொலைகார வேலைகளுடனும் அணிதிரண்டு கொள்வதற்கு கம்லத் காட்டிய அக்கறை அவரை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இருந்து கலைத்துவிட இட்டுச்சென்றது எனக் குறிப்பிடுவதற்கும் இடமளியுங்கள். அவர் அச்சமயத்தில் கொலைகார யூ.என்.பி.அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சருடன் ஒரே மேடையில் ஏறியமை அதற்குக் காரணமாகும்.

இந்த நெறிமுறை தற்போது நச்சுத்தனமான வடிவம் எடுத்துள்ளது என்பதை கம்லத் காட்டிக் கொண்டுள்ளார்.

கம்லத்தின் பொய்.3."விவாத அரங்கில் பாய்ந்து அவர் (சோசலிச சமத்துவக் கட்சியின் வழிநடாத்தலின் கீழ் பியசீலி விஜேகுணசிங்க) என்ன செய்கின்றார்? முழு மார்க்சிசத்தையும் அவமானத்துக்கு உள்ளாக்கும் விதத்தில் வன்முறை அறிக்கைகள் சிலவற்றை அளவுகணக்கின்றி நான்கு புறத்திலும் வீசுகின்றார். அவர் சிருஷ்டித்துள்ள பிரமாண்டமான தடுமாற்றங்களை தெளிவுபடுத்துவதற்கு இது இடமல்ல. அதற்காக இத்தகைய சில கட்டுரைகள் ஏனும் எழுத வேண்டும். அது வேறு இடத்தில் இடம்பெறும்."

கம்லத்தின் இந்த வாக்கியம் "ஆடத்தெரியாதவள் நிலம் கோணல் என்றாளாம்" என்ற பழமொழியையே நினைவுக்குக் கொணர்கின்றது. கம்லத்தின் இந்த மார்க்சிச விரோத அலம்பல்கள் கலைத்துறையிலும் அவ்வாறே அரசியல் அரங்கிலும் சிருஷ்டிக்கும் நாசங்களை அம்பலப்படுத்தி "சுச்சரித்த கம்லத்துக்கு எதிரான மார்க்சிச கலை விமர்சன அடிப்படைக் கொள்கைகள்" என்ற பெயரில் 336 பக்கங்களைக் கொண்ட நூல் பியசீலி விஜேகுணசிங்கவினால் வெளியிடப்பட்டு இரண்டு வருடங்களும் ஒரு மாதமும் கடந்து விட்டது. அதற்குப் பதிலளிக்க கம்லத்துக்கு இன்னமும் இடம் கிடைக்கவில்லை. இந்தக் கோழைத்தனமான மௌனத்தின் மூலம் பலவற்றை பூசிமெழுக ஊழையிட்டதன் பின்னர் லக்பிம வாசகர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ கம்லத்திடம் இருந்து எதையும் கேட்க வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்ப்பது கஷ்டம். எனினும் நாம் மீண்டும் சவால் செய்கின்றோம்: கம்லத் பதிலளி ! மீளப் பதிலளிக்க இடம் உண்டு!

**சுச்சரித்தவின் பொய்-4** "அவர் போட்டு உடைக்கும் முரட்டுத்தனமான அறிக்கைகளினால் மார்க்சிசமும் ட்ரொட்ஸ்கிசமும் கலை விமர்சனம் சம்பந்தமாக காலாவதியாகிவிட்டது எனக் கூறுவதற்கு நிஹால் பீரிஸ் முயற்சிக்கின்றார்."

தண்டே லூ கினி தொலைக்காட்சி நாடகத்துக்கும் மார்க்சிசத்துக்கும் தாக்குதல் நடாத்தும் பொருட்டு நிஹால் பீரிஸ் முன்வந்தது பியசீலி விஜேகுணசிங்கவின் கடிதம் லக்பிம பத்திரிகையில் வெளிவருவதற்கு முன்னராகும். ஆதலால் சுச்சரித்த கம்லத் எமது கட்சிக்கும் பியசீலி விஜேகுணசிங்கவுக்கும் தாக்குதல் தொடுக்கும் பொருட்டு சம்பவங்களையே திரித்துவிடுகின்றார்.

தொலைக்காட்சி நாடகத்தை தாக்கிய நிஹால் பீரிசை பியசீலி விஜேகுணசிங்க பண்பாக்கம் செய்தது கலைக்கு எதிரான முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட ஒரு கைப்பொம்மையாகவாகும். அதன் வழிநடாத்தல் சக்தி முதலாளித்துவ பிற்போக்கே தவிர மார்க்சிஸ்டுகளது தவறுகளோ அல்லது குறைகளோ அல்ல. மார்க்சிஸ்டுகள் தாக்குதலுக்கு உள்ளாகுவது அவர்களது தவறுகள், குறைகள் காரணமாகவே எனக் கூறிக்கொள்ளும் கைக்கூலிகள் முதலாளி வர்க்கத்தின் சார்பில் நின்றுவரும் கையாட்களேயாகும். மார்க்சிஸ்டுகளின் தலையில் ஓங்கி அறைவதற்கான சம்மட்டியை கைக்கோடரியாக்குவதே அவரின் முயற்சியாக உள்ளது. எனவேதான் அவர் சம்மட்டியின் உதவிக்கு வருகின்றார்.

கம்லத் நிஹால் பீரிஸ் பற்றிக் குறிப்பிடுவதைச் சற்று பாருங்கள்: "இந்த எழுத்தாளன் மார்க்சிசத்தையும் அதன் தொடர்ச்சியான ட்ரொட்ஸ்கிசத்தையும் நன்கு ஆய்வு செய்து கொண்டு அவதானத்துடன் விடுக்கும் ஒரு அறிக்கையா என்பது வேறொரு பிரச்சினையாகும். நான் அதனை இங்கு எழுப்பவில்லை. " கம்லத்தின் அறிக்கையின்படி மார்க்சிசத்தை தாக்குவோர் அங்ஙனம் செய்வது தமது எதிர்ப்பாளர்களின் மீது கொண்ட செமிபாடாகாத அஜீரணத்தினாலாகும். அவற்றை ஜீரணித்துக் கொண்ட ஒருவராக தம்மைக் கணித்துக் கொள்ளும் கம்லத் தமக்கு அதற்கான பெரிதும் தகுதி இருப்பதாகக் காட்டிக் கொள்கின்றார். இது மார்க்சிசத்துக்கு எதிரான கைக்கூலிகள் தம்மை ஏலத்தில் விற்பனை செய்யும் ஒரு பிரயத்தனமாகும் என நாம் அடித்துக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

மார்க்சிசத்தை கைகழுவிவிட்ட ஒருவர் என்ற வகையில் மார்க்சிசத்தை தாக்க தமக்குள்ள மேலதிகத் தகுதிகளை காட்டிக்கொள்ளுவதால் கம்லத் மார்க்சிச வேஷம் போட்டு நாட்டியம் ஆட மட்டும் இதை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொள்ள இடமளிப்போம். அதைப்பற்றிய நீண்ட தெளிவுபடுத்தல்களை முன்வைப்பதை நாம் தவிர்த்துக் கொள்ளக் காரணம் தங்கள் பத்திரிகை அதற்கு இடமளிக்குமா என்பது தொடர்பாக எமக்குள்ள சந்தேகமேயாகும். தங்கள் அனுமதி கிடைக்குமானால் எதிர்வரும் இதழ்களில் அவற்றை முன்வைக்க நாம் தயார் என்பதைக் குறிப்பிட்டுவிட்டு மார்க்சிசத்தை திரிபுசெய்வதில் ஈடுபட்டுள்ள சுச்சரித்த கம்லத்தின் கட்டுரையில் அடங்கிய அநாகரிகமான கூற்றுக்களை மட்டும் இங்கு குறித்து வைக்கின்றோம்.

1. "இவை (பளம் சமுதாயத்தின் கலை) செய்யப்பட்டது கலைச் சிருஷ்டிக்கான அபிலாசைகளினால் அல்ல. சாந்திக் கருமங்களுக்காகவே. அவற்றின் செல்வாக்கினால் எதிர்வரும் வேட்டைகள் நிறைவேறும் எனச் சகலரும் நம்பினர்."

---

சுதத் மகாதிவுல்வவவினால் நெறிப்படுத்தப்பட்ட தண்டே லூ கினி என்ற தொலைக்காட்சி நாடகம் லங்கா சமசமாஜக் கட்சியின் தோற்றம், வளர்ச்சி, சீரழிவினைக் காட்ட எழுந்த ஒரு முயற்சியாகும். இதற்கு எதிரான வலதுசாரித் தாக்குதல்கள் லக்பிம பத்திரிகையில் நிஹால் பீரிஸ் என்பவரால் எழுதப்பட்டு இருந்தது. திலக் ஜயரத்னவின் திரைக் கதை வசனத்தில் உருவான இந்நாடகத்தின் ஆய்வுகளும் அரசியல் பார்வைகளும் என்னதான் குறைபாடுகளைக் கொண்டிருந்த போதிலும் அவை இந்நாட்டில் சுயாதீனமான தொழிலாளர் வர்க்கப் புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்ப ட்ரொட்ஸ்கிஸத்தின் தலைமையில் இடம்பெற்ற போராட்டத்தினையும் தலைமைகளின் காட்டிக்கொடுப்களால் ஏற்பட்ட நிலைமைகளையும் சித்தரிப்பதாக அமைந்துள்ளது.. இந்த நாடகம் தொடர்பாக லக்பிம பத்திரிகையில் இடம்பெற்றுவரும் விவாதத்தில் பேராசிரியர்.சுச்சரித்த கம்லத் சோசலிச சமத்துவக் கட்சிக்கு எதிரான சேறடிப்புக்களில் ஈடுபட்டார். இதற்குப் பதிலாக சுச்சரித்த கம்லத்தின் பிற்போக்கையும் மார்க்சிச வேடங்களையும் அம்பலமாக்கி சோ.ச.க.,பொதுச் செயலாளர் விஜே டயஸ் லக்பிம ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இத்துடன் பிரசுரமாகின்றது.இதனை லக்பிம (ஜூன் 8)"சுச்சரித்த கம்லத் மார்க்சிஸ்டா? விஜே டயசிடம் இருந்து கம்லத்துக்கு" என்ற தலைப்பில் வெளியிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வீ.பி. பாசிஸ்டுகளால் படுகொலை செய்யப்பட்ட தோழர்.கிறேஷன் நினைவு நீடூழி வாழ்க!

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சிலாபக் கிளை அங்கத்தவரான தோழர்.கிறேஷன் கீகியனகே படுகொலை செய்யப்பட்டு 1997 ஜூன் 23ம் திகதியுடன் எட்டு ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. சோ.ச.க.இந்த அனைத்துலகவாத ட்ரொட்ஸ்கிச போராளிக்கு தனது புரட்சிகர அஞ்சலிகளைச் செலுத்துகின்றது. தோழர் கிறேசனின் போராட்டத்தை நினைவு கூரும் முகமாக ஜூன் 18ம் திகதி மாலை 4 மணிக்கு சிலாபம் தொடுவாவை புனித அந்தோனியார் வீதியில் நினைவுதினக் கூட்டம் நடாத்த சோ.ச.க.ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தோழர்.கிறேஷன் பாசிச ஜே.வீ.பி.கொலைகாரர்களால் கொலை செய்யப்பட்ட மூன்றாவது பு.க.க.உறுப்பினராவார். இதற்கு முன்னதாக 1988 நவம்பர் 12ம் திகதி வெலிமடை பு.க.க. அங்கத்தவர் ஆர்.ஏ.பிட்டவெலவும் டிசம்பர் 23ம் திகதி கண்டி அங்கத்தவரான பீ.எச்.குணபாலவும் ஜே.வீ.பி. பாசிஸ்டுகளால் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. 1989 ஜூன் 23ம் திகதி மாலை தோழர் கிறேஷியனின் வீட்டுக்கு வந்த ஜே.வீ.பி.கொலைகாரர்கள் கிறேஷியனின் மூத்த சகோதரரும் பு.க.க. முன்னணி அங்கத்தவருமான நிஹால் கீகியனகேயைப் பற்றி விசாரித்துள்ளனர். கொலைகாரர்களின் இலக்கு நிஹால், கிறேஷன் இருவரையும் கொலை செய்வதாக விளங்கியது. அச்சந்தர்ப்பத்தில் நிஹால் வீட்டில் இல்லாததோடு வீட்டிற்கு வந்தவர்களையிட்டு கிறேஷனுக்கு சந்தேகமும் ஏற்பட்டது. இதனால் அவர்களை தடுத்து விசாரிக்க முற்பட்டார். இச்சமயத்தில் தாம் மறைத்து வைத்திருந்த கைத்துப்பாக்கியை வெளியில் எடுத்து கிறேஷனை சுட்டுவிட்டு, சைக்கிளில் ஓடித்தப்பினர். காயமடைந்த கிறேஷன் உடனடியாக நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அங்கு அவசர சிகிச்சை அளிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால் அவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு , சத்திரசிகிச்சைக்கு உள்ளானார். எனினும் ஒரு சில மணித்தியாலங்களுள் கிறேஷன் மரணமானார்.



கிறேஷன்

கிறேஷன் கொலை செய்யப்பட்டது அன்று ஆட்சியில் இருந்து வந்த முதலாளித்துவ யூ.என்.பி. அரசாங்கமும் பாசிச ஜே.வீ.பி.யும் ஆளுக்காள் இணைந்த விதத்தில் நாடு பூராவும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக கொலைகார பயங்கர இயக்கத்தினை நடாத்தி வந்த ஒரு நிலைமையிலாகும். ஜே.வீ.பி. முதலாளித்துவ அரச இயந்திரத்தில் பாய்ந்து கொள்வதற்காக யூ.என்.பி.அரசாங்கத்துடன் இரத்தம் தோய்ந்த கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டு வந்த அதேவேளையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பயங்கர இயக்கத்தில் யூ.என்.பி.யுடன் சிறப்பாக ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் இணைந்து செயற்பட்டனர் என்பதை ஜே.வீ.பி. தலைவர்கள் பன்முறை பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளனர். ஜே.வீ.பி.முதலாளி வர்க்கத்தின் கைத்தேங்காயாக பொதுமக்களுக்கு எதிராக பாசிச ஆயுதமாக செயற்பட்டு வந்ததன் பேரில் பெரும் கப்பமாக ஆட்சியாளர்களிடம் அரசியல் அதிகாரத்தில் உயர் பதவிகளைக் கேட்டு வந்தனர்.இந்நிலைமையினுள் கிராமப்புற இளைஞர்களை கொன்று தள்ளியதோடு ஜே.வி.பி.தலைவர்களையும் ஆதரவாளர்களையும் கொன்று தள்ளும் இயக்கத்தை பிரேமதாச அரசாங்கம் விஸ்தரித்தது.

இன்று ஜே.வீ.பி.காரர்கள் மீண்டும் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் தமது ஜனநாயக அரசியலைப் பற்றிய பல்வேறு கூச்சல்களுக்கு மத்தியில் இனவாத பாசிச தன்மையைக் காட்டிக் கொண்டுள்ளது.

தோழர்.கிறேஷன் ஜே.வி.பி. பாசிஸ்டுகளுக்கும் யூ.என்.பி.அரசாங்கம் உட்பட்ட முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்கும் எதிராக தமது உயிரைத் தியாகம் செய்து பேணிக்காத்தது சோசலிச அனைத்துலகவாத முன்னோக்குக்கும் வேலைத்திட்டத்துக்குமான போராட்டமாகும். அவரின் இந்த கொள்கைப்பிடிப்பான போராட்டத்தின் படிப்பினைகளை புரிந்து கொண்டு , சோசலிச சமத்துவக் கட்சியுடன் இணையுமாறும் சோசலிச அனைத்துலகவாத முன்நோக்குக்கும் வேலைத் திட்டத்துக்குமான போராட்டத்துக்குத் தோள் கொடுக்குமாறும் நாம் தொழிலாளர்களையும் இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

## களனி பல்கலைக் கழகத்தில்

# ஜே.வீ.பி.குண்டர்கள் தாக்குதல்

ஏப்பிரல் 28ம் திகதி களனி பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீட மாணவர் சங்கத் தலைவர்கள் உட்பட்ட மாணவர் குழுவின் மீது பாசிச ஜே.வீ.பி. கும்பல் துவக்குகள், வாள்கள், சைக்கிள் செயின்கள், மணல்நிரப்பிய போத்தல்களைக் கொண்டு தாக்குதல் நடாத்தியுள்ளது. இந்த கொலைகாரத் தாக்குதலை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதையும் பாசிசக் குண்டர்கள் மீண்டும் களத்தில் இறங்கியுள்ளதை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் ஒரு தீர்க்கமான அரசியல் பிரச்சினையாக மனங்கொண்டாக வேண்டும் எனவும் வேண்டுகின்றது.

இந்தக் குண்டர் தாக்குதலினால் சுமார் 15 களனிப் பல்கலைக் கழக மாணவர் கடும் காயமடைந்ததோடு கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் அனுமதிக்கப் பட்டனர். இவர்களுள் சமந்த என்ற மாணவரின் நிலைமை ஆபத்தானதாக உள்ளது. விஞ்ஞான பீட மாணவர் சங்கத் தலைவர் ஹேரத்தும் சிகிச்சைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களுள் அடங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர் சங்க செயலாளர் நாளக சிரிவர்தன, பத்திராதிபர் ஹேமந்த ஆகியோரும் காயமடைந்தனர்.

ஜே.வீ.பி.யின் இந்த குண்டர் தாக்குதல் நன்கு திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டதாகும். தமக்கும் இந்தத் தாக்குதலுக்கும்



அனுருத்த ஹேரத்



சமந்த பேர்னாந்து

தொடர்பில்லை என ஜே.வீ.பி.செயலாளர்.ரில்வின் சில்வா விடுத்துள்ள அறிக்கை கோயபெல்ஸ் பாணியிலான பொய்யாகும். தாம் "ஜனநாயகத்துக்கு அர்ப்பணம் செய்துகொண்ட "அமைப்பென அவர் கூறிக்கொண்டிருப்பது 1988-90 காலங்களில் ஜே.வீ.பி.நடாத்திய பயங்கரங்களை நினைவுபடுத்தவது மட்டுமன்றி அது மீண்டும் அத்தகைய ஒரு தாக்குதலுக்கு ஆயத்தமாகி வருவதைக் காட்டிக் கொண்டுள்ளது. யூ.என்.பி.அரசாங்கம் வடக்கு-கிழக்கில் இனவாத யுத்தத்தினை தொடுத்திருந்த வேளையில் தெற்கில் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் கிளர்ச்சி அடைந்துவந்த நிலையில் பாசிச இயக்கம் அன்று தொடுக்கப்பட்டது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர்வதற்கு முண்டு கொடுத்த ஜே.வீ.பி.க்கு இன்று அரசாங்கமும் பொலிஸ் மா அதிபரும் மற்றும் உயர் பதவிகளில் உள்ளோரும் நறசான்றிதழ்கள் வழங்கி வருகின்றனர். முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் "ஜனநாயக நீரோட்டத்தினுள் இணைந்து கொண்டுள்ளதாக" பிரச்சாரம் செய்வதன் மூலம் ஜே.வீ.பி.யின் நிஜ அரசியல் வரலாற்றை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் இருந்து பூசிமெழுக முயற்சிக்கின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக களனிப் பல்கலைக் கழக மாணவர் சங்கம் மே 2ம் திகதி வெளியிட்ட ஒரு அறிக்கையில் : "இன்று பல்கலைக் கழகத்தினுள் இடம்பெறும் ஜே.வீ.பி.சர்வாதிகார காடைத்தனம் கொண்ட அரசியலுக்கு அரசாங்கமும் பல்கலைக்கழக அதிகாரிகளும் ஊக்கமளிப்பதாக" குறிப்பிட்டுள்ளது. சோசலிச சமத்துவக் கட்சி அரசியல் குழு மே5ம் திகதி வெளியிட்ட கண்டன அறிக்கையில் களனி பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற பயங்கரத் தாக்குதல் மாணவர்களுக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல எனவும் மாணவர்களுக்கு எதிராகத் தோன்றியுள்ள இந்த தாக்குதல் மூலம் அனைத்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஆபத்து தலைநீட்டி உள்ளதாகவும் சுட்டிக்காட்டி உள்ளது.இந்த மாணவர்களைக் காக்கவும் அவ்வாறே தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்புக்காகவும் முன்நிற்றல் தொழிலாளர் வர்க்கத்தின் பொறுப்பாகும் எனவும் இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

---

இது மேலாடை உடுத்தோரும் உரிந்தோரும் கலையைப் பற்றிக் கொண்டுள்ள நிலைப்பாடே தவிர மார்க்சிஸ்டுகளின் நிலைப்பாடு அல்ல.

2. "வாழ்க்கை நடாத்தச் சகலரும் தொழில் செய்வது அவசியமற்ற இடத்தில் முன்னர் இருந்திராத ஒன்று தோன்றுகின்றது. அதாவது : உழைப்பு பகுப்பு . முதலாவது உழைப்பு பகுப்பு . உடல், மூளை உழைப்பு பகுப்பாகும்."

உடல், மூளை உழைப்பு பகுப்பு ஏற்படுவதற்கு பல காலங்களுக்கு முன்னரே பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையே உழைப்பு பகுப்பு இடம்பெற்றது என்பது மார்க்சிஸ்டுகளின் நிலைப்பாடாகும். கம்லத் முன்வைப்பது உழைப்பு பகுப்புக்கும் மனம்(உள்ளம்)முற்பட்டதாக விளங்கியது என்ற அகநிலையான விசித்திரமான கருத்தியல்வாதமாகும்.

3."நிலம், இயந்திரம், உபகரணங்கள் முதலான உற்பத்தி மூலங்கள் கொண்ட ஆளும் வர்க்கம் அவர்கள்(பெரும்பான்மை ஜனத்தொகை) உற்பத்தி செய்பவற்றில் பெரும்பங்கை சுரண்டிக் கொள்கின்றார்கள்."

கம்லத்தின் இந்தக் கருத்து கற்பனா சோசலிஸ்டுகளிற்குச் சமசமானதே தவிர மார்க்சிஸ்டுகளின் கருத்துக்கு அல்ல. மார்க்சிச விஞ்ஞான சோசலிஸ்டுகளின்படி உற்பத்தி சாதனங்களின் உடமையாளர்கள் சுரண்டிக் கொண்டும் தொழிலாளர்களின் உழைப்புச் சக்திக்கு விலை செலுத்தப்படாத உபரிப் பெறுமானமேயாகும். இந்த உபரிப் பெறுமானம் தொழிலாளிக்கு செலுத்தப்பட்ட விலையைவிடக் கூடிய இடங்களில் போலவே குறைந்த இடங்களிலும் ஒருவாறே உழைப்பு சுரண்டப்படுகின்றது.

4."வேலை செய்யாமை, ஏனையவர்களின் கலை(?) உற்பத்தியாளர்களை பராமரித்தலாகும். இவை அவர்களுக்கு (கலைஞர்களுக்கு) மன உழைச்சல்கள் இல்லாமல் கலைப்படைப்பில் ஈடுபட சுவர்க்கமாகும்."

இது நிலவும் சமூக நிலைமைகளுக்கு ஏற்பக் கலைஞன் வேஷம் போட்டோர், போராடுவோர் உரத்த குரலில் விடுக்கும் அறிக்கையே தவிர தம்மைச் சூழ இருந்து கொண்டுள்ள நச்சுத்தனமான சமூக நிலைமைகளை தூக்கி வீசும் அவசியத்தினால் தள்ளப்பட்டு அப்பணியில் இறங்கிய எவரையும் பொறுத்த வரையில் உண்மையானது அல்ல.

இது சுச்சரித்த கம்லத்தின் கட்டுரையின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ள நான்கு பந்திகளில் வரும் நான்கு பிழைகளாகும்

இந்த விடயங்களை விளக்கியும் தெளிவுபடுத்தியும் காட்டுவதற்கு உங்கள் பத்திரிகையில் வழங்கக் கூடிய இடத்தை தங்கள் தரப்பில் முடிந்த மட்டும் உறுதி செய்யும்முகமாக தங்கள் புதினப் பத்திரிகையில் இடம் ஒதுக்கும் சிரமத்தை தங்களுக்கு ஏற்படுத்தாது இருக்க இக்கடிதத்தை இத்துடன் நிறுத்துகின்றேன். நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாசிசமும் மாபெரும் யூத மக்கட் படுகொலைகளும்

## டானியல் கோல்ட்ஹகனின் Hitlers willing Executioners என்ற நூல் பற்றிய விமர்சன ஆய்வு

·மிச்சிக்கன் மாநில பல்கலைக் கழகத்தில் சோசலிச சமத்துவக் கட்சியின் தேசிய செயலாளர் டேவிட் நோர்த் நிகழ்த்திய விரிவுரை

### மாபெரும் யூதப் படுகொலைகளும் சமகால அரசியல் நனவும்

மூன்றாவது றைக் (Third Reich) எனப்பட்ட ஹிட்லரின் ஆட்சி வீழ்ச்சி கண்டு அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் கடந்துவிட்டது. மனித இனம் இன்னமும் அந்தப் பயங்கரங்களதும் காட்டுமிராண்டித்தனங்களதும் உரித்துக்களைத் தோற்கடிக்க முயன்று கொண்டுள்ளது. 1945ன் வசந்தகாலத்தில் நாசி படுகொலை முகாம்களின் கதவுகள் திறந்ததோடு அம்பலமான பரந்த படுகொலைகள் மனிதஇனத்தின் நனவில் இருந்து என்றுமே அழித்துவிடமுடியாத காட்சிகளாகப் படிந்து போயுள்ளன. எனினும் ஆஸ்விட்ஸ்() ட்ரிபிளின்கா() பேர்கன்-பெல்சன்() புச்சன்வால்ட்() டச்சேயில் இழைக்கப்பட்ட மனிதஇனத்துக்கு எதிரான அட்டூழியங்களை சதா மறக்காதிருப்பது மட்டும் போதுமானதல்ல. அந்த அட்டூழியங்களின் சிறப்பு முக்கியத்துவத்தையும் அர்த்தத்தையும் புரிந்து கொள்வது முக்கியத்துவத்தில் எந்த வகையிலும் குறைந்ததல்ல.

இங்கு நாம் ஒரு பயங்கரமான பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றோம். இந்தக் ஹொலோகோஸ்டைப் (யூத மக்கட்" படுகொலைகள்) பற்றி என்னதான் கூறப்பட்டாலும் குறிக்கப்பட்டாலும் அது இன்னமும் விசித்திரமான முறையில் பூசிமெழுகப்பட்ட ஒரு நிகழ்வாகவே இருந்து கொண்டுள்ளது. இந்தக் ஹொலோகோஸ்டைப் பற்றி அனுபவவாயிலாக பெருமளவிலான தரவுகள் திரட்டப்பட்டிருப்பது உண்மை. நாசிகள் தாம் பிரேரித்த "இறுதி தீர்வு" அல்லது ஆறுகோடி ஐரோப்பிய யூதர்களை கொலை செய்வதை ஒழுங்கு செய்து அமுல்படுத்திய விதத்தினை பற்றிய விரிவான தகவல்கள் எம்வசம் உள்ளன. எனினும் ஹொலோகோஸ்ட் எனப்பட்ட இதைப் புரிந்து கொள்வதற்கு மையமான பிரச்சினைகள்- அதன் வரலாற்று ஊற்றுவாய், அரசியல் காரணிகள், இறுதியாக இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் அதற்குரிய இடம் ஒரு சில சந்தர்ப்பங்களைத் தவிர மிகவும் அற்மாகவே கையாளப்பட்டுள்ளன. உண்மையில் இதுவோர் சகிக்க முடியாத நிலைமையாகும். ஹொலோகோஸ்டினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள மிகவும் அடிப்படைப் பிரச்சினையான "இது ஏன் நடைபெற்றது " என்பதற்கு பதிலிறுப்பது பெரிதும் கஷ்டமானது.

ஹொலோகோஸ்ட் எவ்வளவு பயங்கரமான ஒரு சம்பவம் எனக் கூறின் அதை எந்த விதத்திலும் தர்க்க ரீதியிலான முறையில் விளக்க முடியாது என்ற வாதத்தின் மூலம் நியாயப்படுத்தப்படுகின்றது. அடோர்னோ கூறியது போல் ஆஸ்விட்சின் பின்னர் கவிதை எழுதுவது முடியாததாயின் மனிதனின் சமூக- அல்லது நன்கு சரியாகச் சொன்னால் -சமூக விரோத நடவடிக்கைகளை உந்தித் தள்ளும் சக்திகளை புரிந்து கொள்ள வரலாற்றாசிரியர்களுக்கு உள்ள சக்தியையிட்டு அவ்வளவு நம்பிக்கை வைப்பதும் தொடர்ந்தும் முடியாத ஒன்றாகும். அத்தகைய அடையாளம் காணமுடியாத நாசங்களின் எதிரில் வரலாற்று விஞ்ஞானமும் அரசியல் கோட்பாடும் உதவாக்கரையானவையாகத் தோன்றியது.

இதன்படி இக்கருத்துக்களைக் கொண்டவர்களுக்கு மூன்றாவது றைக்கின் தோற்றத்துக்கு முன்னைய ஜேர்மன், ஐரோப்பிய சமூகங்களின் பொருளாதார அடிப்படையையும் வர்க்க அமைப்பையும் அரசியல் போராட்டங்களையும் ஆய்வு செய்வதன் மூலம் அடையக்கூடிய அவ்வளவு முக்கியமானது எதுவும் இருக்கவில்லை. அத்தகைய ஒரு விஞ்ஞானரீதியான ·சடவாத அணுகு முறையானது மனிதனின் ஆத்மாவினுள் அல்லது மனோநிலையினுள் ஆழமாக ஊடுருவிக் கொண்ட மனித நாசங்களின் சக்திகள் தவிர்க்கமுடியாத விதத்தில் மேலெழுந்து நாகரீகத்தின் செல்வாக்கின் மீது ஆதிக்கம் கொண்ட ஒரு சமூக பின்னணியினை வழங்கும்.

1950பதுகளில் எழுதப்பட்ட ஒரு நாவல் மனித நிலைமையின் இந்த இருள்படிந்த பார்வையை ஊக்குவித்தது. உங்களில் பலர் வில்லியம் ஹோல்டிங் எழுதிய (Lord of the Flies) ஈக்களின் அதிபதி என்ற நாவலுடன் பரீட்சயமானவர்களாக இருப்பீர்கள் என நான் நம்புகின்றேன். அது காட்டுமிராண்டித்தனம் மனிதஇனத்தின் இயற்கையான ஒரு நிலைமையென வாதிட்டது. ஒரு சாதாரண பாடசாலை மாணவர் குழுவை நாகரீகத்தின் பிடிகளில் இருந்து விடுவித்தால் அவர்கள் படுகொலைக் காட்டுமிராண்டி நிலைமையை நோக்கி குறைந்த பட்சம் ஒரு சில கிழமைகளுக்குள் பின்வாங்குவர். இந்த மனிதஇன விரோத நூல், ஹோல்டிங் இரண்டாம் உலக யுத்த அனுபவங்களில் இருந்து பெற்ற முடிபுகளில் இருந்து வெளிப்பட்டது."தேனீ தேன் உற்பத்தி செய்வது எப்படியோ அப்படியே மனிதனும் நாசத்தினை உற்பத்தி செய்கிறான் என்பதைப் புரிந்து கொள்ளாமல் இக்காலப் பகுதியினுள் பயணம் செய்த எவரும் ஒன்றில் குருடனாக இருக்க வேண்டும் இல்லையேல் அவரின் தலை குழம்பிப் போயிருக்க வேண்டும்" என அவர் பின்னர் எழுதுகின்றார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பயங்கரங்களால் தூண்டிவிடப்பட்ட திகைப்பும் அவநம்பிக்கையும் Lord of the Flies என்ற நூலின் பிரபல்யத்தின் மூலம் வெளிப்பாடாகியது. இந்த மனோநிலையானது யுத்தத்தினைத் தொடர்ந்து வந்த அரசியல் உறவுகளினால் பலப்படுத்தப்பட்டது. உண்மையில் 1945க்கு முன்னைய காலத்தில் இருந்ததைவிட 1945க்குப் பின்னைய காலத்தில் மூன்றாம் றைக்கின் தன்மைபற்றிய புறநிலை ரீதியான கலந்துரையாடலில் ஈடுபடுவது பெரிதும் கஷ்டமாகியது. குளிர் யுத்தத்தின் பிற்போக்கு அரசியல் சூழ்நிலையினுள் - சிறப்பாக அமெரிக்காவினுள் பாசிசத்துக்கும் நவீன முதலாளித்துவத்துக்கும் இடையேயான உறவுகளைப் பற்றி தேவைக்கும் அதிகமாக தீர்க்கமான முறையில் பேசுவது பொருத்தமற்ற ஒன்றாகக் கொள்ளப்பட்டது.

1930பதுகளில் அரசியல் அறிவுபடைத்தவர்களும் வர்க்க நனவு கொண்டவர்களும் முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஐரோப்பிய பாசிசத்தின் எழுச்சி- பரந்த சோசலிச தொழிலாளர் இயக்கத்தினால் முதலாளித்துவ சமுதாயத்துக்கு உருவான புரட்சிகர ஆபத்துக்களின் ஒரு நேரடி விளைவாகவே தோன்றிற்று என்பதை புரிந்து கொண்டிருந்தனர்.

பாசிசம் என்பது கதிகலங்கிப் போன மத்தியதர வர்க்க குட்டி முதலாளித்துவங்கள் அரசியல் ரீதியில் சோசலிச தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்கு எதிராக முதலாளி வர்க்கத்தின் நலன்களின் பேரில் எதிர்ப்புரட்சி ரீதியில் அணிதிரள்வதாகும் என்பது முசோலினியின் இத்தாலி, ஹிட்லரின் ஜேர்மனி, பிராங்கோவின் ஸ்பெயினின் உதாரணங்கள் தேவைக்கு அதிகமாக நன்கு தெளிவுபடுத்திக் காட்டியிருந்தன. பாசிசம் ஆட்சிக்கு வந்த இடங்களில் தொழிலாளர் வர்க்கம் ஒரு அணிதிரண்ட அரசியல், சமூக சக்தியாக விளங்குவது ஒழிந்து போயிற்று.

1930பதுகளில் பரந்த அளவில் புரிந்து கொள்ளப்பட்டிருந்தது முதலாளித்துவத்துக்கும் பாசிசத்துக்கும் இடையேயான உறவுகள் மட்டும் அல்ல. உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடி மத்தியதர வர்க்கத்தினை நாசமாக்கி, அதனைப் பாசிசத்தின் பிடிக்குள் தள்ளியதோடு, யூதர்களை உடல்ரீதியாக ஒழித்துக்கட்ட அச்சுறுத்திக் கொண்டுள்ளதாகவும் சோசலிஸ்டுகள் மீண்டும் மீண்டும் எச்சரித்து வந்தனர்.

1940ல் லியொன் ட்ரொட்ஸ்கி எழுதியது போல் : "நாசமாகி வந்த வெளிநாட்டு வர்த்தகத்தினதும் வீழ்ச்சிகண்டு வந்த உள்நாட்டு வர்த்தகத்தினதும் காலப்பகுதி அதேசமயத்தில் சோவினிசத்தினதும் சிறப்பாக யூதர் எதிர்ப்பினதும் பயங்கரமானதுமான உக்கிரமான காலப் பகுதியாகவும் விளங்கியது. முதலாளித்துவம் தனது எழுச்சிக் காலத்தில் யூதர்களை சேரிகளில் இருந்து எடுத்து அவர்களை அதனது வர்த்தக விஸ்தரிப்புக்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தியது. இன்று வீழ்ச்சிகண்டு வரும் முதலாளித்துவ சமுதாயம் யூதர் மக்களை சகல துவாரங்களில் இருந்தும் இழுத்தெடுத்து நசுக்கத் தள்ளப்பட்டுள்ளது. பூகோளத்தின் 200 கோடி சனத்தொகையில் 17 மில்லியன் மக்கள்-அதாவது 1 வீதத்தினர் எமது உலகில் ஒரு இடத்தைத் தேடிக் கொள்ள முடியாதுள்ளது! பிரமாண்டமான நிலப்பரப்புக்கும் தொழில்நுட்பத்தின் அதிசயங்களுக்கும் -அது மனிதனுக்கென ஆகாயத்தையும் அத்துடன் நிலத்தையும் கைப்பற்றிக் கொண்டிருப்பதற்கு மத்தியில் முதலாளி வர்க்கம் எமது பூகோளத்தை ஒரு அசிங்கமான சிறைக்கூடமாக மாற்றியுள்ளது."

அமெரிக்க அரசாங்கத்துக்கு இருந்து வரும் அரசியல் அக்கறை காரணமாக பாசிசத்தின் வர்க்க அடிப்படை, அரசியல் நோக்கத்தைப் பற்றி ஒரு உறுதியான கலந்துரையாடல் இடம்பெறுவது தடுக்கப்பட்டு வரும் வரை ஒரு புத்திஜீவி இடைவெளி சிருஷ்டிக்கப்பட்டது. அது பாசிசம், மூன்றாம் றைக், ஹொலோகோஸ்ட் பற்றிய வரலாற்று ரீதியில் அமையாததும் முற்றிலும் விஞ்ஞான ரீதியற்றதுமான ஒரு கருத்துப்பாடு ஊடுருவுவதை ஊக்குவித்தது. இது பரந்த மக்களின் நனவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் விளைவுகளை உண்டுபண்ணியது. அதன் வரலாற்று, அரசியல் அடிப்படையில் இருந்து கிழிக்கப்பட்ட நிலையில் இந்த ஹொலோகோஸ்ட் புரிந்து கொள்ளப்பட முடியாததாக்கப்பட்டது. பேரழிவைப் பற்றிய பொதுமக்கள் நனவானது சுரண்டல் மிகுந்த உணர்ச்சிவசப்படுதல், இழக்கமான மட்டரகமான பேச்சுக்கள் மூலம் கட்டுப்படுத்தப்பட்டது.

ஹொலோகோஸ்டில் இருந்து ஏதேனும் ஒரு படிப்பினை பெறப்படுமானால் -அந்த மனிதன் ஏதேனும் ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படுமானால்- வருணிக்கமுடியாத காட்டுமிராண்டித்தனத்தை வழங்க இலாயக்கானவன்: 6 மில்லியன் மனிதர்கள் துடிக்கத் துடிக்கக் கொலை செய்யப்பட்டதன் பின்னர் மனிதனின் முன்னேற்றமும் மனிதன் பூரணத்துவத்தை அடைய முடியும் என்பதைப் பற்றி நம்பிக்கை கொள்வதும் ஒரு மாயையாகும். இந்த விதத்தில் யூதப் படுகொலைகள் யுத்தத்துக்கு பின்னைய நிலைமையை நியாயப்படுத்தவும் பெரிதும் நல்ல உல[illegible]ான போராட்டத்தை நிராகரிக்கவும் பயன்படுத்தப்பட்டது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக விஞ்ஞானப் பெறுமானம் கொண்ட நூல்கள் உற்பத்தி செய்யப்படவில்லை எனக் கூற நான் விரும்பவில்லை. நாசி ஆட்சியாளர்களதும் ஹொலோகோஸ்டினதும் பல்வேறுபட்ட இலட்சணங்களைப் பற்றி ஒரு தொகை வரலாற்றாசிரியர்கள் தலைசிறந்த நூல்களை உருவாக்கி உள்ளார்கள். எனினும் அத்தகைய தலைசிறந்த வரலாற்றாசிரியர்களின் ஆய்வுகள் பொதுமக்களின் நனவினை போதுமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.



அளவில் தொட்டுச் செல்லவில்லை. அத்தகைய நூல்கள்-சிறப்பாக அமெரிக்காவினுள் அத்துறையில் சிறப்பு நிபுணர்களாலேயே பொதுவில் ஆய்வு செய்யப்பட்டன.

நவீன அரசியல் வரலாற்று நனவின் மந்தத்துக்கு கவனத்தை ஈர்ப்பதற்காகவேனும் பின்வரும் விடயங்களுக்குக் கவனத்தை ஈர்க்க எனக்கு அனுமதி அளிக்க வேண்டும். ஜேர்மன் பாசிசத்தின் பிரமாண்டமான ஆபத்துக்களையும் அதனது நாசகரமான உள்ளீடுகளையும் லியொன் ட்ரொட்ஸ்கியின் அளவுக்கு வேறு எந்த ஒரு மனிதனும் புரிந்து கொள்ளாத போதிலும் சமகால வரலாற்று நூல்களில் நாசிசம் பற்றிய 1930-34 காலப் பகுதியில் அ[illegible]ன் நூல்கள் சம்பந்தமாக எந்த ஒரு குறிப்பையும் கண்டுகொள்வது கஷ்டம்.

பெரும் கவனத்தை ஈர்ப்பது மிகவும் கீழ்மட்டத்திலான தப்பெண்ணங்களையும் தப்பபிப்பராயங்களையும் சவால் செய்யாத அல்லது உண்மையில் அவற்றை வலுப்படுத்தும் நூல்களே. டானியல் கோல்ட்ஹகனின் பெரிதும் பிரபல்யமானதும் முற்றிலும் கண்டனத்துக்கு உரியதுமான (Hitler's Willing Executioner's ordinary Germans and the Holoacaust) இந்த வகையறாவுக்குள் வருகின்றது.



1907ல் ஸ்ருட்கார்டில் நடைபெற்ற இரண்டாம் அகிலத்தின் மாநாட்டில் றோஷா லக்ஷ்ம்பேர்க் உரைநிகழ்த்துகின்றார்

## கோல்ட்ஹகனின் வாதம்

கோல்ட்கஹனின் நூலின் முக்கிய நாதத்தினை இலகுவாகச் சுருக்கிக் கூற முடியும்: ஹொலோகோஸ்டுக்கான அல்லது ஹிட்லர் யூதர்களை இலட்சக் கணக்கில் கொன்று தள்ளியதற்கான காரணியை ஜேர்மனியர்களின் ம[illegible]நிலையின் உள்ளும் நம்பிக்கையின் உள்ளும் தேடிக்கண்டு கொள்ள முடியும். ஒரு பரந்த தேசிய இனச் சேர்க்கையான ஜேர்மன் மக்கள் ஒரு விநோதமான ஜேர்மன் யூதர் எதிர்ப்பு சித்தாந்தத்தினால் உந்தப்பட்டு, ஒரு ஜேர்மானிய இயக்கமான ஹொலோகோஸ்டை நடைமுறைப்படுத்தினர். யூதர்களை முறைமுறையாகவும் பிரமாண்டமான அளவிலும் கொன்று தள்ளுவதற்கு வாய்ப்புக் கிடைத்த சகல ஜேர்மனியர்களும் மகிழ்ச்சியுடனும் ஆர்வத்துடனும் பங்குகொண்ட ஒரு தேசிய பொழுதுபோக்கு விளையாட்டாக்கிக் கொண்டனர்.

கோல்ட்கஹனின்படி ஜேர்மானியர்கள் யூதர்களை கொலை செய்வதில் இறங்கியதற்கு அவர்கள் ஜேர்மனியராக அளவுகடந்த ஜேர்மனிய யூதர் எதிர்ப்பினால் வழிநடாத்தப்பட்டனர். யூதர் வெறுப்பு ஜேர்மனியர்களின் உலக நோக்கு அல்லது Weltanschauungன் அடிப்படையாக விளங்கியது.

இது சம்பந்தமாக ஆட்சியாளர்களின் அரசியல் இரண்டாம் தரமான முக்கியத்துவத்தினையே கொண்டிருந்தது. "நாசிகள்" "எஸ்.எஸ்.காரர்கள்" (விசேட நாசி குண்டர்படை) போன்ற பதங்களை "பொருத்தமற்ற லேபல்கள்" எனவும் கொலைகாரர்களைக் குறிப்பிடுகையில் அவற்றைப் பயன்படுத்தலாகாது எனவும் கோல்ட்ஹகன் வலியுறுத்துகின்றார். மூன்றாவது றையிட்டுக்கும் யூதர்கள் படுகொலைக்கும் இடையேயான ஒரே வழக்கமான உறவு- அது ஜேர்மனியர்களை ஜேர்மன் நம்பிக்கையுடன் தடையின்றி ஜேர்மனியராகச் செயற்பட அது அனுமதித்ததேயாகும் என கோல்ட்ஹகன் குறிப்பிடுவது போல் தோன்றுகின்றது.

கோல்ட்ஹகன் எழுதுவது போல்: "கொலோகோஸ்டில் சம்பந்தப்பட்ட ஜேர்மனியர்களுக்கு மிகவும் பொருத்தமான பெயர்மட்டுமன்றி ஒரே. பொருத்தமானதும் பொர்வில் ஏற்றதுமான பெயர் "ஜேர்மனியர்கள்" என்பதே. அவர்கள் ஜேர்மனியின் பெயராலும் அதன் பெரிதும் ஜனப்பிரிய தலைவரான அடோல்வ் ஹிட்லரின் பெயராலும் செயற்பட்ட ஜேர்மனியர்களாக விளங்கினர்." (பக்கம் 6)

கோல்ட்ஹகனின் விநோதமான உள்ளறிவில் இருந்து கவனத்தைத் திருப்பாதிருக்கும் பொருட்டு ஹிட்லர் ஆஸ்திரிய தேசிய இனத்தவர் என்ற விடயத்தையோ அல்லது அவரின் இனவாதக் கோட்பாடுகள் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சிய தேசிய இனத்தவரான கோபினோ என்பவரின் நூல்களில் இருந்து திருடப்பட்டவை என்பதையோ அல்லது அவரின் அரசியலில் மாவீரரான முசோலினி ஒரு இத்தாலியர் என்பதையோ அல்லது அவரின் பிரதம சிந்தனையாளரான அல்பிரட் ரொசன்பேர்க் ஸாரின் ரூஷ்யாவின் ஒரு பால்டிக் மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதையோ அல்லது ஹிட்லரின் நெருங்கிய தோழரான ருடோல்வ் ஹெஸ் எகிப்தில் பிறந்தவர் என்பதை பற்றியோ நான் இங்கு தொடர்ந்து பேசப் போவதில்லை.

அத்தகைய சிக்கலான முரண்பாடுகளின் விளைவுகள் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக நாம் விரைவாக கோல்ட்ஹகனின் முடிவுகளுக்குச் செல்வோம்: "யூதர் எதிர்ப்பு ஆயிரக்கணக்கான யூதர்களை கொன்றுதள்ளுவதை நோக்கி இட்டுச் சென்றது என்பதையும், அதற்கு இடம்கிடைக்கும் நிலையில் வைக்கப்பட்டிருப்பின் மேலும் பல லட்சம் எண்ணிக்கையிலான ஜேர்மனியர்களையும் அதற்காக இட்டுச்செல்ல யூதர் எதிர்ப்பினால் முடிந்திருந்தது என்பதையும் நிராயுதபாணிகளை அப்பாவி யூதர் ஆண்களையும் பெண்களையும் குழந்தைகளையும் ஆயிரக்கணக்கில் முறைமுறையாகவும் இரக்கமின்றியும் கொன்று தள்ளவும் இட்டுச் சென்றது பொருளாதாரக் கஷ்டங்கள் அல்ல. சர்வாதிகார அரச பலாத்காரம் அல்ல. உளவியல் தாக்கங்கள் அல்ல. தனியாட்களின் மாற்றமுடியாத உளவியல் மனோபாவங்கள் அல்ல. பல தசாப்தங்களாக ஜேர்மனி பூராவும் பரந்துபோய்க் கிடந்த யூதர்களைப் பற்றிய எண்ணங்களாகும்."(பக்கம் 9)

மனித அறிவின் தோற்றம் பற்றிய ஒரு கான்டியன்வாத முரட்டுப் பார்வையைக் கையாண்டு கோல்ட்ஹகன் "யூதர் எதிர்ப்பு ஜேர்மனியர்களின் அறிவு இயந்திரத்தின் மீது இணைந்த ஒன்றாகும் சவால் செய்யமுடியாத ஆதிபத்தியம் செலுத்தியது" என இடைவிடாது வாதிடுகின்றார்.(பக்கம் 33)



1932 ஜேர்மன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சி

## கோல்ட்ஹகனின் விதிமுறை

நான் சற்றுப் பின்னர் கோல்ட்ஹகனின் வாதங்கள் எந்த அளவுக்கு நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பதை ஆய்வு செய்வோன். ஆனால் முதலில் நான் அவரின் சிந்தனையினதும் ஆய்வுகளினதும் விதிமுறையைப் பற்றி சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இழிவான சிந்தனையின் மிகவும் பொதுவான பண்பு ஒரு சிக்கலானதும் பல பக்கங்களைக் கொண்டதுமான யதார்த்தத்தினை தேவைக்கு அதிகமான பரந்த, ஒழுங்கற்ற, ஒரு பரிமாணம் கொண்ட வரைவிலக்கணங்கள் மூலம் இலகுவாக்குவதாக்கும். விஞ்ஞானபூர்வமான சிந்தனையானது ஒவ்வொரு தோற்றப்பாடும் உள்ளடக்கிக் கொண்டுள்ள நானாவித, முரண்பாட்டு மூலகங்களுக்குள் அவற்றின் பொது பரஸ்பர தொழிற்பாடுகளினுள் அடையாளங்கண்டு கொண்டு ஆய்வு செய்வதற்கு முயற்சிக்கின்றது. அது விஞ்ஞானியின் மனதினுள் பிரதிபலிக்கும் சிக்கலை நிஜமாக பிரதிபலிக்கும் கருத்துப்பாட்டை அபிவிருத்தி செய்ய யதார்த்தத்தின் முரண்பாட்டுத் தன்மையை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றது.

மறுபுறத்தில் இழிவான சிந்தனையானது தாம் ஆய்வு செய்ய எண்ணும் யதார்த்தத்தின் தோற்றப்பாடு கொண்ட உள்வாரி முரண்பாடுகளை நோக்காது சூனியமான பொதுவாக்கங்களில் (பொது அனுமானங்களில் [illegible]. அத்தகைய சூனியமான [illegible]கள் மெய்யியலில் பொது ( ) அடையாளங்கள் எனப்படுகின்றன. இவற்றில் இருந்து சகல உள்வாரி முரண்பாடுகளும் தள்ளப்பட்டுள்ளன. அந்த வார்த்தையின் கெட்ட அர்த்தத்தில் அவை பொதுவானவை. அவை யதார்த்தத்தின் பற்றாக்குறையான மூளை பிரதிநிதித்துவங்கள் ஆகும்: சட உலகம் பொதுவில் அத்தகைய உள்வாரி அலட்சியமான தோற்றப்பாட்டை உள்ளடக்கிக் கொண்டு இருக்கவில்லை.

ஒவ்வொரு "அடையாளமும்" அதனுள்ளேயே வேறுபாடுகளை உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இங்குதான் இழிவான சிந்தனையின் அடிப்படை குறைபாடு பெருக்கெடுக்கின்றது. இழிவான சிந்தனை தரக்குறைவான ஒரு தலைப்பட்சமான கருத்துப்பாட்டையே கையாள்கின்றது. அத்தகைய அர்த்தப்பாட்டு அடையாளங்கள் யதார்த்தத்தைப் பற்றிய ஒரு விஞ்ஞானபூர்வமான, உண்மையினது பிரதிநிதித்துவத்தை வழங்க இலாயக் கற்றவையாக உள்ளன.

பேராசிரியர் கோல்ட்ஹகனின் விதிமுறைக் குறைபாடானது அவரின் நூலின் (Hitler's willing Executioners: Ordinary Germans and the Holoacaust ) (ஹிட்லரின் மனமுவந்த கொலைகாரர்கள்:சாதாரண ஜேர்மனியர்களும் கொலோகோஸ்டும் என்பதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது. நாம் இங்கேநிறுத்துவோம். "சாதாரண ஜேர்மானியர்கள்" என்பது கருதுவது என்ன? "அர்த்தப்பாட்டு அடையாளங்கள்" பற்றிய ஒரு நல்ல தெளிவான உதாரணத்தை நீங்கள் கண்டுகொள்ள உங்களில் யாரேனும் விரும்பினால் இதோ. யூதப் பெற்றோர்கள் கொண்ட ஜேர்மனியர்களைத் தவிர்ந்த சகலரையும் உள்ளடக்கக் கூடிய அளவுக்கு இது பரந்ததான ஒரு வகையாகும். குறிப்பிட்ட ஜேர்மானிய தேசிய இனத்தவரை "சாதாரண" ஜேர்மன் இனத்தவராக்குவது எதனால்? நொக்லூர்ஸ்ட் அல்லது செவர்பிரேட்ஸ் போன்ற உணவு வகைகளுக்குக் காட்டும் விருப்பினால் ஏற்படுவதா? அது தங்கமயமான தலைமயிரா, நீலக் கண்களா, நிர்வாணமாக சூரிய ஒளிக் கதிர் காயும் விருப்பமா? புரியாமல் மெய்யியல் வாதங்களில் ஈடுபடுவதற்கான திறமையா? வக்னேறியன் சங்கீதத்துக்கான பெருவிருப்பினால் 300 இறாத்தல் எடைகொண்ட சொப்பிரநோஸ் பாடகர்கள் மீது கொண்ட விருப்பா? அத்தகைய மூடத்தனமாகவும் நினைத்த மாத்திரத்திலும் உருவான கருத்துக்கள் புறநிலை யதார்த்தத்தினை அறிகையில் எந்த ஒரு வகையிலான விஞ்ஞானப் பெறுமானமும் கொண்டிருக்க முடியாது.

ஆனால் நாம் எமது வரைவிலக்கணத்தினுள் பெரிதும் ஆழ்ந்த சமூகவியல் ரீதியான பண்புகளை உள்ளடக்கிக் கொள்ள முயன்றால் "பொதுத்தன்மை" பற்றிய கருத்துப்பாடானது எந்தவிதமான பெறுமதியும் அற்றதாக உடனடியாகத் தோன்றும். 1933ல் ஜேர்மன் சமூகம் ஒரு சிக்கலான வர்க்க அமைப்பைக் கொண்டிருந்தது. ஹிட்லர் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட சமயத்தில் இருந்த "சாதாரண ஜேர்மனியன்"ஒரு பக்டரி தொழிலாளியா? நஷ்டம் அடைந்த கடைச் சொந்தக்காரனா? லூம்பன் பாட்டாளிவர்க்கம் இடையேயான மனவிரக்தி அடைந்தவனா? பெரிதும் கடன்சுமைக்கு உள்ளான விவசாயியா? அல்லது கிழக்கு பிரஷியாவின் காணிச் சொந்தக் காரனான யுங்கரா? அல்லது கைத்தொழில் கோடீஸ்வரனா?

பல்வேறு முரண்பட்ட சமூகத் தட்டுக்களையும் சேர்ந்த இந்தச் சகலரையும் "சாதாரண ஜேர்மானியர்கள்" என ஒன்றாக குவித்தால் அது குறிக்கும் "பொதுவானது" 1933ல் நிலவிய ஜேர்மன் சமுதாயத்தின். உள்வாரி பகைமைகளையும் மோதுதல்களையும் பிரதிபலிக்கவில்லை எனத் தோன்றுகின்றது. ஆதலால் கோல்ட்ஹகன் தனது வாசகர்களுக்கு வழங்குவது 1933ம் ஆண்டு உண்மையில் கொண்டிருந்த ஜேர்மன் சமுதாயத்தின் ஒரு விஞ்ஞானரீதியான ஆய்வினை அன்று. அதற்குப் பதிலாக -இதை விருப்பமில்லாது போனாலும்- இனத்தினாலும் இரத்தத்தினாலும் வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஒரு கூட்டு ஜேர்மன் மக்களைப் பற்றிய நாஸி கட்டுக்கதைகளை விமர்சனமின்றி நியாயப்படுத்தும் ஒரு ஓரினச் சமூகம் பற்றிய மனோவபாத்தைக் கொண்ட ஒரு சித்திரத்தினையே தருகின்றது." சாதாரண ஜேர்மானியன்" பற்றிய இந்தக் கருத்துப்பாட்டை தமது முழு ஆய்வினதும் அடிப்படையாகக் கொண்ட கோல்ட்ஹகன் அந்த ஓரின கருத்துப்பாட்டின் செல்லுபடித் தன்மையை கேள்விக்குள்ளாக்கும் எதையும் அல்லது எவரையும் நூலில் இருந்து தள்ளி வைக்க நேரிடுகின்றது.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-4

முதலாளித்துவ சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்டும் 1972 அரசியலமைப்பை இயற்றியதனதும் அதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடுகள் காட்டுவதை உக்கிரமாக்கியதனதும் எதிரில் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் முழு வங்குரோத்தும் அம்பலமாகியது. தமிழ் மக்களின் எந்த ஒரு ஜனநாயக உரிமையையும் பேணிக்காக்க தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரசுக் கட்சியும் இலாயக்கற்றவையாக காட்டிக் கொண்டன. 1948ல் திணிக்கப்பட்ட முதலாளித்துவ அரசின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்த சிங்கள முதலாளி வர்க்கம் இனவாதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டி , அரச ஒடுக்குமுறையை தமிழ் மக்களுக்கு எதிராக உக்கிரமாக்குகையில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் மீது பிடியைக் கொண்டிருந்த தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் மலட்டுத் தனம் நிதர்சனமாகியது.

சிங்கள முதலாளித்துவ அரசாங்கங்களின் பின்னால் தொடர்ந்தும் வயிறளப்பதன் மூலம் அரசியலமைப்புக்கு ஏதேனும் திருத்தங்களைச் சேர்க்கும்படி குறையிரங்குவதே பாராளுமன்றவாதத் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளது தலைவர்களின் மார்க்கமாக விளங்கியது.ஆனால் தமிழ் மக்களுக்கிடையே இதற்கு எதிரான பலத்த எதிர்ப்பு வளர்ச்சி கண்டு வந்தது.

1972 அரசியலமைப்புச் சட்டத்தின்படி இலங்கை குடியரசை பிரகடனம் செய்யும் மே 22ம் திகதியின்று அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொணரும் மலட்டு வேலைத்திட்டத்தின் கீழ் ஒரு எதிர்ப்புத் தினத்தை அனுஷ்டிக்க தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தனர். கூட்டரசாங்கம் குடியரசினைப் பிரகடனம் செய்வதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாகவே அவசரகாலச் சட்டங்களைப் பாவித்து பொதுக் கூட்டங்கள் நடாத்துவதை அடியோடு தடை செய்தது. தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் இந்த அவசரகாலச் சட்டத்துக்கு தலைபணிந்து தமது எதிர்ப்புத் தினக் கூட்டத்துக்கு வண்ணார்பண்ணை நாவலர் மண்டபத்துடன் கால்கட்டுப் போட்டனர்.

தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் 1972 மே 22ம் திகதி நடாத்திய எதிர்ப்புக் கூட்டம், அரசாங்கத்திடம் குறையிரங்கும் ஒரு முறைப்பாட்டுக் கூட்டமாக இருந்ததே தவிர அதற்கு அப்பால் ஒன்றும் நடைபெறவில்லை.ஆனால் அக்கூட்டத்துக்கு தலைமை தாங்கிய தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஆற்றிய உரை 1972 அரசியலமைப்புச் சட்டத்தின் பிற்போக்கு இனவாதக் கோலத்தை எடுத்துக் காட்டியது.அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"புதிய அரசியலமைபபு சமஷ்டி ஆட்சி முறைக்கான கோரிக்கையை நிராகரித்ததோடு மட்டுமன்றி, சிறுபான்மை இனங்களுக்கும் மதங்களுக்கும் உரிய இடத்தையும் ஒழித்துள்ளது. அரசியலமைப்பின் இரண்டாவது சரத்தின் 6வது பிரிவு பௌத்த மதத்துக்கு சிறப்புரிமை வழங்குகின்றது. இலங்கை குடியரசு பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதாக அரசியலமைப்பு கூறுகின்றது. அதைத் தொடர்ந்து 3வது சரத்தின் 7வது பிரிவு சிங்கள மொழிக்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்குகின்றது. அது கூறுவதாவது : 1956ம் ஆண்டின் 33ம் இலக்க அரச மொழி மசோதா இலங்கையின் அரச மொழி சிங்களம் என்கின்றது. அதன் 8வது பிரிவு தமிழ்மொழி உபயோகம் 1958ம் ஆண்டின் தமிழ்மொழி(சிறப்பு விதிகள்) மசோதாவுக்கு அமைய நடைபெறும் எனவும் 1968ல் அந்த மசோதாவுக்கு இணங்கச் சமர்ப்புக்கப்பட்ட விதிகள் அரசியலமைப்பில் இடம்பெறாது எனவும் கூறுகின்றது. 1958ம் ஆண்டின் மசோதா வாய்ப்புக்களைத் திறந்து விடும் ஒன்றாக மட்டும் விளங்கும் அதே வேளையில் 1968ல் டட்லி சேனநாயக்க அரசாங்கம் கொணர்ந்த விதிகள், அந்த வாய்ப்புக்களை நடைமுறைக்கிடும் ஒரு திட்டமாகியது. புதிய அரசியலமைப்புத் சட்டத்தின் மூலம் அது தவிர்க்கப்பட்டு அந்த விதிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது சரத்தின்படி இலங்கை பூராவும் நீதிமன்ற மொழியாக சிங்களம் மாற்றப்பட்டுள்ளது."


அ.அமிர்தலிங்கம்

தமிழ் முதலாளி வர்க்க தலைவர்களால் இதுவரை காலமும் மறக்கப்பட்டிருந்த தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை ஒழிப்புக்களைப் பயன்படுத்தி தமது அனாதரவு நிலையையிட்டு அரசாங்கத்துக்குச் செய்யும் ஒரு மேன்முறையீடாக செல்வநாயகம் அந்த தலைமையுரையை பயன்படுத்தினார். 1947ம் ஆண்டின் அரசியல் அமைப்பின் கீழ் தோட்டத் தொழிலாளர்களும் பிரஜைகளாகக் கணிக்கப்பட்டு, வாக்குரிமைக்கு உரித்தானவர்களாக விளங்கியதோடு, அதற்கமைய 75000 சனத்தொகையினருக்கு ஒரு பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் பிரதிநிதித்துவம் குடியுரிமை மசோதா மூலம் ஒழிக்கப்பட்டதாகவும் செல்வநாயகம் சுட்டிக் காட்டினார். குடியுரிமை மசோதாவின் மூலம் 10 இலட்சத்துக்கும் அதிகமான தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட போதிலும் தோட்டத்துறையைச் சேர்ந்த மாகாணங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்படவில்லை. இது சிங்கள முதலாளித்துவ பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிக்கும் காரணமாகியது.

செல்வநாயகம் தமது உரையில் பின்வரும் புள்ளி விபரங்களை முன்வைத்தார்: "இன விகிதாசாரத்தின்படி இலங்கை, இந்திய தமிழ் மக்களை [illegible] உறுப்பினர் [illegible] பாராளுமன்றத்தில் அவர்களுக்கு 22 ஆசனங்கள் உரித்தாக வேண்டும். சிங்கள மக்களுக்கு 66 ஆசனங்கள் உரித்தாக வேண்டும். 1947 தேர்தலில் தமிழர்களுக்கு 20 ஆசனங்களும் சிங்களவர்களுக்கு 68 ஆசனங்களும் உரித்தாகியது. 1952ம் 1956ம் தேர்தல்களில் சிங்களவர்களுக்கு 75 ஆசனங்களும் தமிழர்களுக்கு 13 ஆசனங்களும் உரித்தாகின. இது இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதனால் உருவான ஒரு பெறுபேறாகும். 1960ல் புதிய தேர்தல் தொகுதி அமைப்பின்படி முழு பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை 151 ஆகியது. அதன்படி சிங்களவர்களுக்கு 106 ஆசனங்களும் தமிழர்களுக்கு 35 ஆசனங்களும் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் 1960 ஜூலை பாராளுமன்றத் தேர்தலில் சிங்களவர்களுக்கு 121 ஆசனங்கள் கிடைத்த அதே வேளையில் தமிழர்களுக்கு 18 ஆசனங்களே கிடைத்தது. மீண்டும் 1965ல் சிங்களவர்களுக்கு 122 ஆசனங்களும் தமிழர்களுக்கு 17 ஆசனங்களும் 1970ல் சிங்களவர்களுக்கு 123 ஆசனங்களும் தமிழர்களுக்கு 19 ஆசனங்களும் உரித்தாகியது. 1972 அரசியலமைப்பு இந்த அநீதியை மேலும் முன்னெடுத்துச் சென்றது."

தமிழ் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாப்பதற்குப் பதிலாக தமிழரசு, தமிழ் காங்கிரஸ் முதலாளித்துவக் கட்சிகளின் தலைவர்களின் கவனம் சலுகைகள் கொண்ட தமிழ் முதலாளித்துவ, மத்திய தர வர்க்க பகுதியினரின் நலன்களிலேயே சென்றது. தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை ஒழிக்கப்பட்டமையை இந்த முதலாளித்துவக் கட்சிகளின் தலைவர்கள் தமக்குரிய பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை வீழ்ச்சி காணும் பிரச்சினைக்கு மேலாகக் கணித்தது கிடையாது. பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்களையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் மடிகளை நிரப்பிக் கொள்ளும் தொழிலாக விளங்கிய வழக்கறிஞர் தொழிலுக்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் நீதிமன்ற மொழியாக தமிழை ஆக்குவது போன்றவைகள் வழங்கப்படுமானால் எந்த ஒரு முதலாளித்துவ அரசியலமைப்பின் கீழும் பதியமாகிவிடுவதற்கு தமிழ் தலைவர்கள் தயாராக இருந்தனர்.

## தமிழ் இளைஞர்கள்

முதலாளித்துவ கூட்டரசாங்கம் 1972ல் இயற்றிய இனவாத, ஒடுக்குமுறை அரசியலமைப்புக்கு எதிராகத் தமிழ் மக்களிடையே தோன்றிய எதிர்ப்பு தமிழரசு, தமிழ் காங்கிரஸ் முதலாளித்துவக் கட்சிகளின் பிடியையும் உடைத்துக் கொண்டு முன்சென்றது. தமிழ் இளைஞர்களின் பரந்த அளவிலான கிளர்ச்சி அந்த எதிர்ப்பு இயக்கத்தினுள் வெளிப்பாடாகியது. மே 22 ம் திகதி கிராமப் புறங்களையும் தழுவிய விதத்தில் பரந்த அளவிலான எதிர்ப்புக் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன. இந்தப் பிரச்சார இயக்கத்தில் முன்னணி வகித்த பலர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் இயக்கத்தின் தலைவர்களாகவும் இரண்டு தமிழ் முதலாளித்துவக் கட்சிகளதும் [illegible]டு குழப்பமும் மாற்று [illegible]டத்தின் அவசியமும் மக்களிடையே தலைநீட்டியது.

ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காக்கும் அத்தகைய ஒரு மாற்று வேலைத்திட்டத்தினை முதலாளி வர்க்கத்தில் இருந்த சுயாதீனமான தொழிலாளர் வர்க்க சமூக சக்திகளால் மட்டுமே வழங்கக் கூடியதாக இருந்தது. சமசமாஜ ஸ்டாலினிச கட்சிகளின் தலைவர்களினால் தொழிலாளர் வர்க்க அமைப்புக்களின் அரசியல் சுயாதீனம் காட்டிக்கொடுக்கப்பட்டு, அவை முதலாளித்துவ சி.ல.சு.க.வுடன் பிணைக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களுக்கு மாற்று வேலைத்திட்டமும் தலைமையும் வழங்குவது தடுக்கப்பட்டது. அவ்வாறே தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்று பாத்திரம் பற்றிய ஒரு நம்பிக்கையீனம் கொண்ட ஒரு அரசியல் குழப்ப நிலைமையினுள் இளம் தலைமுறையினர் மூழ்கடிக்கப்பட்டிருந்தனர்.

முதலாளித்துவ சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கம் தமிழ் இளைஞர்களின் பிரச்சார இயக்கத்தின் மீது அரச ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் அதற்குப் பதில் அளித்தது.70க்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். சகல ஆர்ப்பாட்டங்களையும் தடைசெய்யும் அவசரகாலச் சட்டம் பொலிசாரினாலும் இராணுவத்தினாலும் அமுல் செய்யப்பட்டது.

புதிய அரசியலமைப்பின் கீழ் அமைக்கப்பட்ட அரச பிரதிநிதிகள் சபை தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன விதிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற பிரச்சினை தோன்றியது. அரசியலமைப்பு நிர்ணய சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்வதைப் பகிஷ்கரித்து வந்த அந்த அமைப்பின் எம்.பீ.க்கள் புதிய அரச பிரதிநிதிகள் சபையில் கலந்து கொள்வதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு அதன் செயற்குழு 1972 ஜூன் 25ம் திகதி கூடியது. இக்கூட்டம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. ஆயிரக் கணக்கான இளைஞர்கள் கூட்ட மண்டபத்தை சுற்றி வளைத்தனர். இங்ஙனம் முற்றுகையிட்ட இளைஞர்களின் கோரிக்கை என்ன? தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச பிரதிநிதிகள் சபையை தொடர்ந்தும் பகிஷ்கரிக்க வேண்டும்! இளைஞர்களின் பிரச்சாரம் அந்தளவுக்கு உக்கிரம் கண்டிருந்ததால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் செயற்குழுக் கூட்டத்தை வேறொரு இடத்துக்கு இடம் மாற்றம் செய்ய நேரிட்டது.

இளைஞர்களின் பிரச்சாரம் எவ்வளவுதான் பலம் வாய்ந்ததாக இருந்த போதிலும் அந்த இயக்கத்திடமும் மாற்று வேலைத்திட்டம் இருக்கவில்லை. அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் இன ஒற்றுமையை உறுதிசெய்து , பொது மக்களை அணிதிரட்டும் தமிழ் , சிங்கள தொழிலாளர் வர்க்கத் தலைமை அற்ற இளைஞர் இயக்கம் தனிநாடு அமைக்கும் திசையில் தள்ளப்பட்டு இருந்தது.

இன்று போலவே அன்றும் சகல குட்டி முதலாளித்துவ தீவிரவாத வாய் வீச்சுக்காரர்களும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தொழிலாளர் வர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோசலிசத் தீர்வுக்காக போராடுவது என்பது ஒரு நீண்டகால வேலை எனக் கூறிக் கொண்டனர். இன்று சந்திரிகா குமாரதுங்கவின் "அரசியல் தீர்வை" சுற்றி வலம் வந்து கொண்டு இனவாத யுத்தத்தினை பூசி மெழுகுவது போலவே அன்று இவர்கள் சமசமாஜ ஸ்டாலினிச துரோகிகளின் "சோசலிச" கதையளப்புக்களின் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராகக் கையாளப்பட்டுவந்த கூட்டரசாங்க ஒடுக்குமுறையின் கையாட்களாக விளங்கிவந்தனர். அன்று அவர்கள் "காலம் பிடிக்கும் "வேலையாகக் கூறிக்கொண்ட சோசலிசத் தீர்வை இது காறும் 25 ஆண்டுகள் காலங் கடத்தவும் அதற்கிடைப்பட்ட காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதப் பாகுபாடுகளை இனவாத யுத்தமாக மாற்றவும் இந்தக் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் பங்களிப்புச் செய்தனர்.

அத்துடன் நின்றுவிடாது தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத தீர்வு வேலைத் திட்டத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்த சகலரும் தமிழ் மக்களுக்கிடையே இனவாதத்தினையே அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரிவினைவாத இயக்கம் தோன்றவும் உதவினர்.

## நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் பு.க.க.

1972 அரசியலமைப்பைச் சூழ தலைநீட்டிய பொதுமக்கள் இயக்கத்தின் அரசியல் குழப்ப நிலைமையை எதிர்த்து, போராடியது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே. அவசரகாலச் சட்ட ஆட்சியையும் தமது பகிரங்க அறிக்கைகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவுகளையும் நோக்காது தொழிலாளர் வர்க்கத்தினை ஒடுக்கப்படும் மக்களின் தலைவனாக அணிதிரட்டிக் கொள்ள அது போராடியது.

1972ம் ஆண்டின் இனவாத, அடக்குமுறை அரசியலமைப்புக்கு எதிராக தொழிலாளர் வர்க்க இயக்கம் முன்வைத்த ஒரே சுயாதீனமான குரல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களை தலைமையில் கொண்டிருந்த அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்திடம் இருந்தே வெளிப்பட்டது. அது ஓரிடத்தில் இருந்து வெளிப்பட்ட போதிலும் அது தனிமைப்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்துவிடவில்லை. அனைத்துலக சோசலிச சம்பிரதாயங்களின் அடிப்படையில் காலூன்றி நின்று, பிற்போக்குக்கு எதிராகப் போராடும் மரபுகளை பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியாளர் காலத்தில் இருந்து தனதாக்கிக் கொண்டிருந்த இந்நாட்டு தொழிலாளர் வர்க்கத்தின் நனவான பகுதியினரின் பலம்வாய்ந்த ஆதரவினை அக்குரல் கவர்ந்திருந்தது.

ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்கள் முன்னணி துரோகத்துக்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எழுப்பிய அக்குரலினால் பெரிதும் பீதியடைந்து போன கட்சி லங்கா சமசமாஜக் கட்சியேயாகும். அதற்குக் காரணம் அவர்கள் கடந்த காலத்தில் அந்த விஞ்ஞானரீதியான வேலைத்திட்டத்தின் மகோன்னதமான சக்தியை நடைமுறை அனுபவத்தின் மூலம் புரிந்து கொண்டவர்களாக விளங்கியதேயாகும். சமசமாஜக் கட்சியின் தலைமையிலான அரசாங்கத் தொழிற் சங்க சம்மேளனம் பு.க.க. அங்கத்தவர்களைத் தலைமையாகக் கொண்ட அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தினை தமது தொழிற்சங்க சம்மேளனத்தில் இருந்து வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுத்தது. இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்க அச்சக ஊழியர் சங்கத்தின் தலையீட்டினால் பரந்த அளவிலான வெகுஜன பிரச்சார இயக்கம் ஒன்று தொழிற் சங்கங்களையும் இடதுசாரி அமைப்புக்களையும் அணிதிரட்டி இடம்பெற்றது. இந்த இயக்கம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினால் வழிநடாத்தப்பட்ட போதிலும் இதற்கு செவிசாய்க்க சமசமாஜ அதிகாரத்துவம் தயாராக இருக்கவில்லை.

குட்டி முதலாளித்துவ ஜே.வீ.பி.யின் 1971 ஏப்பிரல் கிளர்ச்சிக்குப் பின்னர் அது தடைசெய்யப்பட்டு அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டு இருந்து வந்த ஒரு நிலைமையில் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தின் முன்னணிப் பேச்சாளராக தலைநீட்டியவர் விக்கிரமபாகு கருணாரத்ன. விக்கிரமபாகு கருணாரத்ன முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் வக்கீலாக செயற்பட்டு 1972 இனவாத, ஒடுக்குமுறை அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஆதரவு வழங்கியதோடு மட்டுமன்றி ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கும் மார்க்சிச புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கும் எதிராக அரசாங்கம் தொடுத்த அடக்குமுறைகளை அங்கீகரித்தார். தமது வாய்வீச்சுக்களினால் 1971 ஏப்பிரல் கிளர்ச்சியின் ஆதரவாளராக பெயர் சூட்டப்பட்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட வாசுதேவ நாணயக்கார தமது சமசமாஜ கட்சி அங்கத்தவர் சீட்டைக் காட்டி அரச இயந்திரத்தின் எதிரில் முழந்தாளிட்டதன் மூலம் விடுதலை பெற்றார். அதைத் தொடர்ந்து கருணாரத்னவுடன் சேர்ந்து புதிய வேடங்களில் ஆடத் தொடங்கினார்.

கூட்டரசாங்கம் கலைக்கப்பட்டதன் பின்னர் நவசமசமாஜக் கட்சி என்ற பெயரில் தலைநீட்டிய இது இப்போது இரண்டு சக்திகளாக இருந்து வருகின்றன. 1970பதுகளில் கூட்டரசாங்கத்தின் சகபாடியாகச் செயற்பட்டுவந்த கருணாரத்ன, தமிழ்-சிங்கள தொழிலாளர் வர்க்க ஐக்கியத்தின் அடிப்படையில் ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்யும் வேலைத்திட்டத்துக்கு எதிராக நின்று வந்தார். இன்று இவர் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் கூட்டினை நாடி நிற்கின்றார். மறுபுறத்தில் வாசுதேவ நாணயக்கார "விடுதலைப் புலிகள் அமைப்பை தவிடு பொடியாக்கும்" இனவாத யுத்தத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராக பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் பதுங்கிக் கொண்டுள்ளார். இவை ஒரே குட்டி முதலாளித்துவ தீவிரவாத காட்டுச் செடிகளில் இருந்து தோன்றிய இரண்டு பிற்போக்குச் சக்திகளே தவிர வேறு என்ன? இன்று யுக்திய, ராவய, தியச, பிரவாத போன்ற தீவிரவாத வெளியீடுகளைச் சுற்றியுள்ள மத்தியதர வர்க்க வாய்வீச்சாளர்கள் கண்ணாடியின் எதிரில் சென்றால் அவர்களின் வளர்ச்சி கண்டு வரும் தரித்திரம் பிடித்த கோலங்கள் கருணாரத்னவினதும் நாணயக்காரவினதும் கடைகெட்ட கோலங்களை எடுப்பது நிச்சயம்.

## தமிழ் முதலாளிகளின் மலட்டு வேலைத்திட்டம்

நாம் மீண்டும் 1972ல் தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் நடவடிக்கைகள் பக்கம் எமது கவனத்தை திருப்புவோம். பொதுமக்களின் பரந்த எதிர்ப்புக்கு மத்தியில் செயற்குழுக் கூட்ட மண்டபத்தை மாற்றும்படி தள்ளப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள், கோப்பாய் கதிரவேற்பிள்ளையின் இல்லத்தில் கூடி, புதிய அரசியலமைப்பின் கீழ் தேசிய அரசு பேரவையில் ஆசனங்களை வரித்துக் கொள்ள தீர்மானம் எடுத்ததைக் காண்கின்றோம். தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் தமிழ் மக்களின் சார்பில் இன்னும் ஒரு தொகை போலி கோரிக்கைகளை சமர்ப்பிப்பதன் மூலம் தமப் அடிபணிவையும் வங்குரோத்தினையும் மூடி மறைக்க முயன்றனர். 1972 இனவாத அரசியலமைப்பினை நிறைவேற்றிய அரசாங்கத்திடமே "தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை இட்டுநிரப்ப" 1972 செப்டம்பர் வரை மூன்றுமாத கால அவகாசம் வழங்க தமிழர் விடுதலைக் கூட்டணி தீர்மானம் செய்தது. அந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாது போனால் "அஹிம்சை போராட்டத்தை" தொடுக்கப் போவதாக அரசாங்கத்துக்கு அறிவிக்கவும் தீர்மானம் செய்யப்பட்டது.

1972 ஜூலை 4ம் திகதி தேசிய அரசுப் பேரவை திறக்கப்பட்டபோது தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பி.க்கள் அங்கு சத்தியப் பிரமாணம் செய்து ஆசனம் எடுத்தனர். எனினும் இந்த அமைப்பு தமது கோரிக்கைகளை முன்வைத்து பிரதமருக்கு அனுப்பி வைத்த கடிதத்துக்கு பதில் கூடக் கிடைத்திருக்க இல்லை. இதனையடுத்து இரண்டாம் கடிதத்தின் மூலம் நினைவூட்டல் கடிதத்தையும் அனுப்பிவைத்தார். இந்த இரண்டு கடிதங்களும் கிடைத்ததாக பிரதமரின் அலுவலகம் அறிவித்த போதிலும் கோரிக்கைகளைப் பற்றி அதில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

1994 தேர்தலில் வடக்கில் இராணுவ பலத்தை பாவித்தும் ஏழு, எட்டுக் களைப் பெறாதவர்களுக்கும் கூட பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை வழங்கியதன் மூலம் இன்றைய அரசியலமைப்பு திருத்தத்துக்கு தமிழ் மக்களின் ஆதரவு கிடைத்துள்ளதாக காட்டிக் கொள்வதைப் போல அன்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி எம்.பீ.க்கள் பாராளுமன்றத்தில் ஆசனங்களை வரித்துக் கொண்டமை புதிய அரசியலமைப்புக்கு தமிழ் மக்களின் அங்கீகாரம் கிடைத்துக் கொண்டதாக அரசாங்கம் கூறிக்கொண்டது. இந்தப் பிரச்சாரத்தின் மூலம் தமிழ் மக்கள் அவசரகாலச் சட்டத்தின் மூலம் நசுக்கப்பட்டு வந்தமை மூடி மறைக்கப்பட்டது. இதற்கு எதிராக வளர்ச்சி கண்ட பொதுஜன எதிர்ப்பு, முதலாளித்துவ கூட்டரசாங்கத்துக்கு எதிராக மட்டுமல்லாது தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கு எதிராகவும் வெடித்த ஒன்றாகும். ஆனால் தீர்க்கமான பிரச்சினை இந்த எதிர்ப்பினை எந்த மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும் என்பது விளங்கியது. அத்தகைய ஒரு மாற்று வேலைத்தில் திட்டமும் தலைமையும் பொதுமக்களிடையே வேரூன்றஇராத ஒரு நிலைமையின் கீழ் எதிர்ப்புக்கள் மீண்டும் பின்னடைவு கண்டு, முதலாளித்துவக் கட்சிகளின் பிடிக்குள் செல்வதை தவிர்க்க முடியாததாக்கியது. இது சகல குட்டி முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கங்களதும் நடைமுறைப் பயணத்தின் மூலம் வரலாறு பூராவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் இயக்கத்தினை குளிரவைப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் செல்வநாயகம் காங்கேசந்துறை பா.உ. பதவியில் இருந்து 1972 செப்டம்பர் மாதம் 30ம் திகதி இராஜினாமாச் செய்தார். "புதிய அரசியலமைப்பு சம்பந்தமாக தமிழ் மக்களின் கருத்துக் கணிப்பை நடாத்துவதற்கு இடைத்தேர்தலை நடாத்து!" என்பதே அவர் அரசாங்கத்துக்கு விடுத்த சவாலாக விளங்கியது. அவரினதும் அவரின் கட்சியினதும் கடிதங்களை அரசாங்கம் எந்த விதத்தில் கணித்ததோ அதே விதத்திலேயே இந்த இடைத்தேர்தல் கோரிக்கையையும் கணித்தது. 1975 வரை மூன்று ஆண்டுகள் கழியும் வரை காங்கேசன்துறை இடைத்தேர்தல் நடாத்தப்பட இல்லை.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் தேசிய அரச பேரவையின் காலம் கூட்டரசாங்கத்தினால் நீடிக்கப்பட்டதற்கு எதிராக 1975ல் யூ.என்.பி.தலைவர் ஜே.ஆர்.ஜயவர்தன தமது கொழும்பு தெற்கு தேர்தல் தொகுதி பா.உ.பதவியை இராஜினாமாச் செய்த போது அரசாங்கம் இதில் இருந்து வேறுபட்ட விதத்தில் நடந்து கொண்டது. ஒரு சில மாதங்களுக்குள் இடைத் தேர்தலை நடாத்தி ஜயவர்தன மீண்டும் தேசிய அரசுப் பேரவைக்கு வருவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. முதலாளித்துவக் கட்சித் தலைவர்கள் தொடர்பாகக் காட்டப்படும் அக்கறையைப் பொறுத்தமட்டிலும் கூட இனவாத சிங்கள அரசாங்கம் சிங்கள-தமிழ் பாகுபாட்டின் அடிப்படையில் வேறுபாடு காட்டுவதைக் கைவிடத் தயார் இல்லை என்பதைக் காட்டிக்கொண்டது.

தொடரும்


කම්කරු මාවත

කම්කරු ගොවි ආණ්ඩුවක් සඳහා සටන තුලින්

ද්‍රවිඩ ජනයාගේ ප්‍රජාතන්ත්‍රීය අයිතීන් ආරක්ෂා කරව්!

“වෙනම ද්‍රවිඩ රාජ්‍යයක්” මිත්‍යාව ප්‍රතික්ෂේප කරව්!

බැංකු සේවකයෝ මර්ධනයන්ට විරුද්ධව සටනට සැරසෙති

சமசமாஜ-கம்யூனிச-சிறீலங்கா கூட்டரசாங்க சோவினிச அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராகத் "தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைக் காப்போம்! "என்ற முதல்பக்க தலையங்கத்துடன் வெளி வந்த கம்கறு மாவத்த(1973 ஜூன் 9)


கொல்வின் ஆர். டி சில்வா


சிறிமா பண்டாரநாயக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பு.க.க. ஆறாவது மகாநாடு

# ஜேர்மனியின் புண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர் அமைப்பின் நல்வாழ்த்துக்கள்

அன்பின் தோழர்களே,

உங்களது வரலாற்றுப் பெருமைமிக்க மாநாட்டுக்கு புண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர் புரட்சிகர நல்வாழ்த்துக்களை வழங்குகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யப்படுவது எமது இலங்கை பகுதியின் மட்டுமல்லாது முழு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும். இந்நடவடிக்கை தொழிலாளர் வர்க்கத்தின் ஆழமான புறநிலை அவசியங்களை பிரதிபலிக்கின்றது.

தமது வாழ்க்கை நிலைமைகளின் மீது தொடுக்கப்பட்டு வரும் பெரிதும் உக்கிரமமான தாக்குதல்களுக்கு எதிரான போராட்டத்துக்குத் தள்ளப்பட்டுவரும் பொதுமக்கள் தமது பாரம்பரிய அமைப்புக்கள் வர்க்க எதிரியின் நலன்களை காத்துக் கொண்டு எதிரி தரப்பு முகாமில் இருந்து கொண்டுள்ளதை காண்கின்றார்கள். இதைப் பொறுத்தமட்டில் சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் உதாரணமாகும். இடதுசாரி அரசாங்கமாக புகழப்பட்டதும் ஸ்டாலினிஸ்டுகள், திரிபுவாதிகள், மாஜி. குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள் ஆகிய தகல தரப்பினரதும் ஆதரவைப் பெற்றுள்ள இந்தஅரசாங்கத்தின் வேலைத்திட்டமானது முன்னைய யூ.என்.பி.அரசாங்கத்தினைக் காட்டிலும் பெரிதும் வலதுசாரியானது என்பது அம்பலமாகி உள்ளது. அது தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான மிகவும் உக்கிரமான தாக்குதல்களை தொடுப்பதோடு தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தினை முன்னொரு போதும் இல்லாத மட்டத்துக்கு விஸ்தரித்துள்ளதோடு பொலிஸ்-இராணுவ சர்வாதிகாரத்துக்கான பாதையை நிர்மாணித்துக் கொண்டும் உள்ளது. குமாரதுங்க அரசாங்கம் மக்கள் முன்னணிக்ககான ஒரு உதாரணமாக விளங்குவதோடு அது எந்த ஒரு வகையிலும் தற்சமயம் ஐரோப்பா பூராவும் தோன்றி வரும் அதற்குச் சமானமான மக்கள் முன்னணி வகையறாக்களில் இருந்து எதுவிதத்திலும் மாறுபட்டதல்ல. அவை ஒன்றில் இத்தாலியில் போல் இருந்து கொண்டுள்ள அரசாங்கங்களுக்கு ஆதரவு வழங்குகின்றன. அல்லது பிரான்சினுள் போல் வாக்குறுதி அளித்துள்ள ஒரு அரசாங்கத்தைப் போல் இருந்து கொண்டுள்ளன. பப்லோவாதிகள் இந்தத் தொழிற்பாட்டினுள் தீர்க்கமான பாத்திரத்தினை இட்டு நிரப்புகின்றார்கள். இத்தாலியினுள் பல தசாப்தங்களாக மண்டேலின் ஆதரவாளராக விளங்கிய லிவியோ மைத்தான் புறொட் அரசாங்கத்தின் முக்கிய முண்டுகோலாக விளங்குகின்றது.பிரான்சினுள் அலென் கிறிவின் ஸ்டாலினிஸ்டுகளினதும் சீர்திருத்தவாதிகளினதும் தீவிரவாதிகளதும் புதிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதில் முக்கிய பாத்திரத்தினை இட்டுநிரப்புகின்றார். ஜேர்மனியினுள் பப்லோவாதிகள் கிழக்கு பாகத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் முக்கிய காரணியான ஸ்டாலினிச பீ.டி.எஸ். அமைப்புக்கு முண்டு கொடுக்கின்றார்கள்.

இந்நிலைமையினுள் அடங்கி உள்ள பிற்போக்கு உள்ளடக்கத்தை குறைத்து மதிப்பிடாது இருப்பதோடு முதலாளித்துவம் தமது ஆட்சியை கொண்டு நடத்த முழுமனே செல்வாக்கிழந்து போன தொழிலாளர் அமைப்புக்களையும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதற்கு முதலாளித்துவ



பீட்டர் சுவார்ட்ஸ்

நெருக்கடியும் அடிப்படை பலவீனங்களும் காட்டிக் கொண்டுள்ள ஒரு அறிகுறியாகும். அப்பட்டமான சக்திகளைத் தவிர அவர்கள் அடிப்படையாகக் கொள்ள வேறு எதுவும் கிடையாது. 1938ல் நான்காம் அகிலத்தின் ஸ்தாபக வேலைத்திட்டத்தினுள் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டமை இன்றும் உண்மையாக இருந்து கொண்டுள்ளது: "ஒரு புறத்தில் மக்கள் முன்னணி மறுபுறத்தில் பாசிசம் தொழிலாளர் வர்க்கப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தினுள் ஏகாதிபத்தியத்தின் இறுதி அரசியல் வளங்களாக இருந்து கொண்டுள்ளன."

அனைத்துலகக் குழுவினால் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலம் மட்டுமே பொதுமக்களின் அடிப்படை உழைப்பாகவும் நனவான வெளிப்பாடாக விளங்குவதிலும் இன்றைய குழப்ப நிலைமையில் இருந்து விடுபடுவதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவதிலும் வெற்றி கண்டுள்ளது. பப்லோவாதத்தினதும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதத்தினதும் சகல போக்குகளுக்கும் எதிரான அனைத்துலக தொழிலாளர் வர்க்க வழிமுறைகளை காப்பதற்கு நான்காம் அகிலத்தின் நீண்ட போராட்டம் மூலம் அது இந்த பணிக்குத் தோள் கொடுக்க தயாராகி வந்துள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை ஒரு கட்சியாகப் பரிணாமம் செய்வதன் மூலம் நீங்கள் அந்தப் பணியை இட்டுநிரப்பும் பொறுப்புக்கு தோள் கொடுத்துள்ளீர்கள்.

நீங்கள் தேர்ந்தெடுத்துள்ள பெயர்- சோசலிச சமத்துவக் கட்சி- இரண்டு விடயங்களை வெளிப்படுத்துகின்றது. அதாவது பொதுமக்களின் அடிப்படை உழைப்புக்களையும் எமது இயக்கத்தின் அடிப்படை இலக்கு அது இலங்கையினுள்ளும் முழு இந்தியத் துணைக்கண்டத்தினுள்ளும் ஒடுக்கப்படும் மக்களையும் ஈர்த்துக் கொள்ளும் அறிகுறியாக மாறும். இந்தமாநாடு சோசலிசப் புரட்சிக்கான பயணப்பாதையில் ஒரு திருப்புமுனையாகும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.

* சோசலிச சமத்துவக் கட்சி நீடூழி வாழ்க!

* நான்காம் அகிலம் நீடூழி வாழ்க !

புண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர்
மத்திய குழுவின் சார்பில்
பீட்டர் சுவார்ட்ஸ்

# “மகாநாடு வெளிநாட்டுக் கிளையின் நடவடிக்கைகளுக்கு பலம்வாய்ந்த அடிப்படையை வழங்கியுள்ளது”

## பு.க.க.வெளிநாட்டுக் கிளை செயலாளர் ஆர்.நேசனின் நல்வாழ்த்துக்கள்

நான் இம்மாநாட்டுக்கு பு.க.க.வெளிநாட்டுக் கிளையின் புரட்சிகர நல்வாழ்த்துக்களை வழங்குகின்றேன். வரலாற்று ரீதியில் தீர்க்கமான இந்தக் கட்டத்தில் உங்களின் இந்த மகாநாட்டுக்கு நல்வாழ்த்துக்களை வழங்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். அனைத்துலக குழுவின் 1985-86 பிளவின் மூலம் இந்த மகாநாட்டுக்கான அத்திவாரம் இடப்பட்டது. பிரித்தானிய தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளுக்கு எதிராக அனைத்துலக குழுவைப் பாதுகாக்கும் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகரத் தலைமைக்கு தயார் செய்வதற்கு எமக்கு வாய்ப்புக் கிடைத்தது. பிளவின் பின்னர் கடந்த ஒரு தசாப்த காலமாக ஏற்பட்டுள்ள தீர்க்கமான மாற்றங்களை ஆய்வு செய்ய எமக்கு சந்தர்ப்பம் உருவானது. சோவியத் யூனியனின் வீழ்ச்சி உட்பட்ட இந்த மாற்றங்களைப் பற்றிய ஆய்வுகளின் முடிவாக எமது பணிகளை வரையறுத்துக் கொள்ள எம்மால் திரும்பவும் முடிந்தது.

இந்த அடிப்படையில் அனைத்துலகக் குழுவின் பகுதிகளை கட்சிகளாக பரிணாமம் செய்ய முடிவு செய்யப்பட்டது. நேற்றும் இன்றும் இடம்பெற்ற கலந்துரையாடல்களினுள் இந்த முடிவு ஆழமாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது என்பது தெளிவு. பு.க.க.வுக்கு புகழ்வாய்ந்த அரசியல் வரலாறு ஒன்றுண்டு. ஜேர்மனியின் பீ.எஸ்.ஏ.அமைப்பு உட்பட்ட அனைத்துலகக் குழுவின் கிளைகள் பு.க.க. அரசியல் போராட்டத்தில் இருந்து நிறையக் கற்றுக் கொண்டுள்ளன.

முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி உலகளாவிய ரீதியில் வளர்ச்சி கண்டுள்ளது. பிரான்சிய தொழிலாளர் போராட்டங்கள் உலகளாவிய ரீதியில் வளர்ச்சி கண்டு வரும் வர்க்கப் போராட்டத்தின் ஒரு முன்னோடி வெளிப்பாடாகும். அனைத்துலகக் குழு ஐரோப்பா பூராவும் வளர்ச்சி கண்டுவரும் போராட்டங்கள் தொடர்பாக ஒரு முன்நோக்கினைத் தயார் செய்துள்ளது. இந்த வேலைநிறுத்தப் போராட்டங்களின் படிப்பினைகளை ஆய்வுக்கு உள்ளாக்குவதன் மூலம் அதிகாரத்துவங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் மீது மீண்டும் தோல்வியைத் திணித்துள்ளதை நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். தொழிலாளர் வர்க்கம் அரசியல் முன்நோக்கினை அபிவிருத்தி செய்து கொண்டாக வேண்டும் என நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். ஜேர்மன் பொன் நகரில் இலட்சக் கணக்கானோரின் போராட்டம் வெடித்தது. கோல் அரசாங்கம் எதிர்வரும் மாதங்களில் தொழிலாளர் வர்க்கத்தின் மீது தாக்குதல் தொடுக்க தயாராகி வருவதோடு தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் அவற்றை தொழிலாளர்களின் மீது திணிக்கும் கொந்தராத்தினை பொறுப்பேற்றுள்ளன. அதிகாரத்துவத்தின் பிடியைத் தவிடு பொடியாக்காமல் தொழிலாளர் வர்க்கம் எதிர்கால வழியை தேடிக்கொள்ள முடியாது.

தொழிலாளர் வர்க்கம் புரட்சித் தலைமையை தயார் செய்வது அவசியமாகியுள்ளது. பல்வேறு மத்தியதர வர்க்கப் போக்குக்களின் நிலைப்பாடு, தொழிற் சங்க அதிகாரத்துவங்களின் பின்னால் இழுபட்டுச் செல்வதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது என்பதேயாகும். இன்று செய்ய வேண்டியது கோல் அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் பொருட்டு தொழிற்சங்க சம்மேளனங்களைப் பலப்படுத்த வேண்டும் எனக் கூறிக் கொள்ளப்படுகின்றது. ஐ.ஜி.மெட்டல் தொழிற்சங்கத் தலைமையை தொழிலாளர் வர்க்கம் பலப்படுத்த வேண்டும் எனக் கூறிக் கொள்ளப்படுகின்றது. பப்லோவாதிகள் கூறுவதும் இதுவேதான். மாஓவாதிகள் எம் சார்பாக போராடக் கூடிய ஒரு தலைமையை கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார்கள். இவர்கள் எதிர்வரும் போராட்டங்கள் தொழிற்சங்க எல்லைகளைத் தாண்டி வளர்ச்சி காண்கின்றன என்பதை நிராகரிக்கின்றார்கள். இவர்கள் முயற்சிப்பது தொழிலாளர்களை தொழிற்சங்க வரையறைகளுக்குள் முடக்கி வைப்பதற்கேயாகும். பிரான்சிய சம்பவங்களை ஆய்வு செய்யாமல் இவர்கள் அத்தகைய போராட்டங்களை ஜேர்மனியிலும் ஆரம்பித்தாக வேண்டும் என்கின்றார்கள்.

இந்த நிலைமையினுள் பீ.எஸ்.ஏ.அமைப்பின் பணிகள் தீர்க்கமானவை. அனைத்துலக குழுவின் 16வது கூட்டத்தொடரின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஜேர்மனியில் உள்ள துருக்கிய சுரங்கத் தொழிலாளர்களிடையே செயற்பட நாம் ஆரம்பிப்போம். அவர்கள் தொழிலாளர் வர்க்கத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட பகுதியினர். பீ.எஸ்.ஏ.அமைப்பு தமக்குக் கைகொடுக்கும் என்ற நம்பிக்கை தமக்கு இருந்து கொண்டுள்ளதாக அவர்கள் கூறினார்கள். நாம் சுரங்கத் தொழிலாளர்களை பேணும் நடவடிக்கைக் குழுக்களை அமைத்தோம். நாம் கூட்டங்களும் நடாத்தினோம். அங்கு தொழிலாளர் வர்க்கம் ஒரு புதிய கட்சியைக் கட்டியெழுப்புவது அவசியம் என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

பு.க.க.வின் வெளிநாட்டுக்கிளை, 1985-86 பிளவின் பின்னர் அனைத்துலக குழு முன்னெடுத்த போராட்டத்தின் பெறுபேறாக நிறுவப்பட்டது. பீ.எஸ்.ஏ. அமைப்பு பு.க.க.போராட்டத்தின் அரசியல் படிப்பினைகளை ஜேர்மனியில் வாழும் தமிழ் தொழிலாளர்களிடையே கலந்துரையாடியது. இந்திய-இலங்கை உடன்படிக்கையின் (1987) பின்னர் அதைப்பற்றி பு.க.க. வெளியிட்ட அறிக்கை இந்தத் தமிழ் தொழிலாளர்களிடையே ஒரு ஈர்ப்பினை ஏற்படுத்துவதில் வெற்றிகண்டது. வெளிநாட்டுக் கிளையின் அடிப்படை இலக்கு தமிழ் தொழிலாளர்களுக்கும் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் இடையே ஐக்கியத்தை நிர்மாணிப்பதேயாகும்.

நாம் பிரான்சில் ஒரு கிளையை நிறுவச் செயற்பட்டு வருகின்றோம். இந்நிலைமையினுள் விடுதலைப் புலிகள் எம்மீது தாக்குதல் தொடுத்ததை நீங்கள் அறிவீர்கள். தமிழ் மக்களுக்கு மத்தியில் அவர்களின் அடிப்படை தகர்ந்து கொட்டி வருவதே அதற்கான காரணம்.

இன்று கிளின்டனும் கோலும் சுயநிர்ணய உரிமையின் பேச்சாளர்களாகியுள்ளனர். பொஸ்னியாவினுள் இதன் அர்த்தமானது அந்தப் பிராந்தியத்தினுள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் கொணர்வதேயாகும். விடுதலைப் புலிகளோ அல்லது பீ.எல்.ஓ.வோ இந்தக் கோரிக்கையின் மூலம் அதையே செய்கின்றன. இவை அமைப்பு ரீதியில் பரிணாமம் கண்டுள்ளன. கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்ட இவர்கள் இன்று தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் மீது குண்டுத் தாக்குதல்களை நடாத்துகின்றார்கள். இந்த விதிமுறை யாழ்ப்பாணத்தில் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்தமட்டிலும் மாற்றம் கண்டுவிடாது. விடுதலைப் புலிகளின் இந்த பரிணாமம் எமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு புதிய மாநகர மேயர் முதலாளிகளின் சுபீட்சத்துக்கு சபதம்

ஒரு முதலாளி என்ற வகையில் தமக்கு "வர்த்தக பிரஜைகளின்""துயரங்களைப்" பற்றி நல்ல விளக்கம் இருப்பதால் கொழும்பில் உள்ள வர்த்தகர்களின் நலன்களுக்காக தம்மால் செய்ய முடிந்த சகலதையும் செய்வதாக சமீபத்திய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கொழும்பு மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்ட கரு ஜெயசூரிய தெரிவித்தார். இதன் பேரில் குறுகிய கட்சி வேறுபாடுகளுக்கு அப்பால் ஜனாதிபதியுடனும் அமைச்சரவையுடனும் இணைந்து செயற்பட தாம் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

புதிய நகர மேயராகப் பதவி ஏற்றதைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை முதலாளிகளின் முக்கிய அமைப்பான இலங்கை கைத்தொழில், வர்த்தக சபையினால் ஏப்பிரல் முற்பகுதியில் நடாத்தப்பட்ட இராப்போசன விருந்தில் பேசுகையிலேயே ஜெயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு நகர மேயர் என்ற முறையில் ஏகாதிபத்திய முதலீட்டாளர்களையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களையும் இலங்கைக்கு தருவித்து அவர்களின் நலனுக்கு ஏற்ற விதத்தில் நகரத்தை "நவீனமயமாக்குவது" சம்பந்தமாக ஏகாதிபத்தியவாதிகளுக்கு வழங்கிய ஒரு உத்தரவாதமாக மேயரின் இப்பேச்சு விளங்கியது. ஒரு முதலாளியான தாம் தமது வர்க்க சகோதரர்கள் கொண்டுள்ள பிரச்சினைகளை விளங்கிக் கொண்டுள்ளதால் தம்மைப் பற்றி எந்தவிதமான சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் அந்த விருந்து வைபவத்தில் வேண்டிக் கொண்டார்.

கரு ஜெயசூரிய நகரத்தை "பெரிதும் சுத்தமாகவும் கவர்ச்சியாகவும் வைத்திருக்கும் "திட்டத்தில் தனியார்துறையின் "பங்களிப்பை" பற்றிச் சுட்டிக்காட்டினார். தெருக்கள், சந்தி வளைவுகள் முதலியவற்றை பராமரிக்கும் பொறுப்பை தனியார் கம்பனிகளிடம் ஒப்படைப்பது பற்றியும் இங்கு பேசப்பட்டுள்ளது. இதன் அர்த்தம் ஆயிரக்கணக்கான நகரசபை தொழிலாளர்களை வேலைகளில் இருந்து வெளியேற்றுவதாகும்.

மாநகர சபைக்கு பங்களிப்புச் செய்ய தொழிலாளர்களின் சில நாள் வேலையை விரைவுபடுத்தும் திட்டத்தின் பின்னர் - எதிர்பார்த்த அளவுக்கு வேலை செய்யாத தொழிலாளர்கள் மீது தாக்குதல் தொடுக்கும் திட்டம் இருந்து கொண்டுள்ளது. மாநகர சபையின் பங்களிப்பு செய்யாத தொழிலாளர்களின் நூறு நாள் வேலையை விரைவுபடுத்தும் திட்டத்தின் பின் எதிர்பார்த்த அளவுக்கு வேலை செய்யாத தொழிலாளர்கள் வேலைநீக்கப்படுவர். ஒரு ஆய்வின்படி கொழும்பு ஜனத்தொகையில் நூற்றுக்கு 40 வீதத்தினர் சேரிகளில் வாழ்கின்றனர். வீடுகள் இல்லாமல் மேலும் பல்லாயிரக் கணக்கானோர் பிச்சை எடுக்க அலைந்து கொண்டுள்ளனர். புதிய "நகர அபிவிருத்தி "திட்டத்தின் கீழ் இராணுவத்தையும் பொலிசையும் கொண்டு இந்த ஏழைகள் ஒடுக்கி, ஓட்டிக் கலைக்கப்படுகின்றனர். இவர்களை அன்னியமான வீரவில போன்ற ஒடுக்குமுறை முகாம்களில் தள்ளுவதும் இப்போது வழக்கமாகி விட்டது. "பயங்கரவாதிகள் "சோதனைகளுக்கு இந்த ஏழைமக்கள் அடிக்கடி பலிகடாக்கள் ஆகி வருகின்றனர்.



வன்னியில் இருந்து படகில் யாழ்நகர் வந்திறங்கும் அகதிகள்

# தமிழ் அகதிகளின் உதவி நிவாரணம் வெட்டு

## யாழ்ப்பாணத்தில் தொற்றுநோய் பரவும் ஆபத்து

வவுனியா சித்திரவதை முகாம்களில் இருந்து வரும் தமிழ் அகதிகளுக்கு நாளாந்த உதவி நிவாரணம் என்ற பேரில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த ரூபா.50ஐ வெட்டிவிட்டு உலர் உணவு பொருட்களை மட்டும் வழங்க பொதுஜன முன்னணி அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அகதிகள் முகாம்களில் அடிப்படை வசதிகள் தன்னும் இல்லாமல் இருந்து வரும் ஒடுக்கப்படும் தமிழ் மக்களை எப்பாடு பட்டேனும் யாழ்ப்பாணத்துக்கு திரும்பச் செய்யத் தைரியமூட்டும் நடவடிக்கையின் ஒரு பாகமாக இது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக நம்பப்படுகின்றது.

இந்தத் தமிழ் அகதிகள் ரிவிரச 1,2,3 இராணுவ நடவடிக்கைகளின் போது அவற்றின் கொடூரத்தில் இருந்து உயர்பிழைக்க யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களாவர். யாழ்ப்பாணம் திரும்ப வசதிசெய்து கொடுப்பதாக அரசாங்கம் வாக்குறுதி வழங்கியதால் இவர்கள் கிளிநொச்சி அரசாங்கப் படைகளால் கைப்பற்றப்பட்ட சமயம் வவுனியாவுக்கு வந்தனர். இம்மக்களுக்கு போதிய உணவோ, அடிப்படை சுகாதார வசதிகளோ தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கைகளோ எதுவும் இல்லாததால் இவர்கள் தொற்றுநோய்களுக்கு பலியாகும் பேராபத்து இருந்து வருகின்றது. அத்தோடு அம்மக்களிடையே இருந்துவரும் இளைஞர்கள், யுவதிகளில் பலர் விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேக நபர்களாக கைதுசெய்யப்பட்டும் வருகின்றனர்.

இராணுவத் தாக்குதலில் இருந்து பாதுகாப்புத் தேடி தமிழ் மக்கள் வன்னிப் பிராந்தியத்துக்கு ஓடியிருப்பினும் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகள் இடம்பெறும் இப்பகுதியில் தமக்கு எந்த ஒரு வசதியையும் தேடிக்கொள்ள இம்மக்களால் முடியாது போயுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் மரநிழல்களிலும் வாய்க்கால் கட்டு ஓரங்களிலும் தங்கி தமது [illegible] அவலநிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதைத் காணமுடிகின்றது. ஈயும் நுளம்புகளும் நிறைந்த அசுத்த நீரும் போஷாக்கற்ற உணவும் காரணமாக இம்மக்கள் பயங்கர நோய்களுக்கு பலியாகும் ஆபத்து இருந்துவருகின்றது. இந்த நிலைமைகளின் கீழ் வாழும் மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலையை ஏற்றியும் பல்வேறுபட்ட வரிச் சுமைகளைத் திணிப்பதன் மூலமும் விடுதலைப் புலிகளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் பழு ஏற்றிப் பணம்கறக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். இவற்றில் இருந்து தலைதப்பவே இம்மக்கள் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்பிக் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகி வருகின்றது.

முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்கள் மக்கள் யாழ்ப்பாணம் நோக்கித் திரும்புவது இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிராந்தியங்களில் உருவாகியுள்ள அமைதி நிலையின் விளைவாகவே என்ற பொய்ப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன.

வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிய மக்களுக்கு தமது இருப்பிடங்கள் இல்லாது இருப்பது பெரும் பிரச்சினை ஆகியுள்ளது. இதற்குக் காரணம் யுத்தத்தினால் வீடுகள் உடைத்துத் தள்ளப்பட்டமையும் எஞ்சிய சிலவும் இராணுவப் பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமையுமே. வீடுகளில் 40 வீதமானவை இராணுவத்தினால் கையேற்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. வீடுகள் இல்லாமல் செய்யப் பட்ட மக்கள் இன்று எதிர்கொண்டுவரும் நிலைமைகளுக்கான பொறுப்பு, அதிகாரம் மிக்க இராணுவ அதிகாரிகளுக்கே உரியதாகுமென புகழ்மிக்க ஒரு அறிக்கை முதலாளித்துவ பத்திரிகைகளில் பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கவே இச்சமயத்தில் வீடுகளைக் கைப்பற்றியுள்ளோம். அச்சகல இடங்களையும் உடைத்து முகாம்களாக [illegible] [illegible] எமக்கிருந்து கொண்டுள்ளது " இந்த செய்தி கூறுவது என்ன? யாழ்ப்பாணம் செல்லும் மக்களை சிறைப்படுத்தி, சகல மூலை முடுக்குகளிலும் இராணுவ முகாம்களை கட்டியெழுப்புவதேயாகும்.

யாழ். குடாநாட்டிலும் தீவுப் பகுதிகளிலும் பயங்கர தொற்று நோய்கள் பரவி வருகின்றன. பரவிவரும் மலேரியாவைக் கட்டுப்படுத்தத் தக்க எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்கவல்ல வைத்திய அதிகாரியும் இங்கு இல்லை. மலேரியாவின் பரம்பலுக்கு எதுவிதத்திலும் குறைச்சல் இல்லாத வகையில் வாந்திபேதி, மூளைக்காய்ச்சல், டெங்கு போன்றவற்றின் ஆபத்தும் பரவிவருகின்றது.

யாழ் போதனா வைத்தியசாலையில் சேவையாற்ற 97 பேர் அவசியப்படுமிடத்து இப்போது 39 பேர் மட்டுமே சேவையில் ஈடுபட்டுள்ளனர். தேவைப்படும் வைத்திய அதிகாரிகளின் எண்ணிக்கை 75 ஆக இருந்த போதும் தற்சமயம் 03 பேர்மட்டுமே உள்ளனர். பல் வைத்தியர் 15 பேர் அவசியப்படும் இடத்தில் மூவர் மட்டுமே இருந்து கொண்டுள்ளனர். 'யாழ்ப்பாணத்தில் 827 சுகாதார ஊழியர் வெற்றிடங்கள் இருந்து கொண்டுள்ளன. இதில் 345 வெற்றிடங்கள் தாதிமார்களது. 100வெற்றிடங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உரியது. அத்தோடு யாழ்ப்பாண போதானா வைத்தியசாலையில் மட்டும் 147 தாதிகளுக்கான இடங்கள் நிரப்பப்படாது காலியாக உள்ளது. மருத்துவ தாதிமார்கள் எண்ணிக்கை 32 வெற்றிடமாக உள்ளது.

வீட்டுவசதி, சுகாதார வசதி, குடிநீர் வசதி போஷாக்கு உணவு இல்லாமல் யாழ்பபாணத்தில் திரும்பவும் வாழ்க்கையை நடாத்த முயற்சிக்கும் மக்கள் முகம் கொடுக்கும் முயற்சி எவ்வளவு ஆபத்துக்கள் நிறைந்தது?

வீதிக்கு வீதி சந்திக்கு சந்தி இராணுவ சோதனைகளுக்கு உள்ளாகி வரும் நிரந்தர இம்சைகளுக்கு பலியாகிவரும் தமிழ் மக்களிடையே யாழ்.குடாநாட்டின் இராணுவ ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு குமுறிக் கொண்டுள்ளது.

வெளிநாட்டுக் கிளையினதும் அவ்வாறே பு.க.க. நடவடிக்கைகள் தொடர்பாகவும் தீர்க்கமானது. தமிழ் மக்கள் மீட்சி பெறுவதற்கான மார்க்கம் சிங்கள தொழிலாளர்களுடன் ஐக்கியப்படுவதிலேயே உள்ளது. பிரான்சில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னணிக்கு வரும் தமிழ் தொழிலாளர்கள் இப்போது எமது கருத்துக்களின் பக்கம் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் சிங்கள, தமிழ் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்துவதையிட்டு சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். எனவேதான் விடுதலைப் புலிகள் எம்மை தாக்கி வருகின்றார்கள். நாம் விடுதலைப் புலிகளின் குண்டர் தாக்குதல்களை எதிர்த்து பலம்வாய்ந்த ஆதரவைப் பெற்றோம். கூட்டங்களை ஏற்பாடு செய்து பிரச்சாரம் செய்தோம். பலர் எமது பாதுகாப்புக்காக முன்வந்தனர். உலகத் தொழிலாளர் வர்க்கம் எமது வெளிநாட்டுக் கிளைக்கு வழங்கிய ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு ஒரு பலத்த அடியாகும். லண்டனிலும் ஜேர்மனியிலும் நடாத்திய கூட்டங்களில் நாம் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்தை வெளிக்காட்டினோம்.

1980பதுகளில் வெளிநாடுகளுக்கு வந்த தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களாக மாறினர். ஆனால் அவர்கள் இன்று அனைத்துலகவாதிகளாக மாறிக்கொண்டுள்ளனர். ஐரோப்பாவினுள் எமது போராட்டம் அனைத்துலகக் குழுவின் பிரான்சிய பகுதியையும் பீ.எஸ்.ஏ.யையும் கட்டியெழுப்புவதை மையமாகக் கொண்டுள்ளது. நாம் பு.க.க.வுடன் நிலையான பிணைபபுடன் தொழிற்படுவோம். பிரான்சினுள் எமது வெளிநாட்டுக் கிளைக்கு மிகவும பலம் வாய்ந்த அமைப்பு இருந்து கொண்டுள்ளது. இம்மாநாட்டின் தீர்மானங்கள் ஜேர்மனியிலும் பிரான்சிலும் எமது நடவடிக்கைகளுக்கு பலம் வாய்ந்த ஒரு வழிகாட்டியாக மிளிரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகொல்ல தோட்டம்:*

# இலாப கொடுப்பனவு கோரி தொழிலாளர் வேலைநிறுத்தம்

நூற்றுக்கு 10வீதம் இலாப கொடுப்பனவு கோரி ஏப்பிரல் 17ம் திகதி அலகொல்ல தோட்டத்தில் ஆரம்பமான வேலைநிறுத்தம்

தொழிற்சங்கத் தலைவர்களால் ரூபா.900 கடன் பெற்றுக் கொடுத்து மே 2ம் திகதி காட்டிக் கொடுக்கப்பட்டது. இதனால் தொழிலாளர்கள் பெரிதும் ஆத்திரமடைந்து காணப்பட்டனர். தொழிலாளர் பாதை நிருபருடன் பேசிய தொழிலாளர்கள் இந்த கருங்காலி நடவடிக்கையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

வேலைநிறுத்தம் ஆரம்பமானதன் பின்னர் ஏப்பிரல் 19ம் திகதி பேசிய தலைவர்கள் ரூபா.1000 வழங்காது விட்டால் வேலைக்குத் திரும்புவதில்லை எனக் கூறினார்கள். அரசாங்கமும் கம்பனிகளும் தொழிற்சங்கங்களும் ஒன்று சேர்ந்துதான் இந்த இலாபப் பங்கீட்டு முறையை புகுத்தினர். தோட்டத்தின் இலாபத்தில் ஒவ்வொரு 100ரூபாவிலும் ரூபா.51 கம்பனிக்கும் ரூபா.19 அரசாங்கத்துக்கும் ரூபா.20 அதிகாரிகளுக்கும் ரூபா.10 தொழிலாளர்களுக்கும் கிடைக்கும் எனக் கூறினார்கள். நாம் கேட்டது இந்த நூற்றுக்கு 10 வீதத்தையேதான்.

தலைவர்கள் தொழிற் திணைக்கள பதுளை அலுவலகத்துக்கு போனார்கள். எனினும் அங்கு கம்பனிகாரர்கள் எவரும் வரவில்லை. ஏப்பிரல் 28ம் திகதி கொழும்புக்கு வரும்படி சொன்னார்கள். நான் தலைவர் அல்ல. எனினும் நானும் கொழும்புக்கு போனேன். கம்பனி தலைவர் 1995ல் தோட்டத்துக்கு நஷ்டம் எனவும் ஆதலால் 1995க்கு இலாபம் வழங்க முடியாது என்றார். 1996க்கு மட்டும் இலாபத்தை பார்த்து வழங்குகிறேன் என்றார்.

தொழிலாளர்களுக்கு எவ்வளவு பணம் வழங்கப்போகிறார்கள்? எப்போது வழங்கப் போகிறார்கள் என எமது நிருபர் கேட்டதற்கு அந்த தொழிலாளி கூறியதாவது :

பணத்தை பற்றி ஒன்றும் பேசவேயில்லை.இலாபத்தைப் பார்த்துத் தான் அதை கூறுவதாகக் குறிப்பிட்டார்கள். ஆறாம் மாதத்தில் பணம். தருகின்றோம் என்றார்கள். ஒரு மாத கால்ம் வேலைநிறுத்தம் செய்ததால் எமக்கு சம்பளம் கிடையாது. சகலருக்கும் ரூபா.900 கடன் வழங்க கம்பனி துரை இணங்கினார். அதைக் கொடுத்தார்கள். அதில் ரூபா. 90 அளவில் வெட்டுகின்றார்கள் என்றார்.

இந்தக் கலந்துரையாடலைக் கேட்டுக் கொண்டு நின்ற இன்னொரு தொழிலாளி கூறியதாவது:

"அது வெறும் கயிறு . நான் சமசமாஜக் கட்சி தொழிற்சங்கத்தில் இருக்கின்றேன். அதன் தலைவர் சுந்தரலிங்கம் கொழும்புக்கு போய் வந்து சொன்னார் : ஆறாம் மாதத்தில் இலாபம் கொடுப்பார்கள். இப்போது இந்த ரூபா.900கடனை வாங்கிக் கொண்டு வேலைக்குத் திரும்புங்கள் என்றார்.தலைவர் கூறியதால் நாம் திரும்பினோம். தொழிலாளர்கள் இத்தகைய நடவடிக்கைகளை எதிர்க்கின்றார்கள். மனவேதனையுடனேயே நாம் வேலைக்குத் திரும்பினோம்."

இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, சமசமாஜக் கட்சி தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை இத்தகைய இருட்டுப் பாதைகளூடாகவே இழுத்துச் செல்கின்றனர்.

தோட்டங்களின் இலாபத்தில் தொழிலாளர்களுக்கு நூற்றுக்கு 10வீதம் பெற்றுத்தருவதாக அரசாங்கமும் கம்பனிகளும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் நடாத்தும் மோசடிகளை தொழிலாளர்கள் அடியோடு நிராகரிக்க வேண்டும். அது தொழிலாளர்கள் ஒரு நாகரீகமான வாழ்க்கையை ஓட்டுவதற்கு அவசியமானதும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்க ஏற்ப உயர்ந்து செல்லும் சம்பளத்துக்கான போராட்டத்துக்கு எதிராகத் தொழிலாளர்களை தடம்புரளச் செய்யும் சதியாகும். அத்தோடு இலாபத்தில் பங்கு வழங்கும் மோசடியின் கீழ் தொழிலாளர்களை சாகடித்து வேலைவாங்கும் திட்டமுமாகும். இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களுமக்கு மாதச் சம்பளம் வழங்குவோதற்கு எதிராக கம்பனி முதலாளிகளின் வக்கீல்களாக நின்று வருகின்றனர்.

× கம்பனிகாரர்களுடன் மரசம் செய்து கொண்ட தொழிற்சங்கத் தலைவர்களை வெளியேற்று !

× ரூபா.5000 மாதச் சம்பளம், வாழ்க்கைச் செலவு சுட்டெண் அதிகரிப்புக்கு ஏற்ப உயர்ந்து செல்லும் சம்பளம் வழங்கு !

× கம்பனியின் கணக்கேடுகளை தொழிலாளர்களுக்கு திறந்து வை 1995-96 நிஜ இலாபத்தை அம்பலப்படுத்து !

× தொழிலாளர் -விவசாயிகள் அரசாங்கத்துக்கு போராடு !

*மஸ்கேலிய காட்மோர் தோட்டம்*

# வழக்கு தாக்கல் செய்வதை தலைவர் தாமதமாக்கினார்

மஸ்கேலிய காட்மோர் தோட்டத்தின் தம்பதனை டிவிசனை சேர்ந்த எஸ்.மாரிமுத்து, சமயன், லோகம்மாள் சுந்தரி ஆகியோர் தோட்ட நிர்வாகத்தினால் தோட்ட நிர்வாகத்தினால் 1992 அக்டோபர் 7ம் திகதியில் இருந்து வேலைநீக்கம செய்யப்பட்டனர். நான்கரை வருடங்கள் கழிந்த போதிலும் இவர்களுக்கு தொழில் வழங்க நிர்வாகம் தொடர்ந்து மறுத்துவருகின்றது.

இவர்கள் மேலதிகமாக ஒரு வீட்டை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே வேலைநீக்கம் செய்யப்பட்டனர். இது ஒரு பொய்க் குற்றச்சாட்டாகும். உண்மையில் நான்கு குடும்பத்துக்கு நான்கு வீடுகள்தான் இருந்தது. அப்படி இருந்தும் கூட ஒரு வீட்டை 1992 அக்டோபர் 02ல் நிர்வாகத்திடம் ஒப்படைத்தோம்.இருந்தும் எங்கள் நால்வருக்கும் இன்னமும் வேலை வழங்கப்பட இல்லை. வேலைநீக்கம் செய்யப்பட்ட மாரிமுத்து தொழிலாளர் பாதைக்கு கீழ்க்கண்டவாறு தெரிவித்தார்:

நாங்கள் இ.தொ.கா.அங்கத்தவர்கள். இச்சங்கத்தின் மஸ்கேலிய பிரதிநிதியான சிவலிங்கம் தோட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு எங்களைக் காட்டிக்கொடுத்துள்ளார். எங்களின் வேலை நீக்கத்திற்கு எதிராகத் தொழிற் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்யப்படுவதை இவர் திட்டமிட்டு தாமதப்படுத்தினார்.இது 6மாதங்கள் காலதாமதமாகி தாக்கல் செய்யப்பட்டதால் செல்லுபடி அற்றது எனத் தள்ளுபடி செய்யப்பட்டது.

தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் இந்த இலட்சணத்தில் தொழிலாளர் உரிமைகளைக் காட்டிக் கொடுதது வருகின்றன எனவும் சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் எனவும் மாரிமுத்து வேண்டிக் கொண்டார்.மாரிமுத்து உட்பட்ட நான்கு தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் அமர்த்தும் போராட்டத்தை சோசலிச சமத்துவக் கட்சியும் பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் முன்னெடுத்துள்ளன.

*தெற்கு வனராசா தோட்டம்*

# தொழிலாளர் 6 மாத வேலை நிறுத்தம்

டிக்கோயாவைச் சேர்ந்த தெற்கு வனராஜா தோட்டத் தொழிலாளர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 25ம்திகதியில் இருந்து வேலை நாள் மற்றும் அடிப்படை வசதிகளின் பேரில் வேலைநிறுத்தம் செய்து வருகின்றார்கள். தனியாருக்கு சொந்தமான இந்தத் தோட்டத்தில் வேலை செய்யும் தமக்கு 25 நாள் வேலை, வீடு , தண்ணீர், மலசல கூட வசதிகள் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படவேண்டும் எனக்கோரியே இத்தோட்டத்தைச் சேர்ந்த 84 தொழிலாளர்கள் கடந்த 6மாதங்களாக வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். வேலைநிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்கள் இ.தொ.கா. அங்கத்தவர்களாக இருந்த போதிலும் சங்கத் தலைமை இவர்களுக்கு ஆதரவாக தோட்டத் தொழிலாளர்களின் ஏனைய பிரிவினரை அணிதிரட்ட மறுத்துவருகின்றது. சங்கத் தலைமை கூறுவது எல்லாம் தொழிற் கோட்டு வழக்கைப் பார்த்துக் காத்திரு ! அவ்வளவுதான். இது காலங்கடத்தல் விதிமுறையாகக் கையாளப்படுகின்றது.

தொழிலாளர் பாதை நிருபருடன் பேசிய வேலைநிறுத்தத் தொழிலாளர்கள் தமது போராட்டம் சம்பந்தமாக பின்வருமாறு குறிப்பிட்டனர்: "எங்களுக்கு வீட்டுப் பிரச்சினை முக்கிய பிரச்சினையாக உள்ளது. நாங்கள் மாட்டுப் பட்டிகள் போன்ற வீடுகளில் வசிக்கின்றோம். இவை 1956ம் ஆண்டில் தனி ஒரு இரவில் கட்டி முடிக்கப்பட்டவை. மழைபெய்தால் இந்த வீடுகளில் இருக்க முடியாது. இடிந்த வீட்டிற்கு மண்வைக்கக் கூட எங்களுக்கு உரிமை கிடையாது.வீட்டை நாம்சொந்த செலவில் திருத்தினால் கூட நிர்வாகம் பொலிசாரைத் தோட்டத்துக்கு அழைக்கின்றது. மூன்று, நான்கு குடும்பங்கள் ஒரே வீட்டில் வாழ்கின்றோம். வெற்றுக் காணியில் எமது சொந்தச் செலவில் வீடு கட்டினாலும் நிர்வாகம் வீட்டை உடைக்கின்றது. வேலை நீக்கம் செய்கின்றது. இப்படி வீடு கட்டியதற்காக பீ.இராஜேந்திரன், பீ.ஆரியதாச, ஆகியோரர் வேலை நீக்கம் செய்யப்பட்டு, வருடக்கணக்காக வேலையில்லாமல் இருக்கின்றனர்." என்றார்.

கே.இராஜேந்திரன் என்ற தொழிலாளி இந்த பிரச்சினைகள் பற்றி எமது நிருபருடன் பேசுகையில் கூறியதாவது : எங்களது மூன்று குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 12 பேர் ஒரே வீட்டில் வாழ்கின்றோம். சமைப்பது, உறங்குவது எல்லாம் இதற்குள்தான். எனக்கு நான்கு பிள்ளைகள். எனது தம்பிக்கு இரண்டு பிள்ளைகள். அத்துடன் எமது தாய், தந்தையர் எ்லலாம் இந்தச் சிறிய வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கின்றோம். எமது வீட்டுக்கு முன்னால் உள்ள வெற்றுக் காணியில் ஒரு குடிசை அமைத்ததினால் எனது தம்பி மகேந்திரனை நிர்வாகம் வேலைநீக்கம் செய்தது. வீட்டை உடைத்த பின்புதான் வேலை வழங்கியது. வேலைநிறுத்தம் 6மாதமாகியும் ஒரு முடிபும் இல்லை. தொழிற்சங்கம் வழக்கின் முடிவை எதிர்பாருங்கள் எனக் கூறிக் காலங் கடத்துகின்றது."

பீ.வெள்ளையன் என்ற தொழிலாளி கூறியதாவது: நான் 1995ம்ஆண்டு நவம்பர் 15ம்திகதியில் இருந்து இரண்டுவாரம் சுகவீனம் காரணமாக வேலைக்குப் போகாததினால் நிர்வாகம் என்னை வேலையில் இருந்து இடைநிறுத்தி உள்ளது. அதற்கு எதிராக நான் தொழிற்கோட்டில் வழக்குத் தாக்கல் செய்தேன். கடந்த மே 12ம் திகதி தொழிற்கோட்டின் தீர்ப்புக் கிடைத்தது.ரூபா.2500 நஷ்டஈடு கிடைத்தது .வேலைதிருப்பி வழங்கப்படமாட்டாது என தீர்ப்புக் கூறியது. நான் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளேன். மீண்டும் வேலை வேண்டும். அல்லது பென்ஷன் எடுக்கும் வரையில் சம்பளம் நஷ்டஈடாகத் தரவேண்டும் ."

நீதிமன்றங்கள் முதலாளிகளுக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூறு வதாகக் குறிப்பிட்ட வெள்ளையன் , தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க போராட்டத்தில் இறங்க வேண்டும் என்றார்.

கண்பார்வையற்ற தாயுடன் வாழ்ந்து வரும் பீ.விஜயலட்சுமி என்ற இளம்பெண் ஒரு சிறிய குடிசை அமைத்ததற்காக அட்டன் பொலிசார் தன்னை விசாரணைக்காகக் கூட்டிச் சென்றதாகத் தெரிவித்தார்.

# தோட்டப் பகுதி இளைஞன் மீது பொலிஸ் மிலேச்ச தாக்குதல்

"என்னை கதிரையில் இருத்தி, கைகளைக் கட்டி, தலைக்கு ஹைறல்மட் போட்டு மின்சாரம் பாய்ச்சினர்.பைப்பினால் கழுத்தின் இரண்டு பக்கத்தையும் தாக்கினர். நீ புலி அல்லவா என்று கேட்டுக் கொண்டே பொலிஸ் நிலைய அதிகாரி என்னை இவ்வாறு தாக்கினார். இதனால் என்னால் கதைக்கவும் முடியாது காதும் கேட்பதில்லை." மஸ்கேலிய பிரவுண்லோ தோட்ட இளைஞனான மலையாளம் பிச்சமணி தொழிலாளர் பாதை நிருபரிடம் இங்ஙனம் குறிப்பிட்டார்.

கடந்த பெப்பிரவரி 28ம் திகதி கிருலப்பனை சந்தைக்குப் போன சகோதரியும் அவளின் தோழியும் பொலிசாரால் கைது செய்யப்பட்டதைக் கேள்விப்பட்டு பொலிசுக்கு சென்றவருக்கே இந்தச் சித்திரவதை இடம்பெற்றது. சகோதரி வெலிக்கடை சிறைக்குக்கு மாற்றப்பட்டதை அறிந்து பிச்சமணி அங்கு சென்றார். அங்கு அவர்கள் நீதிமன்றம் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவந்து அங்கிருந்து வெளியேற முற்பட்டார். அச்சமயத்தில வெலிக்கடை அதிகாரி வேறொரு அதிகாரியுடன் வந்து பிச்சமணியைக் கைது செய்து, பொலிசுக்கு கொண்டு சென்றார். பிச்சமணியின் தொலைந்து போன தேசிய அடையாள அட்டை தொடர்பாக வெலிக்கடை பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பேரில் அவர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் பிரதியை நம்ப மறுத்த பொலிசார், குற்றவியல் புலன் விசாரணை பகுதியினரின் விசாரணைக்கு பிச்சமணி உள்ளாகத் தங்கியாக வேண்டும் என்றனர். அவரின் உடம்பில் காணப்பட்ட தளும்புகளைப் பற்றியும் அவர்கள் விபரங்களைக் கேட்டு எழுதிக்கொண்ட பின்னரே இவ்விதம் எல்லாம் தாக்கினர்.

வேலைத்தளத்தில் இருந்து ஆட்கள் வந்த போதும் பிணை வழங்கப்படவில்லை. மாரச் 3ம் திகதி அவர் தேசிய அடையாள அட்டைப் பிரதி இல்லாமலேயே விடுதலை செய்யப் பட்டார். வேலைத்தளம் வந்த பின் தனது நிலைமை மோசமாகியதாகக் குறிப்பிட்ட பிச்சமுத்து, 10 நாட்களின் பின்னரே சாப்பிட முடிந்ததாகக் கூறினார். பெப்பிரவரி 28ம் திகதி கைதுசெய்யப்பட்ட இவரது சகோதரியும் தோழியும் மார்ச் 4ம் திகதியே ரூபா.5000பிணையில விடுதலை செய்யப்பட்டதாக அவர் மேலும் குறப்பிட்டார்.

தோட்டப்புறங்களில நிலவும் வேலையின்மை காரணமாகவும் வேலை வெட்டுக் காரணமாகவும் நகரப்புறங்களுக்கு வரும் தோட்டப்புற இளைஞர்கள் எந்த விதத்தில் தொண்டமான்-செல்லச்சாமி தலைமைகளை உள்ளடக்கிய முதலாளித்துவ பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளுக்கு இலக்காகின்றனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூபவாஹினி ஊழியர்கள் பலாலி இராணுவ முகாமுக்கு

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பொறியியல் பிரிவைச் சேர்ந்த ஊழியர்களை இனவாத யுத்தத்துக்கு பலிகொடுக்கும் தயாரிப்புக்களில் ரூபவாஹினிக் கூட்டுத்தாபன அதிகாரிகளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தயாராகி வருகின்றன. பலாலி விமானத்தளத்தில் உள்ள இராணுவ முகாமில் இருந்து சிறப்பு ஒளிபரப்பு நடவடிக்கைகளுக்காக இந்த ஊழியர்கள் பலாத்காரமான முறையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இப்போது பொறியியல் பிரிவில் உள்ள ஊழியர்களின் பட்டியல் ஒன்று தயார் செய்யப்பட்டு இவர்கள் "றோஸ்டர்" அடிப்படையில் இந்த யுத்த முனை சேவைக்கு அனுப்பப்பட உள்ளனர். இத்தயாரிப்பு தொடர்பாக பொறியியல் பிரிவைச் சேர்ந்த ஒரு ஊழியர் பின்வருமாறு குறிப்பிட்டார்: "இந்த ஒளிபரப்பு இராணுவத்துக்கு மட்டுமே. பழைய கசட் நாடாக்களை வைத்துக்கொண்டு பதிவு செய்கின்றார்கள். இந்த ஒளிபரப்பினை பலாலி சென்று செய்வதற்கு நாம் விரும்பவில்லை. அங்ஙனம் செய்ய முடியாது போனால் சேவையில் இருந்து விலகச் சொல்கின்றார்கள். தொழில் இல்லாது ஜீவிக்க முடியுமா? ஆதலால் நாம் செல்கின்றோம். மரண விறாந்தினை கழுத்தில் கட்டிக் கொண்டு நாம் வேலை செய்கின்றோம்.

"இதற்கு முன்னர் ரூபாவாஹினியின் ஒரு பொறியியலாளரும் ஒரு படப்பிடிப்பாளரும் ஒரு சாரதியும் வடக்கில் காணாமல் போய்விட்டார்கள். அவர்களுக்கு என்ன நேரிட்டது என்பதை இதுவரை எவரும் அறியார்.

"பலாலிக்கு போகும் ஒருவர் மீண்டும் கொழும்புக்கு வருவது என்பது வேறு ஒருவர் இந்த முகாம் சேவைக்குச் சென்றதன் பின்னரே சாத்தியமாகும். இதுவரை காலமும் பல விமானங்கள் யுத்தத்தினால் அழிந்து போயுள்ளதால் வேறு ஊழியர்கள் சேவைக்கு வருவதும் பெருமளவுக்குத் தாமதமாகின்றது. இந்தக் கஷ்டங்கள் பற்றி அதிகாரிகளுக்கு விடயங்களை எடுத்து விளக்கிய பொறியியல் ஊழியர் சங்கச் செயலாளர் மீது இக்கட்டான கடமைகளைத் திணிக்கும் ஆபத்தும் இருந்து கொண்டுள்ளதாக" ஊழியர்கள் தொழிலாளர் பாதைக்குத் தெரிவித்தனர்.

# தொண்டர் ஆசிரியர்களுக்கு சேவை நிரந்தரமும் சம்பளமும் வேண்டும்

உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்திலும் ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயத்திலும் சேவை செய்யும் 29 தொண்டர் ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு மாதங்களாக எதுவிதமான கொடுப்பனவும் வழங்கப்படவில்லை. ஆண்டிமுனை தமிழ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் குழுவில் அரைவாசிப் பங்கினர் (14) தொண்டர் ஆசிரியர்களாவர். அந்த வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவில் கல்வி கற்பிப்போர் சகலரும் தொண்டர் ஆசிரியர்கள். உடப்பு தமிழ் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் குழுவில் கிட்டத்தட்ட அரைப்பங்கினர் தொண்டர் ஆசிரியர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த இரண்டு பாடசாலைகளிலும் சேவை செய்யும் தொண்டர் ஆசிரியர்கள் க.பொ.த.உயர்தரம் அல்லது பட்டதாரி கல்வி தகுதி கொண்டவர்கள்.

க.பொ.த.(உயர்தரம்) வகுப்பு பாடங்களை கூடப் போதிக்கும் இந்த ஆசிரியர்கள் ஆண்டு 2-8 வரை சேவையாற்றி உள்ளனர். இவர்களிடம் 2000க்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

நாடு பூராவும் ஆசிரியர் தட்டுப்பாடு நிலவும் ஒரு நிலைமையில் ஆயிரக் கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் இந்த விதத்தில் சம்பளம் இல்லாது அல்லது சொற்ப சம்பளத்துக்கு அமர்த்தப்பட்டு மோசமான சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த தொண்டர் ஆசிரியர்களாக சேவை செய்யும் இப் பாடசாலை இரண்டையும் சேர்ந்த 29 ஆசிரியர்களையும் உடனடியாக சேவையில் நிரந்தரமாக்கும்படியும் உரிய சம்பள மட்டத்தில் அமர்த்தும் படியும் பிரச்சாரம் ஆரம்பமாகி உள்ளது.

*கொக்கா கோலா தொழிலாளர்கள்:*

# எமக்கு நஷ்டஈடு வேண்டாம்! தொழில் வேண்டும்!

பியகம கொக்கா கோலா தொழிற்சாலையைச் சேர்ந்த 12 அமையத் தொழிலாளர்களின் தொழில் மே 31ம் திகதியில் இருந்து ஒழிக்கப்படும் எனக் கூறும் கடிதங்கள் கம்பனி நிர்வாகத்தினால் தொழிலாளர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. எனினும் இத்தொழிலாளர்களின் தொழில் உரிமை காக்க எந்த விதமான போராட்டத்தையும் நடாத்தாததன் மூலம் சீ.எம்.யூ.வும் மற்றும் தொழிற் சங்கங்களும் நிர்வாகத்தின் நடவடிக்கைக்கு ஆதரவு காட்டிக் கொண்டுள்ளன. இத்தலைமைகள் கொக்கா கோலா கடுவெல பகடரியின் மூடுவிழாவுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட 350 தொழிலாளர்களின் போராட்டத்தை மூன்று மாதங்களுக்கு தனிமைப்படுத்தியதன் பின்னர் மார்ச் 5 திகதி ஒப்பந்தம் என்ற பேரில் செய்து கொண்ட சமரசத்தின் மூலம் காட்டிக் கொடுத்தனர். இந்த காட்டிக் கொடுப்பினால் தமது கரங்களைப் பலப்படுத்திக் கொண்ட நிர்வாகம் முன்னர் தொழில் ஆணையாளருக்கு சமர்ப்பித்த 5 கோரிக்கைகளையும் அமுல் செய்யப் போவதாக அறிவித்துள்ளது.


இது தொடர்பாக எமது நிருபருடன் பேசிய கொக்கா கோலா தொழிலாளி கூறியதாவது: "நான் ஐந்து ஆண்டுகள் சேவை செய்த நிரந்தரத் தொழிலாளி. தொழிற்சங்கத் தலைவர்கள் எமக்கு நஷ்டஈடு வழங்கி எம்மை வெளியே தள்ளப் பார்க்கின்றார்கள். எமக்கு நஷ்டஈடு வேண்டாம்! எமக்கு தொழில் வேண்டும்.! நாம் மூன்று மாதங்கள் வேலைநிறுத்தம் செய்தோம். இறுதியில் அது புஷ்வாணமாகிவிட்டது. இந்த வேலைநிறுத்தம் தோல்வி கண்டது. கடுவெலவை இழுத்து மூட இடமளிக்க மாட்டோம்! என பாலா தம்பு வாயடித்தார். கடுவெலவை மூடினார்கள். ஊழியர்களை வேலை நீக்கம் செய்ய இடமளிக்க மாட்டோம் ! என தம்பு கூறினார். இப்போது செய்வது என்ன? வேலைநிறுத்தக் காலத்திலேயே 180 தொழிலாளர்கள்" சுயமாகவே ஓய்வுபெற்றனர். இன்னும் எஞ்சியிருப்பது 170. அவர்களை வெளியேற்ற பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகின்றது. இன்னும் 12 அமைய தொழிலாளர்களுக்கும் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது." எனவும் அவர் தெரிவித்தார்.

# கிரிக்கட் ரசிகர்களுக்கு பொலிஸ் தாக்குதல்

கெத்தாராமை அரங்கில் பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் பாகிஸ்தான் விளையாட்டு வீரர்களை உத்சாகப்படுத்திய கிரிக்கட் ரசிக்களை பொலிசார் தாக்கினர். ஏப்பிரல் 22ம் திகதி மதிய உணவு இடைவேளைக்கு முன்னர் இந்த பொலிஸ் தாக்குதல் இடம்பெற்றது. இந்த ரசிகர்கள் தமக்கு விருப்பமான விளையாட்டுக் கோஷ்டிக்கு உத்சாகமளிக்க உள்ள ஜனநாயக உரிமைக்கு எதிரான தாக்குதலாக இந்த பொலிஸ் தாக்குதல் இடம்பெற்றது.

பாகிஸ்தான் கொடியை பறித்துக் கிழித்த பொலிசார் "நீங்கள் இலங்கையில் இருந்து கொண்டு பாகிஸ்தானுக்கு ஆதவளிக்கின்றீர்கள்" என திட்டினர். அச்சமயத்தில் அர்ஜூன அவுட் ஆனார். சக்லக் முஷ்டாக்கின் பந்து வீச்சுக்கு அவர் அவுட் ஆனார். அச்சமயம் எம்மில் ஒருவர் "கமோன் சக்லெக்" என்று சப்தமிட்டார். அப்போது பொலிசார் தாக்கத் தொடங்கினர். சிறியவர்களையும் தாக்கினர். நாம் சத்தமிடாது இருந்தோம். பொலிசார் தூஷணத்தில் ஏசினார்கள். பெரிதும் துடித்தால் எம்மைப் பிடித்து றிமாண்டில் தள்ளுவதாக திட்டினார்கள். அப்போது சுமார் 200 பேர் வீட்டுக்குப் போக ஆயத்தமானோம். அப்போது வந்த ஓ.ஐ.சி. இலங்கைக்கு ஆதரவு வழங்குங்கள் என்றார். நாம் இலங்கைக்கு ஆதரவளித்தோம்" என்றார்

வாசியுங்கள்!




இலங்கையில் மார்க்சிச பாரம்பரியங்களுக்கான போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் நூல்

கீர்த்தி பாலசூரிய எழுதியது

விலை ரூபா. 20/-

தொடர்பு:
90 1 வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கல்பிட்டி- நுரைச்சோலை*

# சோசலிச சமத்துவக் கட்சி பிரச்சாரத்துக்கு பிரதேச மக்கள் ஆதரவு

கல்பிட்டி நுரைச்சோலையில் அமைக்கப்பட உள்ள அனல்மின் நிலையத்தினால் ஏற்படவுள்ள பாதிப்புக்கு எதிராக அப்பகுதி மக்கள் போராடிவருகின்றனர். அம்மக்களது காணி, வீடு பாதுகாப்புக்கான அரசியல் வேலைத்திட்டத்தை முன்வைத்து சோசலிச சமத்துவக் கட்சி மேற்கொண்டுள்ள பிரச்சாரத்துக்கு அப்பிரதேச மக்களின் பலத்த ஆதரவு கிடைத்து வருகின்றது.

கடந்த மே மாதத்தில் இடம்பெற்ற இப்பிரச்சார இயக்கத்தில் கலந்து கொண்ட மக்கள் தமது உரிமைகளைக் காக்கவும் அரச பொலிஸ் அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடவும் இணங்கி உள்ளனர். கட்சியின் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளை விலைக்கு வாங்கிய அம்மக்கள் கட்சியைக் கட்டியெழுப்பும் நிதிக்கும் பங்களிப்புச் செய்தனர்.

சோசலிச சமத்துவக் கட்சிப் பிரச்சாரத்தினால் ஈர்க்கப்பட்ட அம்மக்களின் பிரதிநிதி ஒருவர் மே 24ம் திகதி கூட்டப்பட்ட கூட்டத்துக்கு வருகைதரும்படி அழைப்பு விடுத்தார். அதில் சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான டபிள்யூ.ஏ.சுனில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார். அரசசார்பற்ற நிறுவனமான செடெக் அமைப்பைச் சேர்ந்த ஒரு மத குரு இங்கு தலைமை உரை நிகழ்த்தினார்.

அவர் தமது தலைமை உரையில் இதைப் பற்றி மிக நன்றாக விளக்க என்னை விட சோ.ச.க.வினருக்கே முடியும். அவர் அடுத்து உங்களுக்கு உரை நிகழ்த்துவார் எனக் குறிப்பிட்டார். தோழர். சுனில் உரையாற்றுகையில் சோ.ச.க. சோமசிரி கொலையை வன்மையாகக் கண்டனம் செய்வதாகவும் ஆளும் வர்க்கம் இந்நாட்டில் அமுல்படுத்தி வரும் தனியார்மயமாக்கம் பன்னாட்டுக் கம்பனிகளின் வேலைத்திட்டத்தின் ஒரு பாகமே இம்மக்களின் உரிமைக்கெதிரான தாக்குதல் என்றும் கூறினார். பன்னாட்டுக் கம்பனிகளின் அவசியங்களுக்கு ஏற்ப நிலைமைகளைச் சிருஷ்டிப்பதே அரசாங்கத்தின் தேவையாகும். இதற்காக தொழிலாளர் போராட்டங்களை நசுக்கி, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை நசுக்கித் தள்ளும் வேலைத்திட்டத்தைக் கையாள்கின்றது. அரசாங்கத்துக்கு நிர்ப்பந்தம் கொடுப்பதன் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுவிடமுடியாது. இந்த அனல்மின் நிலையம் தீட்டும் திட்டம் இலாபம் சுருட்டிக் கொள்ளும் அவசியத்தினால் ஏற்பட்டதால் பொதுமக்களுக்கு ஏற்படும் கஷ்டநஷ்டங்கள் பற்றி ஆராய்ந்து தீர்வு வழங்க முதலாளித்துவ வர்க்கத்தினால் முடியாது. இது பொதுமக்களின் தேவைக்கான தயாரிப்புடன் செய்யப்படும் ஒரு வேலைத்திட்டம் அல்ல. ஆதலால் இரசாயன திரவியங்கள் உடலில் புகுவதற்கும் தொழிலாளர்கள் நோய் வாய்ப்படவும் சூழல் மாசு அடைவதற்கும் அது மரணம் வரை வளர்ச்சி காணவும் ஆபத்து இருந்து கொண்டுள்ளதையும் சுனில் தமது பேச்சில் விளக்கிக் காட்டினார். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் பாதுகாப்புக் குழுக்களை நிறுவி தமது பாதுகாப்பை சிருஷ்டிக்க வேண்டும். முதலாளி வர்க்கத்தில் இருந்தும் சந்தர்ப்பவாத அமைப்புக்களில் இருந்தும் சுயாதீனமான முறையில் இப்போராட்டம் இடம்பெற்றாக வேண்டும். அதற்காக சோ.ச.க.இப்பகுதி மக்களுக்கு சோசலிச வேலைத்திட்டத்தை முன்வைக்கவும் அவர்களுடன் ஒருங்கிணைந்து போராடவும் ஆயத்தமாக உள்ளதையும் தோழர். சுனில் சுட்டிக்காட்டினார்.



*கல்பிட்டி கூட்டத்தில் சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் டபிள்யூ.ஏ. சுனில் உரைநிகழ்த்துகின்றார்.*

தோழர். சுனிலின் பேச்சினை அரை மணித்தியாலத்துக்கு மேலாக ஆழ்ந்து அவதானித்த கூட்டத்தினர் உரையின் இறுதியில் பலத்த கரகோசம் செய்து வரவேற்றனர். இது கூட்டத்தினரைக திசைதிருப்ப முயற்சித்த ஒரு சிலருக்கு நல்ல பதிலடியாக அமைந்தது. எமது கடந்த தொழிலாளர் பாதை இதழில் நாம் இந்த அனல் மின் நிலையத்துக்கு எதிராக அமைதியான போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது இராணுவத்தினரும் பொலிசாரும் நடாத்திய தாக்குதலில் சோமசிரி கொல்லப்பட்டதை அறிக்கை செய்திருந்தோம். இவரின் மரணத்தைத் தொடர்ந்து எதித்தர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட சோமசிரியின் மனைவிக்கு எதிராக குண்டர்களாலும் பொலிசாராலும் கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

# சுதந்திர வர்த்தக வலயம்: அன்சன் லங்கா பெண் தொழிலாளி இறந்தது எப்படி?

பியகமை சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த அன்சல் லங்கா குறூப்பில் சேவை செய்த தொழிலாளியான ரணசிங்க ஆராச்சிலாகே தயாவதி(36 வயது) 1997 பெப்ரவரி 3ம் திகதி கொழும்பு பெரியாஸ்பத்திரியில் காலமானார். இந்த ஆண்டினுள் இந்நிறுவனத்தைச் சேர்ந்த மூன்று ஊழியர் மரணமாகி உள்ளனர். இந்த நிறுவனம் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ட்ரான்ஸ்நஷனல் கம்பனியான பசுபிக் டன்லொப் கம்பனிகுச் சொந்தமானது. இந்நிறுவனத்தினுள் நச்சுத் தன்மை கொண்ட இரசாயன திரவியங்கள் கவலையீனமான முறையில் கையாளப்படுவதாகவும் தொழிலாளர்கள் ஆபத்தான நோய்களுக்கு உள்ளாகுவதாகவும் 1993ல் புரட்சிக் கம்யூன்ஸ்ட் கழகம் இந்த சு.வ.வ.ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை ஆராய்ந்து அறியும் பொருட்டு நிறுவிய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி அறிக்கை நிலைநாட்டியது. இக்கமிட்டி சு.வ.வ.த்தின் மற்றோர் நிறுவனமான கொரியா சிலோன் நிறுவனத்தில் மரணமான பிரேமலால் ஜெயக்கொடி என்ற தொழிலாளியின் மரணம் சம்பந்தமாக நடாத்திய விசாரணையில் இதை நிலைநாட்டியது.

தயாவதியின் மரணம் சம்பந்தமாக சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியின் தலைவியான விலானி பீரிசுடன் பேசிய அவரின் தந்தையார் ஆர்.ஏ.வில்லியம் சிங்கோ பின்வருமாறு குறிப்பிட்டார்: "முதலில் மூளையில் கட்டி ஏற்பட்டது. நச்சுத்தன்மை உடலில் ஊடுருவியதாலேயே அவர் இறந்துள்ளார். இது சம்பந்தமாக சரியான விபரங்களை தயாவதியின் தங்கையே கூற முடியும்" என அவர் குறிப்பிட்டார். அன்சல் லங்கா நிறுவனத்தினுள் தொழிலாளர்களின் உடலில் நஞ்சு கலப்பதை கம்பனி அதிகாரிகள் மூடிமறைப்பதாக தந்தை மேலும் தெரிவித்தார். அவர் இந்த மகளின் மரணம் சம்பந்தமாக மேலும் கூறுகையில் குறிப்பிட்டதாவது: மரணத்தின் பின்னர் இந்த நிறுவன தொழிலாளர்களுக்கு ரூபா.30000 கொடுக்க வேண்டும். அதையும் கொடுக்காமல் எனக்கு நிர்வர்கிகள் ரூபா.7000 மட்டுமே கொடுத்தனர். நான் அதை ஏற்கவில்லை. இரண்டு மணித்தியாலத்துக்குள் ரூபா.30000 கொணர்ந்து கொடுத்தார்கள்" என வில்லியம் சிங்கோ தெரிவித்தார்.

தயாவதி இந்த நிறுவனத்தில் சேவைக்கு சேர்ந்து ஐந்து ஆண்டுகள் ஆகுவதாகவும் அதற்கு முன்னர் அவர் வெகு ஆரோக்கியமாக இருந்ததாகவும் அவரின் சகோதரியான எஸ்.ரணசிங்க தெரிவித்தார்." 1996 அக்டோபர் 20ம் திகதி அக்கா மூச்சு எடுக்கக் கஷ்டமாக இருப்பதாக நிர்வாகிகளுக்குத் தெரிவித்ததைக் காட்டி அவர்கள் பெரியாஸ்பத்திரியின் டாக்டர்.பராக்கிரம திசாநாயக்கவுக்கு எழுதிய கடிதம் உள்ளது. முதலில் சளியுடன் இரத்தம் வெளியேறியது. பின்னர் வலதுகால் வீங்கியது. பாதுக்கை சந்தியில் உள்ள டாக்டர்களிடம் பணம் செலுத்தி மருந்து எடுத்தோம்." எனவும் அவரின் சகோதரி தெரிவித்தார்.

நச்சு இர்சாயனங்கள் உடலில் ஊடுருவுவதற்கு மேலாக அன்சல் லங்கா தொழிலாளர்கள் அதிகம் களைப்படைந்தும் காணப்பட்டனர். சுதந்திர வர்த்தக வலயத்தில் 5 ஆண்டுகள் வேலைசெய்த தொழிலாளி வாழ்நாள் பூராவும் நோயாளியாகுவதாக நடாத்திய ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. அன்சல் லங்கா நிறுவனத்தினுள் தொழிலாளர்களின் உடலில் ஊடுருவும் நச்சு இரசாயனத் திரவியங்களின் தன்மையைப் பற்றி 1993ல் நடாத்திய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி அறிக்கை அம்பலப்படுத்தியது. இந்த நச்சு உடலில் ஊடுருவுவதன் தாக்கம் காரணமாக பக்டரித் தொழிலாளர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் கூட வலதுகுறைந்தவர்களாகப் பிறப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.





சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.